அகத்தியர்

கன்மகாண்டம் 300

22/நூ-தொ6/கன்ம3

அகத்தியர் கன்ம காண்டம்

பாகம் 68

அருள்மிகு

பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழு

1976

வெளியீட்டுத் தொடர் எண் : 33

அகத்தியர்

கன்மகாண்டம் 300

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழுவினருக்காக

கௌரவத் தலைவர்

டாக்டர் இரா. தியாகராசன், எல். ஐ. எம்.,
அவர்களால் பதிப்பிக்கப் பெற்று

தமிழ்நாடு அரசுக்கு
நன்கொடையாக அளிக்கப்பெற்றது.

கி.பி. 1976. விலை ரூ. 3-00

முதற் பதிப்பு: 1901

இரண்டாம் பதிப்பு: 1976

உரிமை :

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக்குழு,
இந்திய மருத்துவத்துறை இயக்குநர் அலுவலகம்,
சென்னை-600029.

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி
சுவாமி திருக்கோயில்
அறங்காவலர் குழு

திரு. கு. சின்னப்பன், அறங்காவலர் குழுத் தலைவர்

திரு. அ. தமிழரசு	அறங்காவலர்
திரு. இரா. சின்னதுரை	,,
திரு. புலவர் சி. பழனிச்சாமி, எம். எல். ஏ.	,,
திரு. ஏ. பச்சையப்ப கவுண்டர்	,,

சி. எஸ். தீனதயாளு, பி. எஸ்ஸி. பி. எல்.,
துணை ஆணையர்—நிர்வாக அதிகாரி

அச்சிட்டோர் :

எரியீட்டி அச்சகம்,
32 / 1, முருகப்ப முதலித் தெரு,
சென்னை-600 007.
தொலைபேசி எண் : 664767.

அருள்மிகு

பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழு

டாக்டர் இரா. தியாகராசன், எல். ஐ. எம்.,
பொறுப்பு அலுவலர்,
சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம்,
சென்னை-600029. ...தலைவர்

டாக்டர் ஆ. ஆனந்தகுமார், ஜி. சி. ஐ. எம்,
தலைவர், இந்திய மருத்துவ
மத்திய கழகம், சென்னை-600005. ...பொருளாளர்

திரு. கு. சின்னப்பன், தலைவர், அறங்காவலர் குழு,
அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி. ...உறுப்பினர்

டாக்டர் ப. சிற்சபை, ஆர். ஐ. எம். பி.,
துணைத்தலைவர்,
இந்திய மருத்துவ மத்திய கழகம். ...உறுப்பினர்

திரு. சி. எஸ். தீனதயாளு, பி. எஸ்ஸி, பி. எல்.
நிர்வாக அதிகாரி, அருள்மிகு பழநி
தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி, ...உறுப்பினர்

டாக்டர். பு. மு. வேணுகோபால், எச். பி. ஐ. எம்.
இந்திய மருத்துவத்துறை இயக்குநர், சிறப்பு
சென்னை-600029. ...அழைப்பினர்

சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழு

உறுப்பினர்கள்

1. டாக்டர் இரா. தியாகராசன், எல். ஐ. எம்., பொறுப்பலுவலர், சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம், சென்னை-600029. ...தலைவர்
2. டாக்டர் பு. மு. வேணுகோபால், எச் பி. ஐ. எம்., இந்திய மருத்துவத்துறை இயக்குநர், சென்னை-600029. உறுப்பினர் செயலர்
3. டாக்டர் சி. எஸ். உத்தமராயன், எச். பி. ஐ. எம்., முன்னாள் இந்திய மருத்துவத்துறை இயக்குநர், சென்னை-600005. உறுப்பினர்

4. டாக்டர் எம் சண்முகவேலு, எச். பி. ஐ. எம்.,
முன்னாள் மருத்துவப் பேராசிரியர்,
இராமநாதபுரம். உறுப்பினர்

5. டாக்டர்கே. இராதாகிருஷ்ணன், எல். ஐ. எம்.,
ஒய்வு பெற்ற மருத்துவ அலுவலர், ஊராட்சி ஒன்றிய
மருந்தகம், காவேரிப்பாக்கம், வடஆர்க்காடு. ,,

6. டாக்டர் எ. சிறில் ஹென்றி, எல். ஐ. எம்.,
ஓய்வுபெற்ற மருத்துவ அலுவலர்,
நகராட்சி மருந்தகம், திருச்சி. ,,

7. டாக்டர் ஆ. ஆனந்தகுமார், ஜி. சி. ஐ. எம்.,
தலைவர், இந்திய மருத்துவ
மத்திய கழகம், சென்னை-600005. ,,

8. டாக்டர் ப. சிற்சபை, ஆர். ஐ. எம். பி.,
துணைத்தலைவர்,
இந்திய மருத்துவ மத்திய கழகம். ,,

9. பண்டித பெ. முத்துக்கருப்பப் பிள்ளை, ஆர். ஐ. எம். பி.,
தலைவர், சித்த மருத்துவ சங்கம், மதுரை, ,,

10. டாக்டர் டி. வி. கல்யாணசுந்தரம், ஆர். ஐ. எம். பி,,
தலைவர், சென்டிரல் சித்தா மெடிகல் கவுன்சில்,
சென்னை-600012. ,,

11. டாக்டர் என். சேது ரகுநாதன், தமிழ்ப்பேராசிரியர்,
விருதுநகர். ,,

12. திரு. நீ. கந்தசாமிப்பிள்ளை,
முன்னாள் செயலர், சரசுவதி மகால் நூலகம்,
சென்னை-600020 ,,

சிறப்பு அழைப்பினர்கள்

1. டாக்டர் பொன். குருசிரோன்மணி, பி. ஏ., ஜி. சி. ஐ. எம்.,
முதல்வர், அரசினர் இந்திய மருத்துவக்கல்லூரி,
பாளையங்கோட்டை.

2. டாக்டர் மு. வே. ரமணன், எல். ஐ. எம்.,
பேராசிரியர், மேல் பட்டப் படிப்பு,
அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை.

3. டாக்டர் டி. வி. சுப்பாரெட்டி, கௌரவ இயக்குநர்,
இந்திய மருத்துவ வரலாற்று ஆராய்ச்சி நிலையம், ஐதராபாத்.

4. டாக்டர் இரத்தினவேலுசுப்பிரமணியம், பி. எஸ்ஸி.,
எம். டி., எம். ஆர். சி. பி. (லண்டன்), சென்னை-600010.

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
மாண்புமிகு
பேராசிரியர் க. அன்பழகன், எம். ஏ., அவர்களின்

அணிந்துரை

முன்தோன்றிய—மூவா முதன்மொழியாம் தமிழுடனும் அதன் நாகரிகத்துடனும் பிறந்து வளர்ந்த—சித்த மருத்துவத்தின் தன்மையும் மேன்மையும் உலகம் என்றும் இழந்து விடாது காப்பது நம் கடன். தமிழகத்திலும் பிறதென் மாநிலங்களான திராவிடத்திலும்சித்த மருத்துவம் இன்றும் பலரால் — வழிவழியாகவும்—கற்றறிந்தும்—கையாளப்பட்டு வரினும் அதன் சிறப்பும் புகழும் நிலைபெறுவதற்கு நாம் ஆற்றவேண்டிய பணிகள் பலவாகும். தமிழக அரசின் ஆதரவாலும்—இத்துறை வல்லுநர்களின் முயற்சியாலும்—மருத்துவ முறைகளுள் சித்த மருத்துவமும். இடம் பெற்று வருகிறது. எனினும் அதன் தனிச் சிறப்புகள் அறிவியல் ஆய்வாளர்கள் ஒப்புக் கொள்ளுமாறு ஆய்வுகள் மூலம் நிலை நிறுத்தப்பட்டாக வேண்டும் என்பதை நாம் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். அந்த நிலை உருவாவதற்கு—ஓலைச் சுவடிகளாகவும் ஒருகாலத்தில் அச்சேறியும் இன்று கிடைத்தற்கரிதாகவும் உள்ள நூற்றுக்கணக்கான சித்த மருத்துவ நூல்கள்—உடனடியாகப் பதிப்பிக்கப்படல் வேண்டும். இவை வெளிவந்தால்தான், இன்று சித்த மருத்துவம் பயிலும் மாணவரும், இளம் மருத்துவரும் அவற்றைப் பயின்று பயன்பெற இயலும். மருந்து செய்முறைகளை ஒப்பு நோக்கி உண்மை தெளியவும், மருந்துகளின் தரத்தை உறுதிப்படுத்தவும், அரிய மூலப் பொருள்கள் கிட்டாத விடத்து மாற்று மூலப்பொருள்களைக் கொண்டு மருந்து செய்திடவும், மருந்து உற்பத்தியைப் பல மடங்காகப் பெருக்கி மக்களுக்குப் பரவலாகக் கிடைக்கச் செய்யவும் வாய்ப்பாகும்; பரவலாக எங்கும் எளிதில்

கிடைப்பதால் செல்வாக்குப் பெற்றுள்ள அலோபதி மருந்துகட்கு ஈடு கொடுத்து மக்களிடம் செல்வாக்குப் பெறவும் முடியும்.

எனவே, சித்த மருத்துவ நூல்கள் வெளியிடும் முயற்சிக்குத் தகுந்த நிதி உதவி வேண்டும் என்னும் எனது வேண்டுகோளை இசைவுடன் ஏற்று அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவல் குழுவினரும்—அதன் முன்னாள் தலைவர் திரு. பு. மனோகரன் அவர்களும்—இதற்காக இரண்டு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்க முன்வந்ததுடன், சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்கென டாக்டர். இரா. தியாகராஜன், எல். ஐ. எம். அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவையும் அமைத்துச் செயல்படுத்தலாயினர்.

இக் குழுவின் தலைவரும் உறுப்பினர்களும் ஆர்வத்துடன் ஈடுபட்டுஆற்றிவரும் நற்பணியும்—பல்வேறுவகையிலும் அவர்கட்குத் துணை நிற்போர் ஆற்றும் பணியும்—இந்திய மருத்துவத்துறை இயக்குநர் டாக்டர். பு. மு. வேணுகோபால் அவர்களின் இயக்குவித்திடும் திறனும் எனது பாராட்டுக்குரியனவாகும்.

அருள்மிகு பழநி திருக்கோயில் அறங்காவலர் குழுவினருக்கும் அக் குழுவின் தலைவருக்கும் எனது நன்றியும் பாராட்டும் உரியனவாகும்.

இந்த வெளியீட்டுக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பெற்ற 33 ஆம் வெளியீடான நூலே அகத்தியர் கன்மகாண்டம். இந் நூல் வெளிவருவது மிகுந்த பயன் தரவல்லதாகும்.

'மிகக்கொடிய நோய்களையும், அறத்தீர்க்கும்பற்பம் செந்தூரமாகிய முறைகள், நமது நாட்டு மருத்துவத்தில் இருப்பது போல மற்ற மருத்துவத்தில் இல்லையென' நமது மருத்துவ நூல் பயிற்சியுள்ள ஐரோப்பிய மருத்துவர்கள் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கிறார்கள். ஆங்கில மருத்துவம், நாட்டு மருத்துவம் ஆகிய இரண்டிலும் சிறப்புள்ளவர்களான சிறந்த பண்டிதர்களின் தீர்மானமாவது:

"அறுவை செய்தல் முதலிய இரண மருத்துவத்தில் ஆங்கில முறை வைத்தியம் மிகவும் மேலானது. மற்ற நோய்களின் மருத்துவத்தில் தற்கால சாந்தியாகச் செய்வதிலும் ஆங்கில வைத்தியமே அதிகம் சிறந்தது;

ஆனால், நாட்பட்ட நோய்களையும், பெரிய நோய்களான குன்மம், நீரிழிவு, சயம், எருவாய்நோய், பாண்டு, மந்தாக்கினி, மேகம், தாது இழப்பு முதலிய கடின நோய்களையும் அறத்தீர்ப்பதற்கு நாட்டு மருத்துவ முறைகளே மிக மேன்மையானவை. அவற்றுள்ளும் முறைக் கிரமமாகச் செய்யப்பட்ட பற்ப, செந்தூரங்களே மேன்மை பெற்றவை'' என்பதே.

இந்த அபிப்பிராயமானது மிகவும் சரியானதெனவும் உத்தமமானதெனவும் அதிகம் வாய்மையானதெனவும் சிறந்த மருத்துவர்களான ஒவ்வொருவரும் முழுமனதோடு ஏற்றுக் கொள்வார்கள்.

இக்கூற்று உண்மையாவதை, நவீன கருவிகள் வளர்ச்சியால் ஆலென வளர்ந்து அடர்ந்து நிற்கும் அலோபதி மருத்துவமும் ஏற்கும் வண்ணம் நடைமுறையில் செயல்படுத்தி எண்பிக்கும் வல்லமையும், ஆராய்ச்சி முறையில் சான்றுகளை உருவாக்கும் முயற்சியும் ஓங்க வேண்டும் என்பதே எனது பேரவா.

இந்த நூல்களின் வெளியீடு மேலும் பல நூல்களை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோரை ஊக்கப்படுத்துவதற்குத் துணை செய்வதாகும் என நம்புகிறேன். அவர் தம் முயற்சி வளர வாழ்த்துகின்றேன்.

சென்னை
28–10–197?. } க. அன்பழகன்

முன்னுரை

உலக மொழிகளில் மிகப் பழமையானது தமிழ் மொழி; தமிழ் மருத்துவ முறையும் அத்தகைத்தே. இம் மருத்துவ முறையைத் தோற்றுவித்தவர் சித்தர்கள் எனப்படுவர். ஆகையால், இம் மருத்துவத்திற்குச் சித்த மருத்துவமென்று பெயர் அமையலாயிற்று. அச் சான்றோர்கள் தாம் கண்ட உண்மைகளையும் மருத்துவ நுணுக்கங்களையும் மருந்துச் சரக்குகளின் குணம் முதலானவைகளையும் மாணவர்கள் பலரை ஏற்று ஓதியும் ஓதுவித்தும், பற்பல ஏடுகளில் பதிவு செய்தும் உலகோர்க்கு உதவி செய்து தம் மருத்துவ முறைகளைப் பரப்பி வந்தார்கள்.

காலப்போக்கில், சிறிது சிறிதாய் இயற்கையின்—நிலநடுக்கம், கடற்கோள் போன்ற-சீற்றம் காரணமாகவும், வெளிநாட்டார் படையெடுப்பு, சிதலை, இராமபாணம் போன்றவைகளின் தாக்குதலாலும் பல ஏடுகள் அழிந்தவை போக மிகுந்தவைகளில் சில மேலை நாட்டு நூல் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன வெனக் கூறப்படுகின்றது. இன்னும் எஞ்சியுள்ள ஏடுகளாலும், அம் மருத்துவக் கலையைத் தொன்றுதொட்டுக் கையாண்டுவரும் மருத்துவர்கள் வாயிலாகவும், பல நூற்றாண்டுகளாக அதன் அடிப்படை உண்மை, தனித்தன்மை காரணமாகவும் சித்த மருத்துவம் அழியாது நிலைபெற்றிருக்கிறது.

தஞ்சையையாண்ட மராட்டிய மன்னர் சரபோஜி அவர்களின் ஆட்சிக் காலத்தில் சித்த, ஆயுர்வேத, யூனானி மருத்துவ ஏடுகள் எல்லாம் சரசுவதி மகால் நூல் நிலையத்தில் அரியணை ஏறின. மருத்துவப் புலவர்களின் அனுபவங்கள் ஏடுகளில் ஏறி ஏமமுற்றன. மருத்துவம் செய்முறையும் பிணித் தீர்வும் அவர் ஏற்படுத்திய தன்வந்திரி மகாலில் மறுமலர்ச்சியுற்றன. அவர் ஆட்சிக்குப்பின் சித்த மருத்துவம் அரசு ஆதரவை இழந்து பழையபடி குடிமக்களின் ஆதரவு கொண்டு ஆங்காங்கு வழக்கில் இருந்துவரலாயிற்று.

மிக அண்மையில், வெள்ளையராட்சிக் காலத்தில் நீதிக்கட்சி சார்பில் முதல் அமைச்சராகப் பணியாற்றிய பானகல் அரசர் 1924-ல் இந்திய மருத்துவப் பள்ளியைத் தோற்றுவித்து, பல கிராம மருத்துவ மனைகளை அமைத்து இயங்கச் செய்து சித்த மருத்துவம் முதலான இந்திய மருத்துவ முறைகளின் மறு

மலர்ச்சிக்கு வித்தூன்றினர். அக் காலத்தில் மேற்படி கல்வி நிலையத்தில் பயிலும் மாணவர்களுக்கு அமைந்த பாடத்திட்டப் படி கற்பிக்கப் போதிய பாடப் புத்தகங்களும், முதல் (மூல) நூல் களும் இல்லாக்குறையை ஓர்ந்து பாடப் புத்தக ஆக்கக்குழுவை அரசு அமைத்தது. அந்நாள் சித்த மருத்துவத்துறைத் தலைமை ஆசிரியராய் இருந்த பண்டித, வைத்திய ரத்தினம், மருத்துவ சிரோன்மணி காலஞ்சென்ற க. ச. முருகேச முதலியார் அவர்கள் குணபாடம் (மூலிகை வகுப்பு) என்னும் நூலைத் தம் சொந்த முயற்சியால் இயற்றி அரசினர்க்கு நன்கொடையாக அளித்து வெளியிடச் செய்தும், குழுவினர் அரசுவழி வெளியிட்ட நஞ்சுநூல், பாலவாகடம் என்னும் நூல்களைப் பார்வையிட்டும் உதவினர். அக் குழுவினர் நூற்றுக்கும் மேற்பட்ட மருத்துவச் சுவடி களையும், அச்சிட்ட நூல்களையும் சேகரித்து ஒரு நூல் நிலையம் ஏற் படுத்தினர்.

மேற்படி பள்ளி, கல்லூரியாக மிளிர்ந்தபோது, அந்நாள் கௌரவ இந்திய மருத்துவ இயக்குநராகப் பணியாற்றிய டாக்டர் ம. ரா. குருசுவாமி முதலியார் ஊக்கம் கொடுத்தமை காரணமாக 1950-ல் சித்த மருத்துவம், மருத்துவாங்கச் சுருக்கம், நோயில்லா நெறி, குணபாடம் (மூலிகை வகுப்பு), குணபாடம் (தாது சீவ வகுப்பு) என்ற நூல்களை அப்போது பணிபுரிந்து வந்த கல்லூரி விரிவுரையாளர்களைக் கொண்டு எழுதுவித்து அரசுவழி வெளியிடப்பெற்றன.

அக் கல்லூரி நிகழ்ந்த காலத்திலும் பின்னர்ப் பாளையங் கோட்டைக் கல்லூரி தோன்றிய பின்னுங்கூட, பாட நூல்களும் துணை நூல்களும் நிரம்பாமை பெருங்குறையாக நீடித்து வருவ தாயிற்று.

ஆகவே, பண்டைய சித்த மருத்துவ ஓலைச் சுவடிகளையும், கையேடுகளையும், ஒருமுறை அச்சாகிப் பின் விற்பனைக்குக் கிட்டாத புத்தகங்களையும் சேகரிக்கவும், மருந்து செய்முறை அட்டவணை தயாரிக்கவும், பாடநூல்கள் வெளியிடவும் ஆகிய பணிகள் செய்ய (Pharmacopea Committee, 1966, G.O. M.S. 2163, Dt. 23-8-60) ஒரு குழுவும் சித்த மருத்துவக் கல்வி மற்றும் பாட நூற்குழு என்று (G.O. M.S. No. 1060 Health, Dt. 13-6-66) ஒரு குழுவும், திருவருட்பா, திருப்புகழ் முதலியவைகளில் உள்ள மருத்துவப் பகுதிகளை ஆய்வதற்காக ஒரு குழுவும் எனத் தமிழக அரசு குழுக்களை ஏற்படுத்தியது. அதன் விளைவாக அறுவை மருத்துவம், சூல் மருத்துவம் என்ற நூல்கள் வெளிவந்தன.

மீண்டும் விரைவில் பயன்காண வேண்டி 1973-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15ஆம் நாள் தமிழக அரசினர் மேற்கூறிய குழுக்களை ஒருங்கிணைத்துச் சித்த மருத்துவ அறிவியல் வளர்சசிக்குழு என்னும் ஒரு குழுவைத் (G.O.M.S. No. 2571 of 23—10—3) தோற்றுவித்தார்கள். அக் குழுவின் பணிகளாவன: சித்த மருத்துவ அரிய சுவடிகள். கையேடுகள், அச்சாகிய பழைய நூல்கள் ஆகியவைகளைச் சேகரித்துப் பாதுகாத்தல்; ஓலைச்சுவடிகளை ஆய்ந்து கையெழுத்துப்படி, தட்டெழுத்துப்படி முதலியவைகளை எடுத்து அச்சியற்றி வெளியிடல்; ஒருமுறை அச்சில் வெளிவந்து விற்பனைக்குக் கிடைக்கப் பெறாத நூல்களை மீண்டும் அச்சியற்றி வெளியிடல்; இதுவரை அச்சிடப்பெறாத நூல்களை வெளியிடல் என்பனவாம். அதன்படி இக் குழுவினர் இதுவரை 400 சுவடிகளையும், 100 கையெழுத்துப்படிகளையும், 230 அச்சான பழைய நூல்களையும் சேகரித்துள்ளனர்.

இக் குழுவினர் தாம் மேற்கொண்ட பணிகளைச் செயலாற்ற, இந்திய மருத்துவத்துறை இயக்குநர் அலுவலகத்தில் ஒரு தனி அலுவலரையும், அவர்க்கு உதவியாளர்களையும் நியமித்துள்ளனர். அவர்கள் நூல்களைப் படியெடுத்துத் திருத்தம் செய்து அச்சியற்றத் தக்க வகையில் செய்துவருகின்றனர்.

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்கென்று ஒதுக்கப்பட்ட இரண்டு இலட்சம் ரூபாயைக் கொண்டு மேற்படி நூல்களை நடைமுறைச் சிக்கல்களைத் தவிர்த்து வெகுவிரைவில் வெளியிட மேற்படி சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழுவிலுள்ள உறுப்பினர் சிலருடன், அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர்க்குழுத் தலைவர் அவர்களையும், மேற்படி திருக்கோயில் நிருவாக அதிகாரியையும் கொண்டு அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்குழு ஏற்படுத்தப்பட்டது. அக் குழு முடிவெடுத்தபடி முதல் வெளியீட்டு வரிசையில் 33-வது எண்ணுள்ள இந்நூல் அகத்தியார் கன்மகாண்டம் எனப் பெறும்.

மேற்கண்ட அரிய நூலின் வெளியீட்டுப் பணிக்குப் பெருந்தொகை தேவைப்படுவதால், இப் பெரும் பணியை விரைவில் செயல்படுத்த உளங்கொண்ட நம் தமிழக அரசின் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் உயர்திரு. க. அன்பழகன், எம். ஏ. அவர்கள் பேரார்வங் கொண்டு மேற்படி பணிமுட்டின்றி

முடிவதற்கு அரசு நிதியிலிருந்து ஆண்டொன்றுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் வழங்க ஆணை பிறப்பித்தார்.

'மேலும்', அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர்குழு முன்னாள் தலைவர் உயர்திரு பு.மனோகரன் அவர்களைக் கொண்டு முதல் தவணையாக மேற்படி திருக்கோயில் கருவூலநிதியிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாயை ஒதுக்கி வழங்கச் செய்தமையும், சித்தமருத்துவ நூல்கள்விரைவில் வெளியாகவாய்ப் புத்தேடித் தந்தமையும், காலஞ்சென்ற திரு. டாக்டர் ஜி. டி. நாயுடு அவர்களைக் கொண்டு காலஞ்சென்ற திரு. டி. வி. சாம்பசிவம் பிள்ளையவர்கள் தொகுத்து வைத்திருந்த மருத்துவப் பேரகராதியின் முதல் மூன்று பகுதிகளையும் பிற சித்த மருத்துவ இலக்கியங்களையும் அச்சிட்டு வெளியிடச் செய்தமையும் அமைச்சர் பெருமகனார் சித்த மருத்துவ மறுமலர்ச்சிக்கு முழுமனத்துடன் ஆற்றி வரும் செயற்கரிய ஆக்கச்செயல்களாகக் கூறிப் பெருமிதமடையலாம். இதற்குத் தமிழகம் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

அருள்மிகுபழநிதண்டாயுதபாணி திருக்கோயில் அறங்காவலர் குழுவின் முன்னாள் தலைவர் உயர்திரு. பு. மனோகரன் அவர்கள் தமக்குள்ள பற்பல அறப்பணிகளுக்கிடையேயும் இக் குழுவின் கூட்டங்களில் பங்கு கொண்டு, நூல் வெளியீட்டுக்கான பற்பல வழிமுறைகளையும், ஆலோசனைகளையும் வழங்கி, வெளியீட்டுப் பணி ஊக்கமும் ஆக்கமும் பெற்றுத் தங்குதடையின்றி நூல்கள் வெளிவர, மேற்படி திருக்கோயில் நிதியிலிருந்து மேற்படி அறங்காவலர் குழுவினரைக் கொண்டு முதல் தவணையாக இரண்டு இலட்ச ரூபாய் வழங்கச் செய்ததோடு, சித்த மருத்துவக் கல்லூரி ஒன்று பழநியில் தோற்றுவிக்க உடன்பட்டமைக்கும், சென்னையில் மத்திய சித்த மருத்துவ நூலக மொன்றை நிறுவக் கட்டடம் கட்டித்தர முயன்றமைக்கும் இக் குழுவினரும், இதில் பணியாற்றி வருபவர்களும் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர் ஆவார்கள்.

மேற்படி அறங்காவலர் குழுத்தலைவர் அவர்களுக்கு உறு துணையாக இருந்து ஒத்துழைத்து வரும் மேற்படி திருக்கோயில் நிருவாக அதிகாரி அவர்களுக்கும், இப் பணிகள் நிறைவுபெற ஆக்கிய தீர்மானங்களுக்கு ஒப்புதல் அளித்து வரும் இந்து சமய அறநிலையப் பாதுகாப்புக் குழுத் தலைவர் உயர்திரு, கே. எஸ். நரசிம்மன் ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும் இக் குழுவினரின் உளங் கனிந்த நன்றி உரித்தாகுக.

இக் குழுவினர் பணியாற்றுவதற்கு ஏற்ற இடவசதியும், பிற வசதிகளும் தம் அலுவலகத்தின் ஒரு பகுதியில் கொடுத்து, பணி இடையீடின்றி நடைபெற வேண்டிய ஆலோசனைகளும், ஊக்கமும் அளித்துவரும் இந்திய மருத்துவத்துறை இயக்குநர் டாக்டர் பு. மு. வேணுகோபால், எச். பி. ஐ. எம்., அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அச்சடிக்கும் தாள்கள் அடக்க விலையில், திருவாளர்கள் சேஷசாயி பேப்பர் மில்சாரிடமிருந்து மிக விரைவில் கிடைக்கும்படி செய்த முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களுக்கு இக் குழு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது.

மற்றும் இந் நூல்களை அச்சியற்ற ஏற்றவண்ணம் மூலப்படிகளைத் திருத்தம் செய்வித்தும், கருத்துரைகள் தந்தும் இக் குழுவுக்குத் துணை புரிந்துவரும் தனி அலுவலர் டாக்டர் வி. விசுவநாதன், எல். ஐ. எம். அவர்களையும், அன்னாருக்குத் துணைபுரிந்துவரும் டாக்டர் மு. சௌரிராசன், புலவர்கள் வை. முரு. முத்துக்குமாரசாமி, நா. மு. மாணிக்கம், வி. செ. விநாயகம், தா. சிங்காரவேலு ஆகியவர்களையும் இக்குழு மனமுவந்து பாராட்டுகிறது.

இந் நூலைக் குறுகிய காலத்தில் அழகிய முறையில் அச்சியற்றிய எரியீட்டி அச்சகத்தாரின் சேவைக்கு இக் குழு மனமுவந்து பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

சான்றோர் நிறைந்த இவ்வுலகு இந்நூலிற் காணும் குற்றங் கண்டு முனியாது பொறுப்பதோடு காணுங் குறைகளை அருள் கூர்ந்து தெரிவித்து அடுத்த பதிப்புகளில் அக்குறைகள் களைய உதவுதல் நற்கடனும் எனக் கூறி இந்நூலினை வெளியிடுகின்றனம்.

டாக்டர் இரா. தியாகராசன், எல். ஐ. எம்.,
தலைவர்,
அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்குழு

இந்திய மருத்துவத்துறை
இயக்குநர் அலுவலகம்,
சென்னை-600029.

உள்ளுறை

	பக்கம்
அண்டத் தைலம் ...	29
அப்பிரகச் செந்தூரம் ...	8
அயச் செந்தூரம் ...	15
அரப்பொடிச் செந்தூரம் ...	58
அவிழ்தவகை	18, 19, 22, 24, 25, 31, 33, 34, 38, 40, 45
ஆனந்தவாயு கன்ம வரலாறு ...	44
இரச பற்பம் ...	11
ஈளைநோய் வரலாறு ...	10
ஈளைநோய்க்குத் தாளக பற்பம் ...	10
எண்வகை குன்ம வரலாறு ...	16
கட்டினங்களுக்குப் பால்மெழுகு ...	61
கண்ணோய் வரலாறு ...	41
கண்ணோய்த் தைலம் ...	43
கரங்களுக்குக் கலிக்கம் ...	51
கரப்பான் முதலிய நோய் வரலாறு ...	37
கன்ம நிவர்த்தி	3, 13, 16, 19, 30, 33, 39, 41, 44
கன்ம விலக்கம்	18, 21, 23, 25
காமகேசரி குளிகை ...	26
கிராணிநோய் வரலாறு ...	32
கிராணிக்கு லேகியம் ...	50
குட்ட வரலாறு ...	18
குட்டத்திற்குத் தைலம் ...	12
குமரித் தைலம் ...	52
குன்மத்திற்கு இளகம் ...	17
சிரநோய் முதலிய வரலாறு ...	34
சுரநோய் வரலாறு ...	28
சூல்நோய் வரலாறு ...	24
செவி நோய்க்குத் தைலம் ...	24

தலைமுழுகத் தைலம்	...	8
தாம்பிரச் செந்தூர லேகியம்	...	16
தைலம்	...	22
நோய் வகை	...	1
பஞ்சலோக செந்தூரம்	...	46
பாண்டு நோய் வரலாறு	...	30
பித்தம் வரலாறு	...	21
பிளவை முதலிய நோய் வரலாறு	...	39
பீனசம் முதலிய நோய் வரலாறு	...	23
பூவகை லேகியம்	...	48
மருத்துவகை	...	42
வங்கச் செந்தூரம்	...	35
வலி வரலாறு	...	19
வாத கன்ம வரலாறு	...	13
வாத ராசாங்கத் தைலம்	...	14

உள்ளுறை முற்றிற்று

அகத்திய முனிவரருளிச் செய்த

கன்மகாண்டம் 300

நோய் வகை

பூரணமாய் மூலமுத லாருதாரம்
புரியட்டந் தசவாய்வு நாமமூன்று
காரணமா யிடைபின்னுய் சுழிமுனையுமாகிக்
கலந்து நின்றவாதபித்த சிலேத்துமமாகி
மாரணமாய்ச் சடத்துனுள்ளே தத்துவங்கள்
மனம்புத்தியாங்காரஞ் சித்தத்தாலே
வாரணமாய்நடத்துவித்த கன்மத்தாலே
வந்ததடாநோய்களெல்லா மனிதர்க்காமே. 1

ஆமப்பா மனிதர்செய்த கன்மத்தாலே
அரகரா மேகமென்ற ராசாவாலே
காமப்பால் வீதனத்தாற் பொசிப்பினுலுங்
கைக்கடங்கா நோய்கள்வருங் கன்மத்தாலே
போமப்பா மேகம்வந்த காரணந்தான்
புகலுவே னுயிர்வதைகள் செய்வதனுலப்பா
நாமப்பா கண்டபடி சொன்னேங்கேளு
நலமான வாதசலம் பித்தசலமாமே. 2

செலமான சிலேத்துமந்தான் சலமூன்றினுலே
சேர்ந்துகொண்டு இருபதென்றசலமதாச்சு
நலமான பேர்தொகுத்துச் சொல்லக்கேளு
நல்லகெந்த னுருத்திராங்கனிந்திரகண்டி
குலமான சலதோத்திரன் பஞ்சவண்ணன்
கொடியருசி கஞ்சிலாங்கன்ரெத்தவண்ணன்
பெலமானபீதவண்ணன் ரத்தினவண்ணன்
பேசரிய சம்பிராச னனந்தனுமே. 3

அனந்தனெடு நீலகண்டன் தவளவண்ணன்
அதிபிரமன் மதுவேக னத்தனேடு
சினந்தணிக்கு மெலும்புருக்கி புட்பராசன்
சேர்ந்தவகை யிதுக்குங் குணத்தைக்கேளு

மனந்தனிலே கெந்தனுக்கு மாம்பூவாசம்
வாதத்தா லெழுந்தசலம் புளிப்புமெத்த
குணந்தனிலே ருத்திராங்கன் தாழம்பூவாசங்
குனிப்பாகுஞ் சிலேத்துமத்தி லெழுந்தமேகம். 4

மேகமிந்த யிந்திரகண்டி செண்பகப்பூவாசம்
வேகமடா சிலேத்துமத்தில் பித்தங்கூடில்
நாகமென்ற விடத்தினுட ரசமேபோலாம்
சலதோத்தி ரன்தான் குங் குமப்பூவாசம்
போகமென்ற நாக்கிட்டால் கைப்புபுளிப்பாகும்
புகழ்பச்சை வண்ணனுக்குத் தசைநாற்றந்தான்
தாகமடா மிகுந்திருக்கும் வாதபித்தந்
தன்னாலே புளிகசப்பு குணமதாமே. 5

குணமான ருசிகனுக்குப் பானகம்போலுங்
கொள்ளுமடா வாசமதுகொடியகைப்புபித்தம்
மணமான சிலாங்கனுக்குக் காடிநாற்றம்
மைந்தனே கைப்புளிப்பு வாதநீராம்
நிணமான ரத்தவண்ண னுதிரவாசம்
நல்லசல மினித்தகுணம் சிலேத்துமந்தானப்பா
பிணமான பீதவண்ண னுப்புநாற்றம்
பெரும்பித்தம் உப்பினுட ரசனையாச்சே. 6

ஆச்சப்பா ரத்தினவர்ண னலரிப்பூவாச
மதன்குணந்தான் வாதபித்த மதனில்தோன்றும்
போச்சப்பா சம்பிராசன் கோமூத்திரம் வீசும்
பெரியசல மதுவாய்நீர்ப் பித்தம்வாதம்
நீச்சப்பா அனந்தனுமோ சர்மந்தான்வாசம்
ரசனையடா சீனியது சிலேத்துமமாகும்
மூச்சப்பா நீலகண்டன் மூத்திரம்போல்நாறும்
முகம்பிடிக்கப் போகாது எறும்பரிக்குங்காணே. 7

காணப்பா சேத்துமபித்தங் கைப்புளிப்புமாகுங்
கருதியதோர் தவளவண்ணன்சா ணகம்வீசும்
பேணப்பா சக்கரைபோ லினித்தசேத்துமம்
பிரமனது பந்தனம்போல் வாசமாகும்
மூணப்பா மிளகதுபோ லுறைப்புச்சேரும்
மூத்தபித்த வாதமது நிறைந்துபாயும்
பூணப்பா மதுவேகன் கள்ளினாற்றம்
பூண்டசிலேத் துமவாதம் புளிப்பதாமே 8

புளிப்பாகும் அத்தனுமோ பால்போல்வீசும்
புகழான வெண்ணெய்யுட ரசனையாகுஞ்
சளிப்பான வாதபித்த மிகுந்தநீருந்
தளர்ந்த அத்தி சுண்ணும்பு போலாம்வாசங்
களிப்பாகுஞ் சுண்ணம்போல் கடுப்புமாகுங்
கண்டுகொள்ளு பித்தசிலேத் துமந்தானப்பா
துளிப்பான வெலும்புருக்கி ஊனைநாற்றஞ்
சொல்லுகிறேன் சிறுகைப்பு வசம்பின்காரம். 9

வசமாகும் வாதபித்தந் தொந்திப்பாகும்
வாய்த்தபுட்ப ராசனுமோ மல்லிகைப்பூவாசம்
நிசமாகு மெரித்தநீர் பித்தநீராம்
நில்லாது வாதத்தில் நீர்முனப்பா
திசமான துவாதசத்தில் நீர்வான்போகச்
செப்புவேன் கன்மங்கள் தொலையச்சொல்வேன்
கசமான குடந்தனிலே நீரெடுத்து
கணபதிக்கும் நந்திக்கும் அரசடிக்கும்வாரே. 10

கன்மநிவர்த்தி

வாரப்பா குடம்நூறு நந்திவலம்வந்து
மைந்தனேசிவபூசை விட்டுணுபூசை
நேரப்பா கோதானம் ஓமசாந்தி
நிதம்பத்துத் தரஞ்செய்யில் தீருங்கன்மம்
பாரப்பாகன்மநிவர்த்தி செய்யாவிட்டால்
பலியாது வைத்தியந்தான் கன்மத்தாலே
பேரப்பா மருந்தினுல் பிணியே தீர்ந்தால்
பெருத்தகன்மம்வைத்தியனைப் பிடிக்குமன்றே. 11

பிடியாமல்வைத்தியந்தா னேய்களுக்குப்
பெருத்தகன்மந் தீர்ப்பதற்குப் பேணிச்சொல்வேன்
மடியாமல் கன்மங்கள் நிவர்த்தி செய்து
வையகத்திநேய்தீர்த்தால் வைத்தியனுகுங்
கடிதான நோய்களுக்கு மருந்துசெய்தால்
கன்மங்கள் போவதெங்கே கண்டு சொல்லு
குடிவழியே தொடருமடா கன்மந்தானுங்
குறிப்பறிந்து கன்மத்தை நிவர்த்தி செய்யே. 12

மேகராசாங்கம்

செய்வதற்கு மேகராசாங்கம் சொல்வேன்
திறமான வாதிமகன் வைத்தியனுகில்
வெய்வதுவாங் குறுந்தொட்டி பலநூறப்பா
வேணுமென்ற விலாமிச்சு பேராமுட்டி

கைவசமாய் நறுநின்றிக் கீழாநெல்லி
கனமான வெட்டிவே ரிருவேலி வேரும்
சைவமென்ற வில்வவேர் மதுரத்தோடு
சார்வான அமுக்கருவேர் கஞ்சாவேரே. 13

கஞ்சாவும் நிலப்பனையு முத்தக்காசுங்
கனமான அமிர்தவல்லி அறுகுகேளு
மிஞ்சாமல் வகைநூறு பலமாய் வாங்கி
விடுநூறு மெண்படிதான் வற்றக்காய்ச்சி
தஞ்சமுட னெட்டிலொன்ருய்க் குறுக்கி வாங்கித்
தன்னுக்கு ளின்னமொரு சார்வுகேளு
பஞ்சதிரவியம் நெருஞ்சில் நாயுருவி மூலம்
பாரப்பா தூதுவளை மூலத்தோடே. 14

மூலமிட ஞல்விழுது குருவிஞ்சிகமுகு
முத்தினதோர் வெள்ளைசிறு வழுதலையின் வேருஞ்
சாலவே வகைக்கொரு பலமாய்வாங்கித்
தான்தூணி நீர்தன்னில் போட்டுக் காய்ச்சி
ஏலவேயெட்டி லொன்ருய்க் கியாழம் வாங்கி
யிருநீருங் கிடாரத்தில் விட்டுப் பின்பு
பால்வகையாம் நாவல்மரப் பட்டைவகைகொண்டு
பலமூன்ரு மாவாரையின் பட்டைமூன்றே. 15

மூன்ருன பொன்முசுட்டை வேர்பலந்தான் மூன்று
முழுதுமது சீலைசுட்ட சாம்பல் மூன்று
ஏன்றதொருமாதுளையின் வேர் பலந்தான் மூன்று
இயல்பான திரிபலையின் வேர்பலந்தான் மூன்று
ஆன்றதொரு வூமத்தன் வேர் பலந்தான் மூன்று
அத்திவேர் பலமூன்று ஆகவொன்ருய்ப்
பாண்டமதி லிட்டேதான் தூணி நீர்வார்த்து
பரிவாக வெட்டிலொன்ருய்ப் பதத்தில்வாங்கே. 16

வாங்குவது இன்னமொரு வகையைக்கேளு
வளமான நீர்வள்ளிக் கிழங்கு கொட்டி
பாங்குடனே தாமரையின் வளையம் நெல்லி
பரிவான காட்டாத்திப்பூ முருங்கைப்பூவுந்
தாங்கியதோர் தூதுவளைப் பூமாதுளைப்பூவுந்
தனிவில்வம் நெல்லிப்பூ தாழம்பூவு
மாங்குசெறி ஆவாரங் கருவேலம்பூ
வளமான முசுட்டைப்பூ தென்னம்பூவே. 17

பூவெல்லாம் வகைக்கொரு பலமாய் வாங்கிப்
புதுப்பாண்டத் துள்ளிட்டுத் தூணிநீர் விட்டு
பாகமாய்க் காய்ச்சியதை யெட்டொன்ருய்வாங்கி
பாங்கான கியாழமெல்லாம் ஒன்ருய் விட்டு
ஆவின்பால் படியொன்று செவ்விளநீரொன்று
ஆண்பனையின் பாலொன்று ஆட்டின் பாலொன்று
காவல்செறி மங்கையர்தன் முலைப்பாலொன்று
கதித்தபழச் சாறிரண்டு கலந்துவாரே. 18

வார்த்தபின்பு இன்னமொரு வகையைக்கேளு
வளமான வெள்ளுடனே முருங்கைவித்து
தேற்ருன்தன் வித்துடனே பருத்திவித்து
தேனுடனுர்ந்திடுமியானை நாரத்தம்வித்து
தோற்றமுள்ள தும்பைவித்து நெருஞ்சிவித்து
துளசிவித்து பூவரசன் வித்திேைடே
தோற்றமுள்ள வெள்ளைத்தா மரையின் வித்து
சுகமான கடலையுடனு ளுந்துமாமே. 19

ஆமென்ற நீர்முள்ளி காமப்பூவும்
அறிந்தமற்றை வித்துடனே கஞ்சாவித்து
ஓமென்ற வகைக்கொரு பலமாய் வாங்கி
உத்தமனே தூணிநீர்விட் டொன்ருய்க் காய்ச்சி
தாமென்ற கியாழமின்னஞ் சொல்வேன் கேளு
சாதிக்கா யேலமுடன் தகரங்கோட்டம்
வாமென்ற வாலுழுவை சீரகம் வெந்தயம்
வாகான சந்தனமுஞ் சந்தனமுமாமே. 20

ஆகவே வகையொன்று பலமொன்ருக
அளவாகத் தூணிநீர் விட்டுக் கய்ச்சி
வேகவே யெட்டிலொன்ருய் வாங்கிக் கொண்டு
வெள்ளறுகு நீர்ப்படிதா னென்றுகூட்டித்
தாகவே சரக்குவகையின்ன மொன்று சொல்வேன்
தனிப்பூனைக் காஞ்சியுட சாறுநாழி
நாகவல்லிச் சாறுடனே முருங்கைச்சாறு
நறுகதலிச் சாறுடனே நாழிகூட்டே. 21

கூட்டுவாய் செங்கருப்பஞ் சாறுநாழி
கூட்டியே யொன்ருகக் கியாழத்தில் சேர்த்து
நாட்டுவாய் கியாழத்தி லெண்ணெய் சேர்க்க
நல்லெண்ணெய் வேப்பெண்ணெய் நறுநெய்மூன்று

மூட்டுவாய் வகையொன்றுக் கெண்படிதானப்பா
மூதண்டக் கியாழத்தில் முறைதப்பாமல்
ஆட்டுவாய் கற்கவகை சொல்லக்கேளு
ஆனதொரு வால்மிளகு நறுக்குமூலம். 22

மூலமுடன் திரிகடுகுதிரிபலாதி
முந்திரிகை பேரிச்சுமிளகு கூட்டி
யேலமுடன் கற்கண்டு வங்காளச் சீனி
இம்பூரல் வேருடனே முந்திரிக்கை சூடன்
சாலவருங் குங்குமப்பூ குளவிந்தமஞ்சள்
சாத்திரமாம் பேதியுடன் தக்கோலங்குக்கில்
பாலையென்ற அரிசிவகை சொல்லக்கேளு
பாங்கான செவ்விளநீர் கடலழிஞ்சில். 23

கடலான பத்திரியுங் கிராம்பு மோமங்
கசகசா மஞ்சிட்டி சாரப்பருப்பு
மடலான துத்தமுடன் கத்தூரிகுங்குமப்பூ
மகத்தான கிராம்புவனிகு ராசானி
உடலான கூகைநீற ரத்தைஅக்கிரா
உருத்திராட்சங் கலைக்கொம்பு மிருகக்கொம்பு
மடலான நற்பவளஞ் சங்குகோட்ட
மரிவெள்ளி லோத்திரம் பச்சைப்பூரம். 24

பூரமுடன் புழுகு கோரோசனைதானும்
புகழ்காந்தஞ் சிலாசத்து புரோசம்வித்து,
காரமுடன முக்குராச முத்திராச்சோதி
கம்பியாம்பி சினுடனே,கழஞ்சிரண்டுபத்து-
வாரமுடன் கியாழத்தி லரைத்துமையாய்
வாகுசிறுபாகு போல் கரைத்துக்கொண்டு.
சாரமுடன் மண்டலமே காய்ந்துவற்றித்
தான்மெழுகு பதமானல் வடித்துவாங்கே. 25

வாங்கிடுவாய் பீங்கானில் பாண்டத்துள்ளே
வைத்திடுவாய் மண்டலந்தா னெற்குழியினுள்ளே
பாங்குடனே தைலமது வடிக்கும்போது
பரைபூசை சிவபூசை விட்டுணுபூசை
ஓங்கார முதலான மூலமந்திரம்
உறுதியாய்க் கணபதியும் வயிரவனுங்கூட்டி
யேங்கியே திரியாதே வயித்தியசாப
மேகிடவே லட்சமுரு வேற்றிக்கொள்ளே. 26

கொள்ளவே வேதியர்க்கு அன்னதானங்
    கொடுத்துநீ தைலமதுகா செடைதானுண்ண
மெள்ளவே மண்டலந்தான் தைலமுண்டால்
    வீரியத்தைச் சொல்லுகிறே னேய்தீராதோ
தள்ளவே தீருநோய் சொல்லக்கேளு
    சார்பான மேகவகை யிருபதுந்தானெங்கே
கள்ளமாம் வாதமெங்கே கயரோகமெங்கே
    கண்காணு தோடுமடா கண்டுபாரே. 27

பாரடா பித்தமென்ற தெல்லாம்போகும்
    பகையான குன்மமொடு குட்டம்போகும்
நீரடா சூலையென்ற தெல்லாம்போகும்
    நிசமென்று கொண்டாக்கால் கண்ணோய்தீரும்
ஏரடா தங்கம்போல் தேகமாகு
    மெடுத்தெடுத்த ரோகவகை யெல்லாந்தீரும்
ஆரடா வெனைப்போலே சொல்லப்போறர்
    ஆச்சரியந் தைலமது அமுர்தமாமே. 28

அமுர்தமென்ன விதுக்கீடோ கொண்டாயானல்
    ஆகாத நோய்களெல்லா மகன்றுபோச்சு
குமுர்தவொலி குண்டலிக்குள் நந்திமீறுங்
    குறிப்புடனே பத்தியந்தான் கூறக்கேளு-
திமிர்தமெனப் பாக்கிலையும் புளியுமுப்புந்
    தின்பண்ட மென்றவகை ஒன்றுமாகா
அமுர்தமென்ற பால்சீனி பத்தியந்தான்
    கறிவகைக்குப் பாகலுப்புக் கண்டமாகா. 29

கண்டுகொள்ளு பத்தியத்தில் கறியைக்கேளு
    கதலியுட காயாகு முருங்கைப்பிஞ்சும்
தண்டுசிறு கீரையுடன் நெல்லிக்காயும்
    தான்துவரை அவரையுட பிஞ்சுமாகும்
பண்டுநெய்பால் கற்கண்டாந் தூதுளங்காயாகும்
    பரிவான முசலுமே பறவையிலேகாடை-
கொண்டுடனே வெள்ளாடு வெள்ளெலியுமாகுங்
    குளத்தினுள்ள அயிரைவரால்கொரவையாமே. 30

ஆமிந்த வகைக்குளிட்டு அவிக்கக்கேளு
    ஆனதொரு நல்மிளகு சீரகங்கத்தூரி
காமிந்த சாதிக்காய் கருவாப்பட்டை
    தான்கறுத்த வேப்பிலைசர்க் கரைநெய் மஞ்சள்

ஓமிந்தபடி சமைத்துண் பதற்குச் சோறு
உத்தமனே குருவைவால்குருவையாகும்
நாமிந்தத் தைலவகை யாருக்குச்சொன்னேம்
நல்லோர்க்கு இத்தைலம் நன்றாங்காணே. 31

அப்பிரகசெந்தூரம்

காணப்பா வின்னமொரு செந்தூரந்தான்
காசினியோர் பிழைக்கவென்று கருவைச்சொல்வேன்
பூணப்பா சர்வாங்க நோய்களெல்லாம்
புகலுவே னன்றாகப் பூண்டுகேளு
தோணப்பா அப்பிரக நவநீதத்தைச்
சுறுக்காக வெள்ளெருக்கம் பாலேவிட்டு
ஊணப்பா சதுர்சாம மரைத்துக்கட்டி
யுறப்பாகக் கெசபுடத்தி லொன்றுதீரே. 32

தீர்ந்தபுடமாறியபின்னெடுத்துக் கொண்டு
செம்முள்ளிச் சாற்றிஞ லரைத்துக்கட்டி
வார்ந்தபுட முன்போலே ஒன்றுதீரு
மைந்தனே ஆலம்பால் விட்டு ஆட்டி
சேர்ந்தபில்லே காய்ந்தபின்பு புடத்தில்போடு
திறமான பொற்றலேயின் சாற்றாலாட்டி
தேர்ந்தபுட முன்போலே சேர்த்துவாங்கு
திறமான பூநீறு கழஞ்சுசேரே. 33

சேர்த்துமுலேப் பால்தன்னில் சாமமாட்டி
செங்கல்லென் றகுகையில்வைத்துப்புடத்தைப்போடு
பார்த்திடவே செந்தூரம் பவழவண்ணம்
பாரித்த நோய்களெல்லா மிடையிடையில்தீரும்
வார்த்தந்த தைலத்தில்கூட்டிக்கொள்ளு
மண்டலத்தில் மேகமெல்லா மாண்டுபோகும்
காற்றிடுமே மேகராசாங்கக்கற்பம்
கைகண்ட செந்தூர கற்பங் கொள்ளே. 34

தலேமுழுகத்தைலம்

கண்டுகொள்ளு தலேமுழுகத்தைலமொன்று
கச்சோலம் நன்னரி விலாமிச்சம்வேர்
மண்டுகொள்ளு மிருவேலி வெட்டிவேரும்
மாதுளேவேர் வில்வமுல்லே அமுக்கராவேர்
தண்டுகொள்ளு மிளகுடனே தாளிவேருந்
தான்கீழா நெல்லியுடன் குறுந்தொட்டிவேரும்,
பண்டகிலுஞ் சந்தனமுந் தேவதாரம்
பாரப்பா வகையொன்று பலந்தானென்றே .35

ஒன்ருன நீர்படிதா ஞற்பத் தெட்டு
உத்தமனே யெண்ணுழி யாக வாங்கி
பன்ருன நல்லெண்ணெய் படியெட் டாகும்
பாங்கான செவ்விளநீர் படிதானஞ்சு
மன்ருன பால்நாலு முலைப்பாலொன்று
மதுமத்தஞ் சாறுநாழி மதுதானுழி
கன்ருன கரிசாலைச் சாறுநாழி
கண்டங்கத் தரியின்வேர்க் கியாழம்நாழி. 36

நாழியொன்று தக்காளிச்சாறு தானும்
நல்மிளகு கியாழமது நாழிகூட்டித்
தாழிதனி லொன்ருக வார்த்துக்கொண்டு
தக்கோலஞ் சாதிக்காய் மதுரங்கோட்டம்
கோழியென்ற காகோளி நீர்க்கார் போகி
கொத்தமல்லி வால்மிளகு கட்டழகு சட்டம்
நீழியென்ற மரமஞ்சள் சடாமாஞ்சில்
நிறையாக வகைக்குநாற் கழஞ்சாமென்னே. 37

என்னுமிந்த மாந்தரெல்லா மரைக்கும்போது
இயலான ஆட்டின் பால் விட்டு ஆட்டி
நன்னமா யெண்ணெயிலே கரைத்துவைத்து
நன்மை பெற வேணுமென்றே கணேசன் பூசை
அன்னமுடன் பால் பழங்க ளிளநீர் தேங்காய்
ஆலத்திக் கற்பூரந் தீபமாட்டி
சொன்னபடி மெழுகுபதந் தன்னில்வாங்கித்
தோன்றவடி கலசமது தன்னில்கேளே. 38

கேளப்பா கற்பூரங் குங்குமப்பூ
கிளர்புழுகு சட்டங்கோ ரோசனையும்போட்டு
நாளப்பா வடித்துடனே யேடுகட்டி
நலமாக வைத்துவைப்பாய் முழுகும்போது
வேளப்பா சீயக்காய் வெந்நீராகும்
மெய்யெல்லாஞ் சந்திரன்போல் காந்தியாகுஞ்
சூளப்பா மேகசலம் பறந்துபோகுஞ்
சூத்திரத்தில் சூத்திரமாச் சொன்னேன்கேளே. 39

சொன்னதொரு முந்நூறு மிதுமிந்நூறுஞ்
சூத்திரத்தில் குறுக்கியது முப்பத்தஞ்சில்
இன்னமொரு அன்பதுமுன் றன்பதுண்டு
இது வைந்துங் கன்மசூத்திரந்தானப்பா

முந்நூல்தா னுயிரத் திருநூறுமுண்டு
முறையான கருவெல்லாஞ் சொன்னேனன்பத்தில்
என்னூல் போலொருநூலுஞ் சொல்லாதப்பா
வெடுத்தெடுத்த உரைகளெல்லா மேற்றந்தானே. 40

ஈளை நோய் வரலாறு

ஏற்றமென்ற கயரோகம் பொல்லாரோக
மேதகவே வந்ததென்ருல் சொல்வேன்கேளு
மாற்றமாஞ்சென்மத்தில் பொன்னூறுந்தான்
வாங்கினதோர் கடன்தன்னைக் கொடாதபாவம்
சேற்றதொரு நித்திரையில் மோகினிபோல்மேகஞ்
சேர்ந்தணைந்தபோதெல்லாம் கயரோகந்தான்
சீற்றமென்றகடனென்ருல் பொல்லாதப்பா
சென்மித்த வாறிதுதான் தெளிந்துபாரே. 41

தெளிந்து கொண்டு கயரோகம் வந்ததானல்
செய்வதொரு கன்மங்கள் தீர்க்கச் சொல்வேன்
அளிந்திடாக்கன்னியர்க்கு வஸ்திரதான
மன்னதானமிடுவாய் தினம் நூறு பேர்க்கு
மொளிந்ததொரு மண்டலமே கன்னியர்க்கு
முறையான அன்னதானம் வத்திரதானமீந்து
ஒழிந்தபின்பு சிதம்பரத்தை யெழுதிக்கட்டி
யுறப்பாகப் பின்பவர்க்குமருந்து செய்யே. 42

ஈளைநோய்க்குத் தாளகபற்பம்

செய்வதற்குப் பற்பமொன்று சொல்லக் கேளு
திறமான தாளகந்தான்சுத்தி செய்து
ஐவிரலிச் சாறுதான் சுருக்குத்தாக்கு
அப்பனே மூன்றுபடி யான பின்பு
கைவசமாய் பசலைச்சாறு சுருக்குப் போடு
கலங்காதே ஒருபடிதான் கண்டுகொள்ளு
மைவிழியா யெருக்கம்பால் கூட்டியாட்டி
மைவில்லை செய்துடனே ரவியில்வையே. 43

ரவிதனிலே யுலர்ந்தபின்பு சீனச்சுன்னம்
நலமாகக் கீழ்மேலாய் நடுவில்வைத்து
கவியவே முத்தீயும் மூன்றுசாமம்
கட்டாக வெரித்திடவே வெளுத்துநீறும்
புவிதனிலே யிந்நீற்றை வைத்துக்கொண்டு
போடவே பணவெடைதான் சர்க்கரையில்பொதிந்து
கவியான கயரோகமந் தாரகாசங்
கக்குகின்ற ரத்தமொடு பித்தகாசம். 44

காசமொடு மேலிளைப்பு ஈளைகாசங்
கதித்ததொரு விவ்வகைநோய் காணுதோடும்
பாசமென்ற ரோகமெல்லா மறுத்துத்தள்ளும்
பறக்குமடா குட்டமொடு சூலைரோகந்
தேசமெய்த்த மேகராசாங்க வெண்ணெய்
சேர்த்துநீ கொண்டிடவே தீருந்தீரும்
நாசமதாம் நோய்களெல்லாம் பத்தியமாய்க்கொள்ள
நமனில்லை பதினெட்டுக் குட்டம்போமே. 45

இரசபற்பம்

போமென்ற பற்பமொன்று சொல்லக்கேளு
புகழாகச் சுத்திசெய்த ரசம்பலந்தானென்று
ஆமென்ற கெந்தகமுங் காட்டுள்ளிக் கூட்டி
அடவானதைலமது இறக்கிக்கொண்டு
வேமென்ற ரசத்தை விட்டுச் சாமமாட்டி
வெய்யிலிலே வைத்தவுட னீறும்பாரு
தாமென்ற தைலம்விட்டு ஆட்டிவில்லை
சாதகமாய்க் காய்ந்தபின் புடத்தில்வையே. 46

வையப்பா குக்குடத்தி லெடைபோகாது
வாயிலே கட்டாது ரசகற்பூரம்
செய்யப்பா குட்டமொடு கிரந்திசூலை
சொல்லரிய மேகவகை யெல்லாம் போகும்
மெய்யப்பா புண்வகைக ளெல்லாந்தீரும்
வெளுப்போடு வீக்கமுதல் வியாதிதீரும்
கையப்பா வண்டுகடி பீனசமுந்தீரும்
கபாலத்திற் சூலையொடு பவுத்திரமுந்தீரும்
பையப்பா புற்றுவகை யெல்லாங்கட்டும்
பறக்குமப்பா ரசபற்ப மறிந்துபாரே. 47

பரிவாக வின்னமொரு லேகியத்தைக்கேளு
பண்பான தூதுளைவேர் சங்கம்வேருந்
தெளிவான கண்டங்கத் தரியின்வேருஞ்
சிறுபாலை சிறுவழு தலையின்வேரும்
உரித்தான திரிகடுகு வசம்பினோடு
உத்தமனே வில்வவேர் அமுக்கராவேர்
நரிமிரட்டி செம்முள்ளி கீழாநெல்லி
நலமாகவகையொன்று பலமொன்றாக. 48

ஒன்ருகச் சூரணித்துவைத்துக்கொண்டு
ஒருபடிதான் பிரமிச்சாறு தூதுவளைச்சாறும்
பன்ருன சங்கன்சா ருடாதோடை
பரிவான முருக்குவில்வம் பருத்தமுல்லை
நன்ருன கொடிவேலிவேர் கியாழமாக
நலமாக வகையொன்று படியொன்ருக
ஒன்ருன சாறெல்லாமொன்றில்விட்டு
உத்தமனே பாகுபதம் வருநேரத்தில். 49

வருநேரஞ் சூரணத்தை யிட்டுக்கிண்டி
வளமான்தேன்திலே படியரைதான்விட்டு
தருவாக நெய்தன்னை விட்டுக்கிண்டி
சாதகமாம் மெழுகுபத மானபோதே
குருவான பதம்போற்றிப் பதனம்பண்ணி
கொடிதான நோய்களுக்குக் கழஞ்சுகொள்ளு
உருவான தாளகபற்பஞ் சூதபற்பம்
முறையாகப் பணவெடைதானிதனிற்கொள்ளே 50

கொள்ளையிலே பாலோடு சிறுபயறுமாகுங்
கொண்டபின்பு கயரோகஞ் சூலைகுட்டம்
வெள்ளையென்ற வெளுப்புமுத லிளைப்புகக்கல்
விடக்கடியுங் குறைநோயு மீளுமீளுந்
தள்ளையென்ற சூதபற்ப மரிதாரபற்பம்
தடையறவே சண்ணுமடா தாக்கிப்பாரு
பிள்ளையென்று நோயாளி பணிவானுகில்
பிணிதீரும் பணியானேல் பிசகுந்தானே. 51

குட்டத்திற்குத் தைலம்

பிசகாமல் வைத்தியர்க்கு மனம்நோகாமல்
பேணியே கொண்டாக்கால் சாவேயில்லை
அசகாமல் கன்மங்கள் நிவர்த்திசெய்து
ஆனதொரு லேகியத்தை மண்டலந்தான்கொள்
பதமான தைலமொன்று சொல்லக்கேளு
பாங்குடனேசெய்வதற்கு முறையைச் சொல்வேன்
வசமான வேப்பரிசி அழிஞ்சிவித்து
மாவிலிங்க வித்துடனே முருங்கைவித்தே. 52

வித்தான முட்டிவித்து பேய்ச்சுரையின்வித்து
விழுதிவித்து தகரைவித்து வில்வவித்து
முத்தான ஆமணக்கம் புரசம்வித்து
முருங்கைவித்து திரிபலையும் வசம்பினேடு

பத்தான கொடிவேலி தேற்றுங்கொட்டை
பறங்கிபட்டை சேங்கொட்டை கார்க்கோலோடு
மத்தான வூமத்தைவா லுழுவைவித்து
வாகான தகரையுடன் சிவனார்வேம்பே. 53

வேம்பான கருஞ்சீரகம் வகையொன்றுக்கு
வெள்ளறுகு வேருடனே வெண்தோன்றியாகுந்
தாம்பான பலமொன்று குழித்தைலம்வாங்கித்
தனிநெய்யும் வேப்பெண்ணெய் நாழிகூட்டி
சோம்பான தைலமது நாழியாகத்
துடியாக அனலேற்றி வைத்துக்கொண்டு
பாம்பான குட்டமது பதினெட்டுக்கும்
பரிவாக மேற்பூசு மண்டலத்தில்பாரே. 54

பாரடா சட்டையொன்று தள்ளுந்தள்ளும்
பசும்பொன்போல் தேகமுமாம் பரிந்துகாணும்
நேரடா முன்சொன்ன தைலம்மூழ்க
நிசமானவார்த்தையிது சுருக்குமெத்தக்
காரடா குருவினுட பாதந்தன்னைக்
கதிகெட்ட நோயாளி நோய்தீரவென்றால்
ஊரடா யிருக்கின்ற வைத்தியர்க்கு
உறுதியுள்ள தங்கமடா இந்தநூலே. 55

வாதகன்மவரலாறு

நூலென்ற வாதம்வந்த வகைதானேது
நுண்மையாய்க் கன்மத்தின் வகையைக்கேளு
காலிலே தோன்றியது கடுப்பதேது
கைகாலில் முடக்கியது வீக்கமேது
கோலிலே படுக்கின்ற விருட்சமான
குழந்தைமரந் தனைவெட்டல் மேல்தோல்சீவல்
நாலிலேசீவசெந்து கால்முறித்தல்
நல்லகொம்பு தழைமுறித்தல் நலித்தல்காணே. 56

கன்ம நிவர்த்தி

நலியாலே வந்தகன்மந் தீரவென்றால்
நன்மரங்கள் தோப்புநடைசாலை வைத்தல்
தெளிவான கிணறுவெட்டல் குளங்கள்வெட்டல்
தெய்வதலங் கோயில்கட்டத் தீரும்பாரு
எளிதான பாலகர்க்கா பரணமீதல்
எண்பதென்ற வாதமெல்லா மிடைந்துபோகும்
பழியான நோய்வந்தா லிப்படியேசெய்து
பரிவாக வைத்தியத்தைப்பிறகு செய்யே 57

வாதராசாங்கத்தயிலம்

பிறவாத நெறிபெற்ற வைத்தியர்க்குப்
பிலமான தைலமொன்று மேகராசாங்கம்
திறமான வாதரா சாங்கஞ்செய்ய
செகமெச்சுஞ் சவுரியது பலந்தானூறு
மறவாது முன்போலே கியாழம் வாங்கி
வாகான மகாமேதை பலந்தானூறு
முறையான சாரணைவேர் பலந்தானூறு
முன்போலே கியாழமிட்டு வாங்கிக்கொள்ளே. 58

கொள்ளடா சென்னகரை பலந்தானூறு
கூசாமல் முன்போலே கியாழம்வாங்கு
விள்ளடா நூருண்டின் வேப்பம்பட்டை
விருதாக நூறுபலம் கியாழம்வாங்கு
துள்ளடா குறுந்தொட்டி மூலம் நூறு
துடியாக முன்போலே கியாழம்வாங்கு
கள்ளடா கியாழமெல்லா மொன்றாய்ச் சேர்த்துக்
கருத்துடனே யின்னமொன்று கருதிக்கேளே. 59

கருதுவது மேனிச்சாறு படிதானென்று
கையான்சாறு படிதாளிச்சாறுபடியொன்று
சுருதிபெறு முடக்கொத்தான் சாறுபடியொன்று
சொந்தவேலிப் பருத்திச்சா றுபடியொன்று
பெருவாத மடக்கிச் சாறு படியோவொன்று
பேரானகியாழத்தில் கூடச்சேரு,
வருவதுதான் வெள்ளாட்டுக் கோமியமும்பாலும்
வளர்பசுவின் பால்வகைக்கு நாலுபடியே. 60

படியான அமுரியதுபடிநாலுங்கூட்டி
பகர்வேம்பி னெண்ணெயுமெள் ளெண்ணெய்தானும்
முடியானவிளக்கெண்ணெய் தேங்காயெண்ணெய்
முறையான பசுவினெய்யஞ்சுங்கூட்டி
துடியானவகைமூன்று படியதாகத்
தோணவே சேர்த்துப்பின் கற்கங்கேளு
கெடியான அதிமதுரம் நறுக்குமூலங்
கிளர்கோட்ட மரமஞ்சள் மிளகுசுக்கே. 61

சுக்குடனே சாதிக்காய் கிராம்புமேலஞ்
சொல்வெளிச்சிப்பிசி னரத்தைஅக்கிருவுடனே
மிக்கதொரு வசம்புடனே ரேணுகம்பச்சை
வெட்டிவேர்விலாமிச்சஞ்சீரங்கச்சோலந்

தக்கதொருசந்தனமுஞ்செவ்வள்ளியெல்லாஞ்
சட்டமுடனிந்துப்புசீனக்காரந்
தக்கதொரு வெடியுப்பு சவுக்காரம்பூரந்
தனித்தவகை யொன்றுக்கு கழஞ்சுநாலே. 62

நாலான மருந்தெல்லா மரைக்கக்கேளு
நல்லபழச் சாறுவிட்டு மைபோலாட்டிப்
பாலாலே பாகுபோற் கரைத்துக்கொண்டு
பட்சமொன்று காய்ந்துமெழு காகும்போது
மாலான பூநீறு சாம் பிராணிகூடன்
வடிகலயந் தனிலிட்டு வடித்துக்கொண்டு
கோலான வகைகழஞ்சுவீதம்போட்டு
குருபூசைசெய்திடுவாய்திறமாய்த்தானே. 63

திறமானசிதம்பரத்தைப்பூசித்தேதான்
செய்ததொரு மருந்துதனை மெய்யிற்பூசி
மறவாமற் காசெடைதா னுள்ளேகொண்டால்
மண்டலத்தில் வாதமெல்லா மருண்டுபோகு
முறையான பத்தியந்தான் முருங்கைப்பிஞ்சு
முற்றசிறு பயருடனேதுவரைசுண்டை
திறமான நெய்பாலோ டயிரைவரால் கெளுத்தி
நிசமான வெள்ளாட்டுக் கண்டமாமே. 64

அயச்செந்தூரம்

கண்டதொரு செந்தூரஞ் சொல்லக்கேளு
காசினியி லரப்பொடி தான் கழஞ்சுபத்து
நண்டான வீரமது கழஞ்சிபத்து
நலமான வெருக்கின்பால் விட்டரைத்து
விண்டதொரு மூன்றுநாள் கைவிடாமல்
வீரமிட்டு மும்முறையா யாட்டித்திரு
தண்டமிழ்சேர் குப்பியிலே வைத்துமுடி
சாதகமாம் நெற்குழியிற் புதைத்துவையே. 65

வையப்பா மண்டலத்திற் செந்தூரந்தான்
வளர்முருக்கம் பூப்போலச் சிவந்துபோகுங்
கையப்பா கண்டதொரு செந்தூரத்தைக்
காற்பணமாய்ப்பத்துநாள் திரிபலையிற்கூட்டி
நெய்யப்பா விட்டரைத்துக் கொள்ளவேணும்
நிச்சயமாய் வாதமென்ற முடக்குந்திருஞ்
செய்யப்பா தீவேண்டா மிதுசெந்தூரஞ்
சேர்ந்துநின்ற சூலையொடு குன்மம்போமே. 66

எண்வகைக்குன்ம வரலாறு

குன்மம்வந்த காரணந்தா னேதோவென்னில்
குடிகெடுத்து வயிறெரிச்சல் கொண்டபாவம்
நன்மையில்லா மனக்கவடு பெருத்தபாவம்
நல்லோரை மனம் நோகப் பழித்தபாவம்
தன்மையில்லா பிறர்பசிக்க வுண்டபாவஞ்
சண்டாள தத்துவமே செய்த பாவ
இம்மையிலே இப்பாவம் வந்துசுற்றி
யதனுலே குன்மமென வெடுத்தவாறே. 67

கன்ம நிவர்த்தி

வாருன குன்மமது தீரவென்ருல்
வைத்தியனுலாகாது கன்மமிஞ்சும்
வீருனகன்மத்தை தீர்க்கச்சொல்வேன்
வேலவருக் கபிடேகம் வெள்ளியிற்செய்
ஆருன தீர்த்தங்களாடச்செல்லு
அன்னமிடு தானமுதற் கோதானங்கள்
வீருன வாலயத்தில் நெய்விளக்கு மேற்று
வேதியர்க்குச் சொன்னதான மிகுந்துசெய்யே. 68

தாம்பிரச்செந்தூர லேகியம்

செய்தபின்பு குன்மமென்ற வகையெல்லாந்தான்
தீர்க்கவொரு மருந்துசொல்வேன் திறமாய்த்தேர்ந்து
தைவளேயின் சாற்றுலே கெந்தகத்தையரைத்து
சாதகமாய் மூன்றுதின மரைத்தபின்பு
மைபோலேமெழுகாகுங் குகைபோல்பண்ணி
மண்ணென்ற குகைக்குள்ளேவைத்தபின்பு
கையென்ற செம்பதனேத் தகடாய்த்தட்டி
காஞ்சரையின் பழச்சாற்றிலூறப்போடே. 69

போட்டுவைப்பாய்பட்சமொன்று சென்றுவாங்கி
புகழ்சீனக்காரத்தைமேலேபூசி
நாட்டமுடன் குகைதனிலே வைத்துமூடு
நலமான சீலேமண்தானே செய்து
மூட்டுவாய் கெசபுடத்திலொரு புடமாய்த்தானே
மூதண்டமாகியது நீறிப்போகும்
பூட்டுவாயந்தெடைக்குலிங்கங்கூட்டிப்
புகழாகவரைத்ததனேபில்லேதட்டே. 70

அரைப்பது தானெருக்கம்பா லதனுலாட்டி
அப்பனேயோட்டில் வைத்துக் கெசபுடமாய்ப்போடு
துரைக்குருவாஞ் செந்தூர முருக்கம் பூப்போல்
சொர்னமென்ன விதற்கீடோகன்மமேது
அரைப்பணந்தான் திரிகடுகு தேனிற்கொள்ள
வஞ்சாத குன்மமெட்டும் வாயாதோடுங்
கரப்பனெடு பெருவயிறு நீராம்பல்கேள்
கதிகெட்ட மகோதரமுங் காணுதன்றே. 71

காணுமோ வுதிரத்திலுள்ள வாய்வு
கதித்தோடு மானந்த வாய்வினேடு
வேணுமென்ற விஷபாகம் பிறநீர்க்கோவை
வீக்கமொடு கவித்திருந்த விடநீரெல்லாங்
கோணுமே செந்தூரங் கண்டபோதே
கூட்டிலுள்ள நோய்களெல்லாங் குடிடோம்பாரு
ஆணுவத்தாற்சொன்னதடா விந்தநூல்தான்
ஆச்சரியஞ் சித்தருக்கா யறைவேன்பாரே. 72

குன்மத்திற்கு இளகம்

பார்த்திட்ட லேகியந்தா னென்றுகேளு
பண்பான நாயுருவி யுப்பும்வாழையுப்பும்
நீர்த்திட்ட தாழையுப்புந் தென்கினுப்பும்
நேரான பேதியொடு சத்திச்சார
மார்த்திட்டு நின்றதொரு வீரம்பூர
மகத்தான நவாச்சாரம் பூநீரோடு
கார்த்திட்ட விந்துப்பும் வளையலுப்புங்
கருவான வெள்ளுப்புஞ்சங்குநீறே. 73

நீறுடனே வகைக்குவொரு பலமாய் வாங்கி
நிறையான கந்தகமோ பலமோ வொன்று
பேறுடனே திரிகடுகு பலந்தா னென்று
பேரான சாராயம் விட்டரைத்து
மாறுபட தெருக்கம்பால் கள்ளிப் பாலு
மக்களே வகைக்குழக்காய் வார்த்த ரைத்துக்
கூறுடனே நெய்யுழக்குந் தேனுழக்குங்
கூட்டியே கொதிக்கவைக்க மெழுகு மாமே. 74

மெழுகெடுத்துப் பரணிதனி லடைத்துக் கொண்டு
விசைக்குவொருபணவெடைதான்தாம்பிரச்செந்தூர
மெழுகெடுத்த லேகியந்தா னரைக்கழஞ்சு
உத்தமனே ரெண்டுமொன்றுய் ரேகித்தேதான்

மழுக்கெடுத்த சருக்கரையிற் கொள்வராகி
லட்டகுன்மம் வாயு வெல்லா மகன்றுபோகுந்
தொழுதெடுத்து மண்டலந்தான ரைகிற்றீருஞ்
சுருக்கடா லேகியமுந் தாம்பிரமும் பாரே. 75

குட்ட வரலாறு

பாரிந்தப் படிசெய்யிற் குன்மந்தீரும்
பாலாகும் நெய்யாகுஞ் சிறுபயறு மாகுங்
காரிந்த வாமத்தி லாயிபாதங்
கருணையினல் சன்மாந்தர நோய்கள்தீரும்
சேர்ந்தகுட்ட மோடுகுறை நோய்கள் வந்த
சேதிகேள் மலராதவரும்பு கொய்தல்
தாரிந்த சீவசெந்து வதைகள்செய்தல்
தாய்தந்தை மனதுநொந்தது ரோகந்தானே. 76

தானென்ற தெய்வவுருத் தனையழித்தல்
சார்வான பெரியோர்கள் தமைப்பழித்தல்
கானென்ற நந்தவனம் பூஞ்செடிகள் வெட்டல்
கருமமடா சரீரத்திற் காசுபோலே
யூனென்ற வுடம்பெல்லாம் மொட்டுப் பொட்டா
யுடன்வெளுத்துக் குறைநோயா யுதிரஞ்சிந்தும்
வானென்ற கருமங்கள் தீர்ப்பதற்கு
வகையொன்று சொல்வேன்கேள் நந்தவனம்வையே77

கன்ம விலக்கம்

வையடா செவ்வந்தி முளரிதானும்
வாகான கிணறுகளும் சாலை சோலை
செய்யடா தன்னைப்போ லுருத்தானென்று
தெய்வதல மதில்வைத்துச் சாத்தார்பூசை
செய்யடா சிவபூசை விசேடவோமஞ்
செகந்தனிலேமண்டலந்தான்வேதியருக்கன்னஞ்
செய்யடா நெய்விளக்கோ ராயிரந்தான்
செய்மாகச் செய்திடவே நிசமதாமே. 78

அவிழ்த வகை

நிசமாகக் கருமங்கள் நிவர்த்தி செய்து
நிண்ணயமாய் முன்சொன்ன தாளெகமுஞ்சூதம்
வசமான மேகரா சாங்கத்தோடு
மைந்தனே முன்வைத்த தையிலமுழ்கு

தெசமான நாளிலே தீருந் தீருஞ்
சிந்தையிலே கலக்கமது செய்ய வேண்டாம்
விசமான வித்திலொரு தயிலமுன்னேசொன்னேன்
வெகுசுறுக்கு விந்நோய்க்கு விருதுகட்டிக்கொள்ளே.79

வலி வரலாறு

விருதானவலி வைந்து வந்ததேது
மேதினியி லூர்வனமாம் பறவைபட்சி
யரிதான நாகத்தைக் கொன்றபாவ
மஞ்சு வகை வலியாச்சு அதிகமாச்சு
பெரிதான வலியஞ்சுந் தீராதப்பா
பிர பலமாங் கருமங்கள் தீராவிட்டா
லுரிதான கருமங்கள் தீர்க்கச் சொல்வே
னுத்தமனே நாகமஞ்சு பிரதிட்டைபண்ணே. 80

கன்ம நிவர்த்தி

பிரதிட்டை சிவனுக்கு நந்திச்சொன்று
பெருத்தசிவ தலந்தோறு மண்டலந்தான்பூசை
யடைந்திட்டே ஞயிரந்தா னெய்விளக்கும்
ஆயிரம் வேதியர்களுக்கு மன்னதானம்
நிறைந்திடவே கோதானம் வத்திரதானம்
நிச்சயமாஞ் சிதம்பரமா மெக்கியநூறு
வுறைந்திடவே சிதம்பரத்தை யெழுதிக்கட்டு
வுத்தமனே வயித்தியத்துக் குறுதிதானே. 81

அவிழ்த வகை

உறுதியா மெந்தெந்த வலிகட்கெல்லா
முற்பனமாய் தயிலமொன்று வுரைக்கிறேன்கேள்
பொறுதியாய் நரியெலும்பு நாயெலும்பும்
பூனையத்தி முயலெலும்பும் புரவியன் காற்குளம்பு
மறுதியாங் கழுதையத்தி பன்றியீர
லப்பனே மயிலீரல் கோழியீரல்
சுருதியா யாட்டெலும்பும் பூநாகந்தான்
சொரியனென்ற மணற்றவளை கருங்காக்கைசிரசே. 82

சிரசாகு முடும்போடு காமரூபி
செம்போத்தின் தலையுடனே பச்சைப்பாம்பு
மரசோடும் புக்கோடும் முசுறுமுட்டை
யப்பனே தண்டிறைச்சிளப்பியாகும்

விரசாகுஞ் சேங்கொட்டை யாயிரக்காலட்டை
வெண்புரசின் வித்துடனே யூர்க்குருவிமுட்டை
பரசான பிராயம்வித்து முருங்கைவித்தும்
பரிவான வசம்பினெடு பன்றிநெய்யே. 83

நெய்யான வாவிநெய்யே ரண்டத்தெண்ணெய்
நிசமாக மயிலெண்ணெய் யாட்டினெய்யு
மெய்யான வேப்பெண்ணெய் புங்கினெண்ணெய்
விருதான குருந்தெண்ணெய் யிலுப்பையெண்ணெய்
கையான நல்லெண்ணெய் கொன்றைபுன்னை
காட்டா மணக்கெண்ணெய் தேங்காயெண்ணெய்
செய்யான சிவன் வேம்பும் வாலுழுவைத்தயிலஞ்
சிறப்பான வெள்ளுள்ளித் தயிலம் சேரே. 84

சேர்த்திடுவாய் வகைக்கிரண்டு படியதாகச்
சிவப்பாக மருந்தெல்லா மரைப்பலமாய்க்கொண்டு
ஆர்ந்திடவே யிடித்தரைத்து மைபோலாக்கி
யரிதான யெண்ணெய்யிலே கரைத்துவிட்டு
நீர்த்திடவே மூன்றுநாள் முத்தீயிட்டு
நினைவாக மெழுகுபத மானபோதே
கார்த்திடவே கணபதிக்கும் வயிரவர்க்குங்
கருணைவரப் பூசித்துக் கடக்கவையே. 85

வைத்ததொரு தயிலந்தான் வலிகள்ராசாங்க
மாருட்ட மில்லையடா வச்சிரகாய;
மெய்த்ததொரு வலிகள்வந்த நேரந்தன்னி
லிட்டிடுவாய் பதைப்புகளிற் றெடுத்தொட்டு
கைத்ததொரு மூங்கில்விட்டுக் குழல்கொண்டுது
காதிலே விட்டடைத்து கண்ணிலஞ்சனம்-
வைத்துந்தானுள்ளுக்காசெடைதானீந்து
மார்பிலே யடித்தவுட னெழுந்திருக்கும்வாறே. 86

வாறான வலிக்கெல்லா மஞ்சனந்தானென்று
வாய்ப்பாகச் சொல்லுகிறேன் வளமாய்க்கேளும்
கூறான விந்திரகோபம் பச்சைப்பாம்புங்
கூர்மையுள்ள நன்மிளகும் மகிழம்வித்தும்
நீறான மக்கள்வித்து வகைகளெல்லாமரைத்து
நிச்சயமாய் வெள்ளாட்டுப் பிச்சுநீர்படியும்
பேறாக வேயரைத்துப் பன்றிப்பித்தும்
பெருங்கோழிப் பித்துடனவ் விரத்தமாமே. 87

ஆமிந்த வகைகளெல்லா மரைத்து வெள்ளி
யதனிலொரு மஞ்சாடிவிட்டு அரைத்துக்கொண்டு
வோமிந்த மிளகதுபோற் குளிகைசெய்து
வுத்தமனே நிழலுலர்த்தி வெற்றிலேயின் சாற்றில்
வாமிந்தப் படியரைத்து யெள்ளிடைதான்கண்ணில்
வைத்திடவே வலிகளைந்தும் விட்டு வழிந்திடுமே
போமிந்த வலிகளைந்து மண்டலந்தான்தயிலம்
புனிதமால் கொண்டிடவே போகும்வலிதானே. 88

வலிகளெல்லா முச்சாடன மாரணத்தை
வாகாகச் செபஞ் செய்து வோமஞ்செய்து
சலியாமற் றங்கமென்ற கட்டிற்கீறி
சாதகமாய் சுத்திசெய்து தரித்தபின்பு
பெலியதுதான் கோழியென்று தலையைச் சுற்றிப்
பிசாசு பவுச்சாடனுவென்று வெட்டிப்போடு
பலியான வலிகளெல்லா முன்னைக்கண்டால்
பறக்குமடா வயித்தியனே பாருபாரே. 89

பித்தம் வரலாறு

பாரடா பித்தமென்ற கிரிச்சனந்தான்
பதினெட்டு வகையாகப் பலித்ததேது
ஊரடா யிருக்கின்ற பெரியோர்தம்மை
யொருக்காலே பழித்ததனுல் வந்தபாவம்
சீரடா பாராமல் தூஷணித்தல்
சிவத்தலங்க ளதைப்பழித்தல் சிவமேசெய்தல்
ஆரடா கோபமென்ற பாவத்தாலே
யப்பனே பித்தமது சிரசின்மேலே. 90

மேலேறி யகரந்தனை யெழும்பி
மேகமென்ற புரவியது போலேயாச்சு
மாலேறி புத்திக்குட் பிரமைதோன்றி
மனம்விட்டுக் கூத்தாடி வெளியேயேகிக்
காலேறிப் பசாசுபோற் றிரிந்ததென்ன
காரண்ட கோபமென்ற கருமத்தாலே
பால்போலு மனமுடைய பெரியோர் சாபம்
பலித்துதடா புத்தி கெட்ட பரிசதாமே. 91

கன்ம விலக்கம்

பரிசான கன்மத்தைத் தீர்க்கவென்ருல்
பகருவேன் கோயில்குளம் பலதீர்த்தங்கள்
தரிசானவபிடேகம் பால்பழங்கள்
சருக்கரை சந்தனக்குழம்பு சாந்தும் பூமாலே

அரிதான பரங்களுக்கு மன்னதானம்
அரசடியில் நூறுகுடம் நீரைவிட்டுப்
பரிசான கோவுக்குப் புல் நீர்வைத்துப்
பாரிலே புதனேன்பு பத்துப்பத்தே. 92

பத்தாக விப்படியே குளிர்ச்சி செய்து
பஞ்சகும்பந் தாபித்துத் தியானஞ்செய்து
பித்தனுக்கு நூறுகுடஞ் சிரசிற்செய்து
பிலமாகச் சுப்பிரமண்ணிய மெழுதிக்கட்டிச்
சித்தாகச் சுப்பிரமண்ணியம் நூற்றெட்டாகச்
செபித்துநீ மருந்துசெய்யிற் றீருங்கன்மங்
கத்தாவின் பாதத்தை நம்பினேர்க்குக்
கைகண்ட மருந்தொன்று கருதிக்கேளே. 93

அவிழ்த வகை

கேளடா மாட்டெலும்பு நாயின்மண்டை
கிழமனிதர் வெந்தஎன்பு நீறுதன்னை
நாளடா தேசிப்பால் விட்டு மூன்று
நாளரைத்துக் கெசமாம் புடத்தில் வைத்து
வேளவனே யெரித்தசிவன் சொன்னமார்க்கம்
வெந்த என்பு நீறதனைத்தேசிப்பாலில்
கேளடா சொல்லாதே கழஞ்சியொன்று
கொடுத்திடுநீ யுள்ளுக்குத் தினந்தான்பத்தே. 94

தைலம்

பத்துநா ளிடுகவொரு தயிலஞ் சொல்வேன்
பழச்சாறு படிநாலு முலைப்பால்நாலு
முத்தான கோகுலத்தின் பால்தாநாலு
முறையான பசுவின்கோ மியந்தானுலு
சுத்துமோர் முகமுசுக்கைச் சாறுபடிநாலு
சொல்லுகிறேன் கொடுப்பைரசம் படிதானுலு
வித்துமே யதிமதுரங் கோஷ்டமேலம்
விளங்கவே சீரகஞ்சந் தனமுங் கூட்டே, 95

கூட்டியே வகையொன்று பலமொன்ருகக்
கோகுவ யிலைச்சாறுவிட்டு மைபோலாட்டி
பூட்டியே நல்லெண்ணெய் படிதானுலு
புகட்டியே காய்ச்சிவடித் தெடுத்துவைத்துத்
தாட்டிகமாய்த் தலையிலே குடோரியாடி
சாதகமாய் நூறுகுடந் தண்ணீர்விட்டு
வீட்டிலே யிருத்திவைத்து மோருஞ்சோறு
வேணுமடா சீனிகறி விளம்பினேமே. 96

விளம்பவே மண்டலத்திற் சொல்லக்கேளு
வெறியென்ற பித்தமெல்லாம் விழலாய்ப்போச்சு
தளம்பவே யின்னமொரு மருந்துசொல்வேன்
தானமிர்த சருக்கரைக்குந் தீருந் தீரும்
களங்கமறச் சொல்லிவிட்டேன் முந்நூற்றுள்ளே
கருமாந்தர நோய்தீருங் காரணந்தானப்பா
பளங்கனிந்த ரசம்போலே பாருபாரு
பகருவேன் சிரசில்நோய் கருமங்கேளே 97

பீனிசம் முதலிய நோய் வரலாறு

பகருவேன் மண்டையிலே கரப்பான்கட்டும்
பகரரிய பீனிசங்க ளிரணத்தோடு
நிகரில்லா வொருதலைநோய் மண்டைக்குத்தும்
நிசமாக வந்தகன்மம் நிசமாய்க்கேளு
தகரவே காயடித்த லிலைபறித்தல்
தளிர்கொழுந்து தழைமுறித்தல் பட்டைவெட்டல்
நிகரில்லாப் பூப்பறித்தல் வேர்கொடிகள்வெட்டல்
நினைவுகெட்டுச் சீவசெந்து தனையடித்தலாலே. 98

கன்ம விலக்கம்

அடித்தகன்மம் மண்டையிலே யிரண்டுங்கொண்டு
அரகரா நோய்மிகுந்த கருமந்தீர
படித்துறைகள் முடிச்சரங்க ளெண்ணெய்க்காப்பு
பணிமாறுகாலத்திற் றூபதீபஞ்
சடைத்தலைக்கு மபிடேகம் பாதரட்சை
தண்ணீர்ப்பந்தல் மடங்கள் சாவடிகள்சாலை
முடித்ததொரு மண்டபங்கள் தீர்த்தவரச
முறையுடனேசெய்திடவே மூண்டகன்மம்போமே. 99

கன்மமென்ன தன்மமென்ன வென்றுயானுற்
காயத்தில் நோய்மிகுந்து சண்ணுஞ் சண்ணும்
வன்மமென்ன வகையறிந்து கர்மந்தீர்ந்து
வகையுடனே மருந்துசெய்யில் வயித்தியனுகும்
நின்மூட னுனக்காற் கன்மந்தீரான்
நினைவுகெட்டு மருந்துசெய்யிற் பிணிதீராது
கன்மத்தை நிவர்த்திசெய்து மருந்துசெய்யில்
கருத்துள்ள வயித்தியனுங் கருதிப்பாரே. 100

அவிழ்தவகை

கருதுகின்ற கொடிவேலி பலந்தானென்று
கற்றாழை வேர்ப்பால்விட் டரைத்துக்கொண்டு
சுருதிபெறு நல்லெண்ணெய் படியொன்றிற்கரைத்துச்
சுகமாக மெழுகுபதந் தனில்வடித்து
நிருதியென்று தலையிலிட்டு மூழ்கும்போதில்
நெற்றியுட னிடத்தவிடி மண்டைக்குத்து
பருதிகண்ட பனிபோலே பறக்கும்பாரு
பண்பான திரியொன்று பகரக்கேளே 101

கேளடாவரிதார மெருக்கின்வேருங்
கெடியான பழச்சாற்றி லாட்டிக்கொண்டு
வாளடா திரியாக்கிப் புகையைவாங்கில்
மண்டையிடி பீனிசங்கள் கபாலசூலே
நாளடா கரப்பனது செவிநோயாலே
நாடிவந்த நீர்களெல்லாம் நலமாய்த்தீரும்
வேளடா செவிநோய்க்குக் தயிலமொன்று
விள்ளுகிறேன் பரிவாக விரைந்துகேளே. 102

செவிநோய்க்குத் தைலம்

விரைந்தெருக்கின் வேரோடு முருங்கைநொச்சில்
வெண்தோன்றிக் கிழங்கினுடன் துளசிப்பச்சை
நிறைந்தகுரு பாகலொடு கருவீழியிஞ்சி
நிகராக வகைக்குழக்குச் சாறுவாங்கு
சிரந்தனக்கு எண்ணெயொருபடியிற்கூட்டிச்
சீராக மெழுகுபதந் தனில்வடித்து
சுரந்தசெவி தனில்வார்த்துப் பஞ்சடைக்கில்
செவிநோய் நீர்ப்பாய்ச்சலது சுழன்றுபோமே. 103

சூல்நோய் வரலாறு

சுழலாமல் பெண்களுக்குக் கெற்பநோய்தான்
சூழ்ந்துவந்த கருமத்தைச் சொல்லக்கேளு
அழலாலே விந்துவகை யழித்தபாவ
மஞ்சாமற் பாலகனைக் கொன்றபாவம்
குழவியிளம் பிஞ்சுபூப்பறித்தபாவங்
கோவினங்கள் பருகும்பால் குடித்தபாவம்
விளைவான விளம்பயிரை யழித்தபாவ
மேதினியில் மலடான விந்தைதானே 104

கன்ம விலக்கம்

விந்துதனை யழித்தகன்மந் தீரவென்றால்
　　விள்ளுகிறேன் பாலகர்க்குச் சங்குபாலும்
நந்திபெருங் கணபதிக்கோர்மண்டலந்தா
　　னலம்பெறுங்கெற்பிணிக்குங் குழந்தைக்கன்னஞ்
சுந்தரமாம் புருடருக் கன்னதானம்
　　சூல்பசுவுக் கன்னம்பாற் பசுவுக்குப் புல்
சிந்தைபெறுந் தேவிக்குச் சொர்னக்கிள்ளை
　　சிவபூசை விஷ்ணுபூசை செய்துகொள்ளே 105

செய்திடுவாய் சாத்தாவுக் கிடுக்கும்பிள்ளை
　　சேயிழைபோ லுருவமொன்று சிறுவர்க்கெல்லாம்
நெய்பழமும் பொரிகடலை பயறுதேங்காய்
　　நியமமுடன் சிவத்தலங்கள் தெரிசித்தேறல்
எய்துதர்ம மித்தனையும் செய்யும்போதி
　　லெடுபட்டு வோடுமடா கருமமேது
மைவிழியா ளுதரத்தில் வரும்நோய்தீர
　　மார்க்கமொன்று சொல்லுகிறேன்மருந்துதானே.106

அவிழ்த வகை

மருந்தான மருந்தொன்று மிதற்கீடல்ல
　　மகத்தான சந்தான காணிபோலாந்
திருத்துகின்ற வுருவியப்பு மெள்ளினுப்புந்
　　திருகுகள்ளி யிலைக்கள்ளி சித்திரமூலங்
குருந்தான சாரணையுந் தைவேளை நொச்சி
　　குறிஞ்சானு மேனியுடன் கொத்தானிஞ்சி
விருந்தான வீழியொடு தேவதாரம்
　　வெண்ணொச்சி வேருடனே வெள்ளெருக்கின்வேரே
107

நொச்சியொடு வகைவகைக்குச் சாறுபடியொன்று
　　நுண்மையுள்ள வுப்பதுவும் பலங்கால்வீதம்
கொச்சிமஞ்சள் குளவிந்த மோமங்காயங்
　　குருவான விந்துப்பு வளையலுப்பு
மெச்சுகின்ற யெவாட்சாரஞ் சத்திச்சாரம்
　　வேணுமென்ற நவாச்சாரஞ் சீனக்கார
முச்சிதமாஞ் சவுக்காரங் கரியசீரக
　　முந்தசுக்கு மிளகுவசம் புழுவையேலம். 108

ஏலமுடன் வால்மிளகு கடுகிராம்பு
மித்தனையும் வகைவகைக்குப் பலங்கால்வீதஞ்
சாலவிதை யிளவறுப்பாய்ச் சூரணித்துச்
சந்தான கரணியென்ற சாற்றிற் சேர்த்துச்
சீலமுள்ள கொம்மட்டிக் காய்ச் சாறுநாழி
சிவதைபலம் வேள்ளுள்ளித் தயிலம்நாழி
கோலமுடன் பாகதனைக் கிண்டி கிண்டி
குறுகியது வரும்போது கூறக்கேளே. 109

கூறுன வாவினெய் படியொன்று விட்டுக்
குழம்பாக மெழுகுபதந் தன்னில்வாங்கே
யாறுகிற பதம்பார்த்துப் பீங்கானில் வைத்து
அப்பனே யின்னமொரு மருந்துகேளு
மாறுகிற தோடையுடன் பிரமிசிவன் வேம்பு
மைந்தனே யமிர்தவள்ளி வகைபடிதா னென்று
மேறுகின்ற வாவினெய் படியொன்றுவிட்டு
இயல்பான குளவிந்த மொருபலந்தான் போடே.110

போட்டுடனே கிண்டியது மெழுகுபதமானுற்
புகழாக வேயெடுத்துப் புகலக்கேளு
நாட்டியே குளித்தநாள் மூன்றுநாள் கொண்டு
நலமான லேகியத்தைச் சுண்டக்காய்வீதம்
மூட்டியே பத்துநாட் கொள்ளும்போது
முனையான கெர்ப்பநோய் முறையிட்டோடு
மீட்டுடனே மருந்துக்குப் பத்தியந்தான்
மிளகுள்ளி கொறுக்காயுந் துவரைகோழி. 111

கோழியிட மிளகுநீர் சுத்தியாற்றிக்
குடித்திடவே பால் கஞ்சி குளிர்ந்தசலமாகும்
நாழியிலே புளிகாடி புகையிலையுமுப்பும்
நன்மைபெற நீக்கிடவே நளினமாகும்.
பாழியிலே போகாது பாலருண்டாம்
பஞ்சிலிட்ட தீயதுபோல் நோய்கள் தீரும்
வாழ்விலே யிதுவாழ்வு கெர்ப்பநோய்க்கு
மருந்தினிமேல் வேண்டாங்காண் வயித்தியர்க்கே.112

காமகேசரி குளிகை

வயித்தியரே யானுக்காற் சொல்லக்கேளு
மாநிலத்திற் புருடருத்குத்தாதுவிர்த்தி
பயிற்றுவேன் சிறுபூனைக் காலிவித்தும்
பார்வளருஞ் சூரிவித்தும் நீர்முள்ளிவித்தும்

செயித்திடவே முருங்கைவித்தும முக்கருவித்துஞ்
செம்முள்ளி வித்துடனே நெருஞ்சில்வித்து
முயித்திய வூமத்தில் வித்தோரிதழின்வித்து
முற்றகஞ்சா வித்துடனே யாவரையின் வித்தே. 113

வித்தென்ற முள்ளிவித்துஞ்சக்கின்வித்தும்
முசுமுசுக்கை வித்துடனே யனிச்சம்வித்து
மத்தென்ற வில்வவித்தும் நெல்லிவித்து
மழகான வகத்திவித்து மத்திவித்து
முத்தென்ற வரசின்வித்து மாலின்வித்து
முன்னழிஞ்சில் வித்துடனே புரசின்வித்தும்
பத்தென்ற முசுட்டைவித்துஞ் சுண்டை திரிபலையும்
பகர்ந்த கருவேல்வன்னி மருதுமாமே. 114

மருவான வாத்திவித்தும் நிலப்பனையின் கிழங்கும்
வளமான வமுக்கருவேர் கறுநிற்குண்டி
பருவான சமுத்திராப் பழம்வாகைப் பிசினும்
பரிவான முருங்கைப்பிசின் விளாம்பிசினி யாகும்
செருவான வேலின்பிசின் வேப்பம்பிசினி யோடு
சிறுவிலவின் பிசினியோடு சாதிக்காய் சாதிபத்திரி
தருவான குரோசானி தேற்றான்வித்துந்
தானமிர்த சருக்கரையும் சீனியாமே. 115

சீனியொடு கற்கண்டு குந்திரிக்கம் திராட்சி
சிவன்வேம்பு சென்னயுருவி வித்து
மாநிலத்தி லிவையெல்லாங்கொண்டுவந்து
வகைகழஞ்சி வீதமடா அப்பிரகச் செந்தூர
மேனமுடன் கழஞ்சியதை யெடுத்துக் கொண்டு
என்னசொல்வேன் காமப்பூ கழஞ்சி கூட்டி
நானிலத்தில் முந்திரியின் கனிச்சாற்றா லாட்டி
நாற்பது நாழிகையரைத்துக் கடலையென்னே. 116

என்னவே யுருட்டிநிழ லுலர்த்திக் கொண்டு
இதமான வெள்ளியிட சிமிழில் வைத்துச்
சொன்னதோ ராவின்பால் தன்னிற் கொள்ளச்
சுகமாகப் புகையிலையும் புளியுந் தள்ளு
அன்னமுடன் பால்கூட்டி யமுது கொள்ளு
அனுபோக மாயிரம்பேர் நாளொன்றுக்கு
முன்னைவரும் விந்துவுந்தான் சிரசிலேறு
மூதண்ட குளிகையிது காமகே சரியே. 117

சரியாக விதற்கீடு வொன்று மில்லை
தாதுவிர்த்தி யில்லாட்டாற் சடலம் போச்சு
மரியாத விந்துவது சிரசி லேற
மகத்தான குளிகையது வளமாய்ப் பண்ணு
மரிதான மங்கையரு முவந்து கொண்டா
லாயிரம்பேர் சென்றுலு மடங்கா தப்பா
துரிசான சரக்குளிகை போலே யாடுஞ்
சொர்னம் போற்றேகமுமாந் துரைமதனவேளே. 118

வேளென்ன விதற்கீடோ தம்பனந்தா னென்ன
வெகுசுறுக்கு வெகுசுறுக்கு நளினமெத்த
வாளென்ற விழியுடைய மடவாரெல்லா
மையல்கொண்டு பின்தொடர்வார் மகத்துவமெத்த
வாளென்ற பெண்களைத்தா னனுபோ கிக்கி
லடுத்துடனே விந்துவிழு மரிவைமனம் வேரும்
தேளென்ற விந்துவது தம்பனமே யானுற்
செகத்திலுள்ள மாதர்களுன் வசமென் பாரே. 119

சுரநோய் வரலாறு

பாரிலுள்ள மனிதருக்குச் சுரந்தான்வந்த
பரிசதுதான் சொல்லுகிறேன் பண்பாய்க் கேளு
நீரிலுள்ள வுயிர்கள்தமை ரவிநெருப்பி லிட்டும்
நிணமதனை யரிந்திட்டும் நீர்கொடா விட்டும்
பாரிலுள்ள மரங்களததோ லுரித்தல்
பசித்திருப்போர்க் கீயாமலுண்ட பாவஞ்
சூரியனை நினையாத தோடந் தோடஞ்
சூழ்ந்துதடா சுரதோட சூட்சந் தானே. 120

தானென்ற வித்தீட்சை சொல்லக் கேளு
சார்வான வழிதோறுந் தண்ணீர்ப் பந்தல்
வானென்ற மரங்கள்வைத்தல் நந்தவனம் வைத்தல்
வத்திரதானங் குடைகள் மகிழசெருப்பு மீதல்
மானென்ற கந்தனுக்கு மபிடேகங்கள்
மகத்தான சூரியனமஸ் காரம் பொங்கல்
ஊனென்ற வேதியருக் கிளநீர்சந் தனங்க
ளுத்தமனே பால்பழங்கள் சருக்கரையு மீயே. 121

அவிழ்தவகை

ஈய்ந்தபின்பு சிதம்பரத்தை யெழுதிக் கட்டி
யிடுகாட்டி யிளநீரைக் கண்திறந்து வைத்து
வாய்ந்தசிரந் தனக்கவிழ்தஞ் செய்தேயீந்தா
லகலுமடா சுரமென்ப தடங்க லுந்தான்

காய்ந்தசுர சந்தானஞ் சன்னிரா சாங்கங்
கருதக்கேள் கருப்பூரம் ரசங்கெந்தி லிங்கந்
தோய்ந்தபச்சை நாபியுட னிர்விடம்பாடாணந்
துலங்குமரி தாரமொடுகெவுரி தட்டி
பாய்ந்தபொரி காரமொடு சீனக்காரம்
பசுவின்கோ ரோசனையும் புழுகு கூட்டே. 122

கூட்டியதோர் மருந்திதெல்லாங் குமரிச் சாற்றிற்
கூசாமற் கிழிகட்டி யவித்துக் கொண்டு
மூட்டுவாயி டைகழஞ்சி குழிக்கல்லில் விட்டு
முலைப்பாலிற் சாமமொன்று முன்ன மாட்டி
சூட்டுக்கு வெய்யலிலே யுலரப் போட்டுச்
சுகமாய்ப்பின் செம்முள்ளிச் சாற்று லாட்டி
நாட்டியே சாமமொன்று வுலரப் போட்டு
நலமான கரிசாலைச் சாற்றிலாட்டே. 123

சாற்றினு லொருசாம முலரப் போட்டுத்
தக்காளிச் சாற்றினு லரைத்து ருட்டிப்
போற்றியே யுண்டைபோ லுளுந்தள வுருட்டிப்
புதுச்சட்டி தனில்வைத்து நிழலு லர்த்தி
ஏற்றியே செப்பதனி லடைத்து கொண்டு
யீசுவரிக்குப்பூசைசெய்து இஞ்சிச்சாற்றில்
மாற்றியே கொடுத்திடவே சுரமுதலாயுள்ள
மகத்தான சன்னியெல்லா மருண்டு போமே. 124

அண்டத் தைலம்

மருளவே பத்தியத்தைச் சொல்லக் கேளு
மைந்தனே யாட்டுப்பால் கஞ்சி யாகுஞ்
சுருளவெந்தக் கஞ்சியிலே யதிமதுர மேலஞ்
சுக்கிட்டுக் காய்ச்சியே கொள்ளச் சொல்லு
அருளான சுரக்குளிகை மெத்த வுண்டு
ஆச்சரிய மிதைப்போலே யாகாதப்பா
இருளான சன்னிக்குத் தயிலமொன்று
இயம்புவேன் கோழிமுட்டை யைம்பதுதான்
வேண்டே. 125

வேண்டியே செங்கருவை யெடுத்துக் கொண்டு
வெள்ளுள்ளிப் பலம்பத்துத் தைலம் வாங்கி
யாண்டதொரு முட்டையுட தயிலம் வாங்கி
யப்பனே வேப்பெண்ணெய் யளந்து கூட்டி

யேண்டதொரு பூநாகஞ் சன்னி நாயக
மிதமாகக் குழித்தயில மிறக்கிக் கொண்டு
பூண்டதொரு தயிலமெல்லா மொன்ருய் விட்டுப்
புனல்முருங்கைப் பட்டையுடன் சிவனூர் வேம்பே. 126

வேம்புடனே யெருக்கின்வேர் மூன்றுங் கேளு
விருதான குழித்தயில மிறக்கிக் கொண்டு
பாம்பினுட கண்டமொடு வசம்புங் கேளு
பலமொன்ருேர் வகைக்கதிலே பொடித்துப் போட்டுச்
சோம்பாமற் காய்ச்சியே மெழுகுபதந் தன்னிற்
சுடவைத்துக் காசெடைதா னுள்ளுக்கீந்து
ஏங்கியேபே கோமற் பதைப்புத் தோறு
மிட்டிடவே விடமென்ற சன்னி வாதம். 127

வாதமொடு வலியஞ்சு மொக்கப் போச்சு
வையகத்திற் சன்னிவகை மாண்டுப்போச்சு
ஏதறிவான் வயித்தியன்தான் தயில மொன்று
யிட்டிடுவான் சன்னிவகை தீரு மோதான்
ஆதரவா யித்தயிலம் வைத்துக் கொண்டு
ஆடலாம் வயித்தியத்துக் காசானுக
சூதறிந்து நாடிகண்டு கருமந் தீர்த்துச்
சுருதியாற் செய்தவனே வயித்திய ஞமே. 128

பாண்டுநோய் வரலாறு

நாமொன்று சொல்லுகிருேம் பாண்டு வந்த
நலமான கருமமது சொல்லக் கேளு
தாமென்ற தாய்தந்தை மனம்நோகச் செய்தல்
தரணிதனி லுள்ளவர்க்கும் வம்பே சொல்ல
லாமென்ற வுறுப்பழித்தல் செவிசு வாச
மற்றுப் பொய் சொல்லாங்காரஞ் செய்தல்
வேமென்ற கருமமது பித்த மேறி
வெளுத்துதடா வெப்புமிஞ்சிக் கைகாலோய்வே. 129

கன்ம நிவர்த்தி

ஓய்வாலே யெப்பிளைப்பு மிகுந்து தோன்றி
யுடம்பெங்கும் நீர்ந்து விடம் போல வீங்குங்
காய்வாலே யெடுத்ததொரு நெய்தானப்பா
கருமமாம் நோய்தீருங் கருத்தைக்கேளு
தாயாரும் பிதாவுடனே தீர்த்தவாசஞ்
சந்நிதியில் நெய்விளக்கு சகஸ்திர வோரு
மாயிரம்பேர் வேதியருக் கன்ன தானம்
மழகான கோதான மஞ்சுதானே. 130

அவிழ்த வகை

அஞ்சுதிங்கள் சோமவார மாறுமுக வற்கு
மறுபத்துமூவருக்கு மமுதுபோசனம்
நெஞ்சில்விசு வாசம்வைத்துச் சிவனடியார் பாதம்
நேசமாய்ப் பூசிக்க நிவர்த்தியாகும்
வஞ்சமறச் சொல்லிவிட்டேன் மருந்துகேளு
வளருகின்ற காந்தமது பலந்தான் வாங்கி
இஞ்சொலுடன் சுத்திசெய்து பிறகுகேளு
எலுமிச்சம் பழச்சாற்றி லிரண்டுசாமம். 131

சாமமது ரெண்டரைத்து வில்லைசெய்து
சாதகமாய் குதையில்வைத்து கெசபுடமாய்ப் போடு
வாமமுடன் தீயாற்றி யெடுத்துப் பின்பு
வரிசையாய்ப் பொரிகாரங் கழஞ்சியொன்று
நாமென்ற வரிதாரங் கழஞ்சி யொன்று
நலமான பொற்றலையின் சாற்று லாட்டிச்
சேமமுடன் வில்லைதட்டி யோட்டில் வைத்துத்
திறமாகக் கெசபுடமே செய்தி டாயே. 132

இட்டபின்பு யிதையெடுத்து வீரங்கால்கூட்டி
யியல்பான பொற்றலையின் சாற்றுலாட்டி
திட்டமுடன் வில்லைசெய்து புடத்திற் போடு
செந்தூரம் பவளம்போற் சிவந்து காணும்
பட்டிடவே கொடிவேலி பலந்தா னென்று
பரிவான தகரந்தான் பலமோ வொன்று
சட்டமுடன் திரிகடுகு திரிப லாதி
தான்வகைக்குப் பலமொன்று தாக்கி டாயே. 133

தாக்கியே சூரணமாய்ச் செய்துகொண்டு
சம்பழத்தின் சாறுபடி கையான் சாறு
வாக்கியே படியொன்று கீழா நெல்லி
வகைவகைக்குப் படியொன்று பேய்ப்புடலின் சாறு
தேக்கியே படியொன்று முசுக்கைச் சாறு
திறமான படியொன்று நெல்லிச் சாறு
மாக்கியே படியொன்று மாவின்பா லொன்று
மரகரா சட்டியிலே விட்டுக் காய்ச்சே. 134

காய்ச்சியே தூவியிடு சூரணத்தைக்
கனலிலே மெழுகுபதங் கண்ட போதே
யாச்சியமாம் பசுவினெய் யரைப்படித்தான் வாரு
அழகான தேனதிலே படிகால் வாரு

வாச்சுதே பீங்கானில் வழித்து வைத்து
மக்களே கழஞ்சியொன் றெடுத்துக் கொண்டு
பாய்ச்சியே செந்தூரம் பணவெடைதான் வைத்துப்
பாங்காக நாளொன்றுக் கிருநேரங் கொள்ளே. 135

நேரமொரு மண்டலந்தான் புளியா காது
நெய்யுற்ற மீனுகாதுப்பா காது
காரமுள்ள புகையிலையுங் கஞ்சாவாகா
காதலியா ராசைதனைக் கடக்கத் தள்ளி
வாரமுள்ள மோர்காய்ச்சி முருங்கைசிறு கீரை
வளமான நெய்த்தொலியுஞ் சுறுமீ னேடு
தாரமுள்ள மிளகுள்ளிகறி கூட்டித் தின்று
சத்துருவாம் பாண்டுவகை தவறிப்போச்சே. 136

தவறிப்போம் பித்தமுடன் காமாலை சோகை
சயங்காசம் விடபாகஞ்சரசகுன்மம் வாய்வு
மவறிப்போம் வாகமுடனெஞ்சுவலி, குட்ட
மஞ்சுவகைப் பாண்டதுவு மஞ்சும் பாரு
துவரிப்போந் தயிலமொன்று சொல்லக் கேளு
சுகமான கொடிவேலி பலந்தானென்று
தவறிப்போம் பசுவின்பால் தானுட்டி
நல்லதிரி பலவகைக்கோர் பலமாய் வாங்கே. 137

வாங்கியே முன்பாலால் மைபோ லாட்டி
மைந்தனே பசுவிநெய் நாழிவிட்டு
ஆங்கியே மெழுகுபத மான வாறே
யழகாக வடித்துடனே மூழ்குவாய் நீ
மாங்கியே மூன்றுநாள் முறையாய் மூழ்கு
பாண்டுவகை வெளுப்பெல்லாம் பறந்துபோச்சு
ஓங்கியே தாதுவெல்லாம் விருத்திப்பாச்சு
வுலகத்தி லுள்ளவருக் குறுதிதானே. 138

கிராணிநோய் வரலாறு

உறிதியாங் கிராணிவகை வந்த தேது
வுலகத்தி லுயிர்வதைக ளூனத்தின்னல்
பொறுமையுள்ள மங்கையரைக் கற்பழித்தல்
புண்ணிய மழித்தல்பூ மரங்களழித்து
மறுதியாய்மழை முறித்தும் நீரில்மலம்விட்டு
மன்னதை யிறைத்ததனு லணுகுந்தோட
மிறுதியாமித்தோடம் நீங்குஞ்செய்கை
யியம்புவே னூறுசெடி யலரி வையே. 139

கன்மநிவர்த்தி

வையடா பால் குடந்தா னூறு வாங்கி
வாகாகச் சிவனுக்கங் கபிடேகஞ்செய்
மெய்யடா தாம்பூல மாயிரம்வேதியர்க்கு
வெண்ணெயடா பாக்களவு கத்தூரி பாலகர்க்குச்
செய்யடாவிப்படியேசெய்தாயாகில்
தீருமடாசென்மத்திற்செய்தபாவம்
பொய்யடாவென்றெண்ணிவிடுவாயாகில்
புந்தியிலேவந்தநோய்போகாவாறே. 140

அவிழ்த வகை

வாறுன கிராணிக்கு மருந்து கேளு
வையகத்தில்நோயாளி மயங்கவேண்டாங்
கூறுனகெந்தியொன்றுமரப்பொடிதான்மூன்றுங்
குருவானலிங்கமொன்றுகாந்தமைந்து
வீறுனநாகமொன்றுமனேசிலைமூன்று
மெய்யாகத்தாளைவேர்பாலாலாட்டி
நீறுகக்கெசபுடமாய் மூன்றுசெய்தால்
நின்மலமாய்நீறிப்போமெடுத்துக்கொண்டே. 141

கொண்டபின்புதிரிபலையு முத்தக்காசுங்
குந்திரிக்கந்திரி கடுகுங்கோட்டஞ்சீரகமுங்
கண்டதோரதிமதுரஞ்சாதிக்காயுங்
கஞ்சாவும்பத்திரியுங்கிராம்புமேலம்
விண்டதோர்வெட்பாலைஅபின்தேவதாரம்
விசையானகூகைநீறும்வில்வப்பிஞ்சும்
நண்டானபருத்திவிதையத்திப்பிஞ்சும்
நாவல்விதைமாம்பருப்பும்புளிவிதைமேற்றேடே. 142

தோடானமாவலையின்பிஞ்சினேடு
சொல்லுகின்ற பொன்முசுட்டைவேர்விளாம்பிசினும்
பூடானவதிவிடைய மிலவின்பிசின்பிஞ்சும்
புகழானநறுநிண்டிநிலப்பனையின்கிழங்குங்
காடானவாவாரைவித்தினேடு
கஞ்சாவின்வித்துடனேகற்கடகசிங்கி
கூடானகடலிறைஞ்சிபெருமரத்தின்பட்டை
குளவிந்தமஞ்சளொடுகூட்டுவகைகழஞ்சே. 143

கழஞ்சானமருந்தெல்லா மிளவறுப்பாய்வறுத்துக்
கட்டாகச்சூரணித்துக்கடகவைத்து
இளங்கஞ்சாச் சாறுநாழி யாட்டின்பால் நாழி
யெருமையுட தயிர்நாழி விட்டுக்காய்ச்சி

விளஞ்சதொரு சூரணத்தைப் பாகிற் சேர்த்து
விட்டதிலே யெள்ளெண்ணெய் படியரையு மாகக்
குழைஞ்சதொரு மெழுகுபத மாகவாங்கிக்
கூறுன லேகியத்தைக் கழஞ்சியள்ளே. 144

அள்ளியே லேகியத்திற் பணவெடை செந்தூர
மைந்நான்கு நாள்கொள்ளக் கிராணியதி சாரந்
துள்ளிவிழு மிரத்தமுடன் நீரின் பாய்ச்சல்
துன்னிவிடு முறுப்புடனே மூலச்சூடும்
முன்னிரைச்சல் வாய்வுடனே பொருமல் செரியாமை
யோகோகோ நீர்விடங்கள் முறிந்து போகும்
கொள்ளியென்ற கடுப்பெல்லா மெங்கேபோச்சு
கொப்பளித்த வலிபோச்சு கூர்மைபாரே. 145

சிரநோய்முதலிய கன்மவரலாறு

கூர்மையுள்ள கந்தமொடு நாக்குக்கன்னங்
கொப்பளித்தநோய் விதனங் குலுங்கும்பல்லும்
நீர்மையுள்ள கண்ணேயுங்கன்னப் புற்றும்
நிறைந்தகன்ன விப்புருதிபக்க ச்சூலே
பார்மைந்த சூலேயொடு பல்லறணேப்பற்குத்து
பகருதந்தமானமொடு சிங்கிரோகம்
போர்மையுள்ள தந்தக்கரை குறும்பி கெந்தம்
பொல்லா துதிவந்தால் பொசிப்புப் போச்சே. 146

போச்சென்ற விடத்தில்வருங் கன்ம மேது
பொய்வசனம் கோபமிஞ்சிப் பிறரை வைதல்
சூச்சமுள்ள பேச்சுகளேப் பிறருக் கீதல்
சொல்மறுத்தல் தூடணித்த விடும்பு பேசல்
காச்சுகின்ற நஞ்சுகளே மனிதர்க் கீதல்
கன்மமடா வாயில்வந்து கட்டும் பாரு
நாசமென்ற கன்மமது நிவர்த்தி செய்ய
நாட்டுசிவ தோத்திரந்தா ஞற்பான் நாளே. 147

நாற்பதுநாள் சிவன்கோயில்லிங்கப் பிரதட்சணம்
நாக்குருசி யானபண்டம் நல்லோர்க் கீதல்
காப்பதுபோல் பலரையுமே கருதிக் கொள்ளல்
கணபதிக்குப் பொரிகடலே யுண்டை தேங்காய்
மாப்பிரிய மாய்ப்படைத்து மருந்துசெய்யில்
மருளான நோய்களெல்லா மருண்டு போகுந்
தீர்ப்பதற்கு மருந்தொன்று புகலக்கேளு
செப்புவேன் தளர்ந்தபல்லேப் பிடுங்கிப் போடே. 148

அவிழ்த வகை

போட்டபின்பு யெருக்கின்பால் குத்துக் குத்துப்
புழுவிருந்தால் செத்துப்போம் பிறகு கேளு
மூட்டியதோ ரெயிறுதனிற் றடிப்புத் தோன்றில்
முதிர்ந்தவெள்ளிக் கம்பதனை வெதுப்பித் தேய்த்துக்
கேட்டபின்பு மிளகு சுக்கு கோரம மூன்றுங்
கிருபையுடன் வறுத்துடனே பொடித்துத் தேய்த்துச்
சுட்டபின்பு நாவற்றூேல் போட்டுக்காய்ச்சிச்
சுகமாகக் கொப்பளிக்க வீக்கம் போமே. 149

வீக்கமுட னெயிறுதனிற் புண்ண தாகி
வெகுகடுப்பும் பல்கூச்ச மிகுந்த தானு
லாக்கமுள்ள குந்திரிக்கப் புகையைக் காட்டி
யாலரசத் தியித்திப்படை யிட்டுத்தூக்க
மாவகை வகைக்கோர் பலமே தூக்கித்
தூயசலம் விட்டுநன்றாய்ச் சுருக்கிக் காய்ச்சி
தாக்கிநீ யெட்டிலொன்றாய் வடித்துக் கொண்டு
சாதகமா யெள்ளெண்ணெய் படிதான் வாரே. 150

படியான மெழுகுபதந் தன்னில் வாங்கிப்
பாங்காகக் கொப்பளிக்கப் பல்நோய் தீருங்
கொடிதாகும் நாக்கில்வருஞ் சிங்குவை ரோகங்
குடிபோகக் கருத்தொன்று கூறக் கேளு
நெடிதான வமுக்கருவேர் சுக்கு மஞ்சள்
நேரான வசம்புடனே நிறுத்துக் கொண்டு
சுடவறுத்துப் பொடியாக்கி நாவிற் றூவி
சுணையறவே தேய்த்திடவே சுகமாம் பாரே. 151

சுகமான யெண்ணெயொன்று சொல்லக் கேளு
சொல்லுவேன் கருவேலின் பட்டைபலம் பத்து
முகமான மருதமரப்பட் டைபலம்பத்து
முகந்ததிரி புரமெரித்தான் பலம்பத் தாகும்
செகமான குமிழம்வேர் பலம்பத் தாகுந்
திறமாக வெருக்கின்வேர் பலம்பத் தாகி
மகமான மருக்காரை பலம்பத் தாகும்
அத்தியுட பட்டையது பலந்தா னென்றே. 152

வங்கச் செந்தூரம்

ஒன்றான கருங்காலிப் பட்டைபல மொன்று
முருவியது பலமொன்று கடுக்கா யொன்று
நன்றாக விதையெல்லா மிடித்துப் போட்டு
நல்லதண்ணீர் தூணிவிட்டெட் டொன்றாய்க்காய்ச்சிக்

கொன்றிடா நல்லெண்ணெய்யிரு நாழி விட்டு
குணமதுர மேலமந்திட்டிவெள்ளி லோத்திரம்
குன்ருத சுக்கோமம் வகைக்குநாற் கழஞ்சு
குறிப்பாக வரைத்திட்டு குறுகக் காய்ச்சே. 153

காய்ச்சலே மூன்றுநா ளூறச் செய்து
கருகாமல் மெழுகுபதந் தனில்வ டித்துப்
பாய்ச்சியே வாயில்விட்டுக் கொப்ப ளித்துப்
பலகாலு மூட்டிடவே வாயில்வந்த நோயு
மாச்சுதே நாக்கில்வந்த நோய்க ளாறு
மடவாகத் தீரும்பல் லசைவு தீரு
மேச்சுதென்ற நோய்களெல்லா மொக்கப் போச்சு
இருகன்னந் தனில்வரும்நோய்க் கியம்பக் கேளே. 154

இயம்பக்கே ளிருகழஞ்சு வங்கந் தானு
மிட்டுருக்கோர் சட்டியிலே அவ்வெடை யே சூதம்
நயம்பெறவே தொந்தித்துப் பலமொன் ரேமம்
நலமாகத் தூவியே வறுப்பாய் சாமந்
தயங்காமல் நாயுருவி சிவந்த தாகத்
தானறுக்கிக் கிண்டியே சாம மொன்று
சுயம்பதென்ற மருதந்தோலிடித்துத்தூவி
சுருதியால் சாமமொன்று வறுத்தி டாயே. 155

வறுத்திடவே பற்பமதா மதனைவாங்கி
வளமான வரிதாரம் பூரம் ரெண்டும்
நிறுத்திதுநீ சமனெடையாய்க் கூட்டிச் சேர்த்து
நிலையான சம்பீரச் சாற்ரு லாட்டி
பொறுத்திடவே பில்லைதட்டி ரவியிற் காய்ந்தா
லுறுதியாமோட்டில்வைத்து மேலோடு மூடி
செறுத்திடவே சீலைசெய்து கெசபுடமே தீர்ந்து
தீயாறியெடுத்திடவேசிவக்கும்பாரே. 156

சிவக்கவின்னஞ் சொல்லுகிறேன் தகரைச் சாற்றில்
திறமாக வரைத்துவில்லை முன்போற் றீரு
பவக்குறைகள் திருமடா மூன்றுபுடம் போடு
பண்பான சிவபூசை பண்ணி யேதா
னுவப்பான பணவெடைதா னுள்ளே கொள்ளு
ஒருநாளைக் கிருநேர முரைத்துத் தின்னு
துவப்பான புகையிலையும் புளியு மாகா
சூழ்கின்ற மீனிறைச்சி நீக்கச்சொல்லே. 157

சொல்லுவது மண்டலந்தான் சந்த ஞதி
சுருக்கான தைலம்வைத்து முழுகச் சொல்லு
மல்லுவது குழம்பொன்று சொல்லக் கேளு
மதிகவெள்ளைக் குந்திரிக்க மெண்ணெயிலே தூவி
மல்லுவது வகைக்கொண்டு தேய்க்கவெண்ணெய்
வழித்துநீ யொருபலந்தான் மெழுகை வாங்கி
சொல்லுவது பச்சையொடு சூடன் கூட்டித்
தொகைக்கிரண்டு வகைக்குமரைப் பலமாய்த்
தாக்கே. 158

ஆக்கிரண்டு பொடியதுவுந் தூவித் தூவி
யரைத்திடுவாய் சாமமொன்று தேனைவிட்டு
தாக்கியே புங்கம்பால் சாமமொன்று
சாந்தசமா யரைத்தொரு சிமிழில்வைத்து
நோக்கியே சீலையிலே யூட்டிப்போடு
நுணுக்கமடா கன்னத்தில் வரும்நோய்க்கெல்லாம்
பாக்கியமாம் புகையொன்று சொல்லக் கேளு
படர்சாதி லிங்கமுடன் தாளகஞ் சூடன் 159

சூடனெடு துரிசிதுத்தம் நீலங் கூட்டிச்
சுக்கோமம் வகைக்கழஞ் செருக்கின்பாலால்
நாடியே மைபோ லாட்டிக் கொண்டு
நல்லபழஞ் சீலையிலே யூட்டிக் கொண்டு
வாடவே நிழலுலர்த்தா யுலர்த்திக் கொண்டு
வளமான திரிபோலே உருட்டிப்போடு
சேடான தீக்கொளுத்திப் புண்ணிற்காட்டிச்
சென்றபின்பு குழம்பதென்ற சீலை போடே. 160

சீலையது போட்டிடவே சிவந்து போகும்
சீழ்சலங்க ளொடுவுடனே புரையுந் தீரு
மாலமாய் நோய்களெல்லா மகன்று போகு
மரிதான மருந்திதுதா னறிந்து பாரு
வாலையுட பூசையப்பா செய்ய வேணும்
வைத்தியரா யிருந்தவர்க்கு வைரவனும் வேணு
மோலமிட்ட பூநீறு செய்ய வேணு
முறுதியாஞ் செந்தூர முண்மை தானே. 161

கரப்பான் முதலிய நோய் வரலாறு

உண்மையென்ற கரப்பனெடு வண்டுகடி குட்ட
முலகிலுள்ளோர்க் கிதுவந்த வுண்மை கேளு
தண்மையென்ற தில்லாம லுதாசினங்கள் பேசல்
சற்குருவைத் தூடணித்த சண்டா ளத்தால்

வண்மையென்ற வழியிலேமுள் ளிட்டு வைத்தல்
மரந்தழைகள் பூவுதிர வடித்த பாவம்
பெண்மயிலே வண்டுகடி விடமுஞ்சேர்த்து
பிலத்தசொறி குட்டமது பிலத்த வாறே. 162

வாறுன நீர்விடம்போல் வந்த தோட
மாற்றவொரு நிவர்த்திசொல்வேன் மருவிக் கேளு
கூறுன கணபதிக்கு நெற்பொரி யவலுங்
கொட்டையென்ற தேங்காய்தான் பத்துநூறு
வீறுன யிளநீரும் பத்து நூறு
வெள்ளியென்ற கிழமையிலே பழந்தான் நூறு
சாறுன விளநீரில் முப்பழமும் பிசைந்து
சண்முகனுர்தமையனுக்கபி டேகஞ் செய்யே. 163

செய்தபின்பு தேங்காயையெடுத்துச் சூறை
சிதறவே உடைத்திடுவா யாயி ரந்தான்
கொய்தமலர் சிரசுதனிற் பொரியுங் கொட்டிக்
கூட்டியெல்லாம் வாரியே கொள்ளே யென்று
பையல்களுக் கீந்தாக்காற் பாவந் தீரும்
பரிவாகத் தூபமுடன் தீபங் காட்டு
எய்ததொரு கன்மத்தை நிவர்த்தி செய்தா
விடுமருந்து சொல்லுகிறே னிதமாய்க் கேளே. 164

அவிழ்தவகை

இதமான நிலவாகை சிவனுர் வேம்பு
மியலாடா தோடையென்ற மூலியோடு
பதமான செருப்படையும் விழுதி நீலி
பாரிலுள்ள வெள்ளறுகு கரந்தை மேனி
குதமான முளக்கொமுஞ்சி வேரி னேடு
கூட்டுகிற தரையொன்று பலமொன் றுக
விதமாகச் சூரணித்துக் கார்போக மூலா
மிக்ககருஞ் சீரகமும் பலமொன் றுமே. 165

ஒன்றுகச் சூரணித்துத் தேனிற் கிண்டி
யொருபோது பாக்களவா யிருநே ரங்கொள்
நன்றுகப் பத்துநாள் தின்னும் போது
நலமாகும் வண்டுகடி விடமுந் தீரும்
பன்றுன பத்தியமாய்க் கொள்ள வேணும்
பார்முருங்கை யிலைக்காயும் பத்தியமாய்க் கொள்ள
வென்றதொரு கரப்பன்வகை பதினெட் டுக்கும்
வெள்ளெருக்கின் வேர் பொடியிற் சீனி கூட்டே. 166

கூட்டியே பத்துநாள் கொள்ளும்போது
குளகுளத்த நீர்ச்சதனம் புழுக்கள் புண்கள்
தாட்டிகமாய் தீருமடா எண்ணெய் யொன்று
சாதகமாய்ச் சொல்லுகிறேன் சார்ந்து கேளு
மூட்டியே முருக்கம்பூ வெருக்கின் பூவும்
முத்தெருக்கின் செவியுடனே கார்த்திகைக் கிழங்கு
நாட்டியே வகைக்கொரு கழஞ்சுவாங்கி
நல்லநெய் யரைப்படியில் நலமாய்க்காய்ச்சே. 167

காய்ச்சியே சிவந்தபதங் கண்டத் தின்கீழ்
கனமாக இட்டுவைத்துச் சாயங் கால
மாச்சியே யரைப்பிட்டு வெந்நீர் விட்டு
அழகாகக் குளித்துவிடு அஞ்சு நாளில்
போச்சுதேகரப்பனென்ற விடநீ ரெல்லாம்
புலவருக்கு மிம்மருந்து புகலப் போமோ
வாச்சுதே முந்நூறுஞ் சித்தர்க் காகும்
வைத்தியர்க்கே வுரைத்ததிந்த மார்க்கந் தானே.

பிளவை முதலிய நோய் வரலாறு

மார்க்கமென்ற பிளவையொடு கண்ட மாலை
மார்பிலெழு மாணியொடு கழலைப்புத்து
தீர்க்கவொரு வைத்தியந்தா னுலகி லுண்டோ
செப்பக்கே ளிவைவந்த செய்கை தன்னை
மூர்க்கமுட னுண்டையிட்டு வெடிதான் வைத்து
முனையான சரங்களெய்து முண்டை வில்லாற்
றீர்க்கமுடன் கவணெறிந்துங்கல்லெ றிந்துஞ்
சிவயோகி தனைச்சினந்துஞ் சீவசெந்துவதையே. 169

வதையான கருமத்தால் வந்த பாவம்
வளருமடா அங்கங்கே திரண்டு கட்டி
குதையான புழுக்கடைந்துஞ் சலங்கள் கட்டி
கொடியநிணம் வீதமிஞ்சி குத்துங் குத்துஞ்
சதையான தலத்தில் வந்த கரும நீங்கச்
சாற்றுகிறேன் வைத்தியரே தயவாய்க்கேளு
மதயானை போலேவந்த கருமந் தானே
மகத்தான பாவமடா மருவிக் காணே. 170

கன்ம நிவர்த்தி

மருவியதோர் கருமத்தைத் தீர்க்கச் சொல்வேன்
மயானத்தி லாடுபன்றி கோழி மூன்று
முருவியே மயானருத்திரன் பத்திர காளி
யுருவாக மாவதனு லுருவச் செய்து

கருவான பட்டுவத்திரஞ் சாத்திப் புஷ்பஞ்
சாம்பிராணி தூபமுடன் தீபங்காட்டி
திருவான பானையைந்து பால்பொங்கல் நைவேத்தியந்
தியானிப்பா யிக்குருதி சிறந்துவையே. 171

வையப்பாமுட்டையொடு வஸ்துபான
மதுக்குடந்தா னிரண்டு வைத்துமாங்கிசத்திேனாடு
செய்யப்பா முப்பலியுங் கொடுத்துத் தீரு
சிதம்பரத்தைத் தியானித்து திருநீறுபூசி
கையப்பாகேர தான மன்னதானங்
கருணையுடன் சிவாலயங் கண்டு சேவி
மெய்யப்பா சொல்லுகிறேன் தீருங் கன்மம்
வியாதிக்கு மருந்தினுட விவரங் கேளே. 172

அவிழ்த வகை

கேளென்ற சேதியென்ன கற்பூரந்தான்
கிருபையுள்ள வெருக்கின்பால் விட்ட ரைத்துக்
கூளென்ற மைபோலே யாட்டிக் கொண்டு
கொடியதோர் பிளவையிலே பூசிக் கொண்டு
வேளென்ற குதிரைலத்திக் கனப்புப் போட்டு
மிகுந்தபுகை பிடித்தவுடன் புழுக்கள் வீழும்
நாளென்ற வேப்பந்தோல் கியாழஞ்செய்து
நலமாகப்புண்ணில் விட்டுக்கழுவிப் போடே. 173

போட்டபின்பு கருப்பூரக் குழம்புபூசு
புகழாக மறுநாளுங் கழுவிப்போடு
ஆட்டபின்பு சிவக்குமட்டும் போடப்போட்டு
அழகாகச் செய்துவரி லாறிப் போகுங்
கேட்டபின்பு வுள்ளுக்கோர் மருந்துசொல்வேன்
கெந்தகந்தான் பலமைந்து சுத்திசெய்து
நாட்டபின்பு வெண்கருநீர் விட்டரைத்து
நலமாற ஓட்டில் வைத்துச் சீலைசெய்யே. 174

சீலைசெய்து மணல்மறைவிற் புடத்தைப்போடு
செயமாக விப்படிமூன்று புடம்போட்டு
ஆலயமாம் வில்வரசம் விட்ட ரைத்து
அப்பனே குக்குடந்தான் வெளியிற்போடு
வாலையாங் கெந்தகந்தா னீறிப் போகும்
வளமான சருக்கரையிற் றேனிற்கொள்ளச்
சூலையென்ற கழலையொடு பிளவை கட்டுஞ்
சூழ்ந்திருந்த வியாதியெல்லாஞ் சுழன்று
போமே. 175

சுழன்றுதடா லிங்கப்புற்றும் யோனிப்புற்றுஞ்
சொல்மார்பி லாணியொடு கண்டமாலை
கழன்றுடலிற் றிரண்டுவந்த வியாதியெல்லாந்
தான்கெட்டோ மென்றுநீர்வற்றிப்போகு
முழன்றுநின்ற புழுக்களெல்லா முருண்டுபோகு
மொருநாளும் வாராது வுடவ்வச்ரகாய
மழன்ற கெந்தி பற்பமிது கொள்ளும்போதி
லானசிறு பயறுடனே யாவின் பாலே. 176

பாலாகுந் தூதளங்காய் முருங்கைக் காயாம்
பச்சைமீ னிறைச்சிதனைப் பார்க்க லாகா
நாளாகும் நாற்பதுநாள் கொண்ட பின்பு
நல்லசந்த ஞதிவைத்து முழுகச் சொல்லி
வேலான விழிமடவா ராசை யாகா
விட்டுவிடு நூறுநாள் மெய்த்தொ டாதே
காலான நோய்தீர்த்த பண்டி தர்க்குக்
கனகதா னங்கொடுத்துக் கருதிக்கொள்ளே. 177

கண்ணோய் வரலாறு

கருதியதோர் கண்ணில்வந்த வியாதி கேளு
காரணந்தான் சொல்லுகிறேன் கட்டாய் கேளு
வெருதியென்ற மாதர்களையுற்றுப் பார்த்து
வுடனேங்கி மோகமுற்ற வுடற்பா வந்தான்
சதிருடனே கருக்கண்டு வழித்த தாலுஞ்
சக்திதோ டத்தாலுந் தெய்வத்தாலும்
விருதுடனே பலவுயிரைக் கொல்லக் கண்டு
விலக்காதே பார்த்திருந்த வீறினலே. 178

வீறுன பலபாவஞ் செய்கை யாலு
மெய்யதனைப் பொய்யென்ற வம்பினுலும்
வேறுகப் பிறக்கிடுக்கண் செய்த தாலும்
மிக்கதொரு சிவாலயங்கள் விரும்பா தாலும்
கூறுன தெய்வத்தை யிகழ்ந்த தாலுங்
கூர்விழியில் நேர்விளங்குஞ் சலந்தா னப்பா
வாறுகத் தொண்ணூற்றுறு வியாதி வரலாறு
மதிகமாங் கன்மமென வறிந்து சொல்லே. 179

கன்ம நிவர்த்தி

சொல்வதென்ன கன்மம்வந்து தொடர்ந்த தானுற்
சூத்திரமாந் தானதர்மஞ் செய்ய வேணுஞ்
சொல்வதென்ன கோவில்குளந் தீர்த்த வாசஞ்
சிவனேடு பஞ்சகர்த்தாள் தெரிசனமாம் பூசை

வெல்வதென்ன கோயில்குளங் கட்ட வேணும்
வேதியர்க்குத் தானதர்ம மிகவுஞ் செய்தல்
கொல்வதொன்றுஞ் செய்யாதே யிரப்போர்க் கீதல்
குருபாதந் தனைப்பணிதல் கொள்கை யாமே. 180
ஆமிந்த வுலகத்தி லிருக்கும் போதி
லளவற்ற கன்மமடா ஆர்தான் வெல்வார்
தாமிந்த கன்மமொன்று மனுகா தப்பா
சார்வான சிவயோகி தவத்தி னாலே
வாமிந்த தேவிசிவ பூசை யாலே
மகத்தான தருமமென்ற குளிகை யாலே
யோமிந்தப் பெரியோர்க ளானவாறு
முலகத்துள் ளோர்க்குற்ற தர்மந் தானே. 181
தர்மமது செய்வதற்குக் கசந்தா யானால்
சண்டாள பாவம்வந்து சபிக்கும் பாரு
வர்மமென்ற காசமது கண்ணில் வந்து
மருளாக விருவிழியை மறைத்துக் கொள்ளுங்
கன்மமென்ற காசமது கண்ணில் வந்து
மருளாக விருவிழியை மறைத்துக் கொள்ளுங்
கன்மமென்ற காசநீர் முதலா யுள்ள
கன்மாந்தர நோய்க்கவிழ்தங் கருதிக் கேளு
நிர்மலமா மிரும்பீயங் காந்த மீய
மிரண்டுடனே கெந்தியரி தாரம் வீமே. 182

மருந்து வகை

வீரமா மெலுமிச்சம் பழச்சாற் றாலே
விதமாக வொருசாம மரைத்துத் தட்டிச்
சீராக முழப்புடத்தி லாறக் கண்டு
செந்தூரம் புடந்தசந்தான் செய்தாற் கேளு
வாரமாய் தேனிலரைப் பணவெடை யதாக
மண்டலந்தான் கொண்டிடவே பால்நெய் யாகுஞ்
சாரமாங் கொடுப்பைசிறு கீரையொடு
தளித்தநெல்லி மிளகுடனே சார்ந்து கொள்ளே. 183
கொள்ளையிலே பச்சைவெண்ணெய் காலி லிட்டுக்
கூறாக வுறங்கியே யுதய கால
முள்ளதிலே தவிடுகொண்டு தேய்த்துப் போட்டு
வுற்றவெந்நீர் காலில்விட்டுக் கழுவிப் போடு
தள்ளையென்ற நயனத்துக் கெழுதக் கேளி
தருவான விந்துப்பு துரிசு சீனம்
வெள்ளையென்ற மடற்றுத்த மரப்பொடி யுமாக
வேணபடி சரியாக நிறுத்துக் கொண்டே. 184

நிறுத்திதனைச் சம்பீரச் சாற்று லாட்டி
நீளமாய்க் கயறுசெய்து வைத்துக் கொண்டு
வறுத்துகின்ற நயனத்தி லெழுதும் போது
வுத்தமனே நந்திபத்திரிச் சாறுந் தேனும்
சிறுத்தநெல்லி வேருடனே திப்பிலியுஞ் சமனாய்
சீர்பெறவே கரிசாலைச் சாற்றி லாட்டி
வொருத்திமுலைப் பாலதனி லுரைத்துப் போடு
வொருநாளுக் கிருபொழுதாம் மருந்துதானே. 185

நாளொன்றுக் கிருநேர மருந்து கொண்டு
நலமாகச் செய்திடவே தீருங் கண்ணில்
வேளென்று வந்தனோய் தொண்ணூற் றாறும்
விரைந்துபோ மருந்திதல்லால் வேறே வேண்டாந்
தூளென்றுங் குளிகையென்றுங் குழம்ப தென்றுஞ்
சொல்லுவார் வார்த்தைமெத்த வுலகி லுள்ளோர்
தேளென்று கொட்டுமப்பா விழிநோ யெல்லாஞ்
சிரசுக்குத் தைலமொன்று செப்ப லாமே. 186

கண்ணோய்க்குத் தைலம்

செப்புகின்ற வெள்ளறுகு மூல மொன்றும்
விலாமிச்சு மிருவேலி இண்டி யோடு
வொப்புடனே வகைவகைக்கு வொருபலம தாக
வுயர்ந்தசீ தேவிவேர் கொடுப்பை வேரும்
வெப்பகலுங் கற்றாழை மூல மொன்று
விருதான குறிந்தொட்டி மூல மொன்று
நட்புறுகீ ழாநெல்லி மூல மொன்று
நலமான சலம்படிதான் பன்னி ரண்டே. 187

இரண்டுபடி யாகவே வைத்துக் காய்ச்சி
நல்லெண்ணெய் நாழிவிட்டதி மதுரங் கோட்டம்
கொண்டதொரு தக்கோல மமுக்க றாவேர்
குருவான சடாமாஞ்சில் மண்சட் டியோடு
பண்டுசெறி வால்மிளகு வெள்மிளகுசுக்கும்
பச்சைவிலா மிச்சுவெட்டிவே ருடந்தக் கோலந்
தண்டுடைய சந்தனமுங் குங்குமப்பூ மேலஞ்
சார்மிளகு தாளியொடு ரேணுகம்வெட் பாலை 188

பாலைதிரி பாலைசிறு நாகப் பூவும்
பாரிலுள்ள செண்பகப்பூ தேவ தாரஞ்
சீலமுடன் வகைக்குவொரு கழஞ்சி கொண்டு
செவ்விளநீர் விட்டரைத்துச் சேர்த்துக் கொண்டு

பாலதிலே படியிரண்டு கூட வார்த்துப்
பதமாகவே வடித்து முழுகி னுக்கா
லாலமென்ற நீர்விடங்க ளெல்லாந் தீரு
மப்பனே கண்குளிர்ச்சி யாகுந் தானே. 189

ஆகவே குழம்பொன்று சொல்லக் கேளு
அழகான கொடிக்கொழுஞ்சி யறுநான் காகும்
வேகமுள்ள கடுக்காயோர் பலம தாகும்
வேம்பான கருவேம்பி னிலையவ் வீதங்
தாகமுள்ள களிப்பாக்கு மதுவவ் வீதந்
தருவான பசுவின்பால் குறுணி யாகுஞ்
சாகவே யவித்ததனைப் பிழிந்து கொண்டு
தனியான தேனதிலே படிதான் வாரே. 190

வார்த்தெரித்துக் குழம்பாக்கி வழித்து வைத்து
வாள்விழியின் நீள் புருவம் புழுக்கள் புண்கள்
தீர்த்துவிடு மண்டலந்தான் பூசும் போது
திகழ்விழிநோய் பலவும்போந் தீர்க்க மப்பா
பார்த்திடவே மேகரா சாங்க மானுற்
பாரிலுள்ள நோய்களுக்கு சஞ்சீவி யாகுஞ்
சாற்றியதே முந்நூறும் வைத்தியரா சாங்கத்
தாரணியி லுள்ளவருக் கமிர்த மாமே. 191

ஆனந்த வாயு கன்ம வரலாறு

ஆமென்ற வானந்த வாயு கொண்டா
வரிதப்பா தீராது அதிக கன்மந்
தாமென்ற வுயிர்களைத்தான் கட்டித் தூக்கித்
தாரணியிற் போட்டறுத்த சண்டா ளத்தால்
கோமென்ற கோவுநீர் குடிக்கும் போது
குழல்வைத்து வுண்டையிட்ட குலப்பா வந்தான்
ஓமென்ற வுயிர்களைத்தான் குடலைக் கீறி
யுறும்பாவங் கொண்டதனு லுதித்த தாமே. 192

கன்ம நிவர்த்தி

உதித்ததொரு கன்மந்தான் தீர வென்று
லுற்றகொடி மரமொன்று வுயர்குடந்தா னென்று
பதித்ததங்க கிரீடமொன்று குடைதா னென்று
பரவுசொர்னங்காலையொன்று சப்பிரமஞ்சமொன்று
கதிர்த்தசொர்ன கிள்ளையொன்று ஆலவட் டமொன்று
கையிலெடுத் தாடுகின்ற வம்மானை யொன்று
துதிக்கசிவ பூசைகுரு பூசை யோடு
சுகமாகச் செய்திடவே துடர்ந்தகன்மம் போமே. 193

அவிழ்த வகை

போனபின்பு செய்வதற்கு மருந்து கேளு
புகலுவேன் காந்தமது பலந்தா னென்று
ஏனமுள்ள கெந்தியது பலந்தா னென்று
எலுமிச்சம் பழச்சாற்றுற் சாம மாட்டி
வானமுடன் கெசபுடமாய் மூன்று போடு
வளமாக விந்தடைவாய் புடத்தைப் போடு
ஞானமுடன் கொடிவேலி வேரின் பட்டை
நலமாகப் பிலமொன்று தூக்குத் தூக்கே. 194

தூக்கியே யிடித்துத்தூ ளாக்கிக் கொண்டு
துடியாக வந்தெடைக்குக் கெந்தி சேர்த்து
தாக்கியே முலைப்பாலா லாட்டிச் சாமஞ்
சார்வான வெண்கருவாற் சாம மிரண்டு
பாக்கியமா யோட்டில்வைத் துமேலோ டுமூடிப்
பாங்கான சீலைமண்ணும் பரிவாய்ச் செய்து
வாக்கியே கெசபுடமாய்ப் போடு போடு
மைந்தனே முருக்கம்பூப் போலாம் வில்லை. 195

வில்லைதனைப் பொடிசெய்து வைத்துக் கொண்டு
வீறுன முன்மருந்துங் கூடக் கூட்டி
எல்லையுள்ள வெருக்கிலையின் பாலா லாட்டி
யிச்சையுடன் பில்லைசெய்து ரவியிற் காய்ந்தால்
நல்லதென்று கெசபுடமாய் நாட்டிச் செய்து
நலமாக வெடுத்துப்பார் கருஞ்சிவப்பாய் காணுந்
சொல்லரிது மண்டலமே கொள்ளும் போதில்
தோன்றுகின்ற குடல்வாத மண்ட வாதம். 196

அண்டமென்ற வாதமொடு வாய்வு குன்ம
மனேகநாள் சென்றதொரு கெண்ட வீக்கம்
பண்டுள்ள வுதரத்தில் வீக்கம் வாய்வு
பாரித்த வயிறுமுதல் கரைத்துப் போடுஞ்
சண்டமா ருதமான வாயு வத்தான்
சண்ணுமடா மேலேரு வண்ணம் பாரு
கண்டதொரு பத்தியமாய்க் கொள்வா யானுற்
கனமான நோய்தீருங் கன்மம் போமே. 197

கன்மமது நிவர்த்தியைநான் முன்னே சொன்னேன்
காசியினி லெளியவரும் வலியவ ருமுண்டு
தர்மமது செய்வதற்குப் பொருள்தா னேது
தாரணியி லுள்ளவற்குச் சாதி வண்ணம்

வர்மமென்ற கன்மமது நிவர்த்தி செய்ய
வரிசையுடன் சொல்லுகிறேன் வணங்கிக் கேளு
துர்மோக மாகாது கோப மாகா
துடியாகப் பலரையுமே தூடணிக்க லாகா. 198

ஆகாத வழியொன்றுஞ் செய்ய லாகா
வாதித்த னமத்கார மன்னதானம்
போகாத சிவபூசை யங்கப்பிர தட்சணம்
புகழான வாரமொடு பக்கம் நோன்பு
சாகாத வெட்டெழுத்து மஞ்செ ழுத்துஞ்
சாதகமாய் செபஞ்செய்ய வோமஞ் செய்ய
மோகமாய் சிவத்தலங்கள் தெரிசித் தேத்தல்
முக்கியமாய்த் தீர்த்தங்கள் பலவு மாடே. 199

ஆடியதோர் நந்தவனம் புட்பம் வைக்க
வரசடிக்கும் நந்திக்கும் நீரே பெய்ய
தேடியதோ ரபிடேகம் நெய்விளக்கு
சிவவோமந் தர்ப்பணங்கள் தீர்த்த வாச
மூடியதோர் பலவுயிர்க்கு முபசரித்த
லூற்றதர்ம மிவ்வகையே யுண்மை யாக
நாடியே கொள்வோர்க்குப் பாவ மேது
நாள்தோறுஞ் செய்தகன்மம் பரிகார மாமே. 200

ஆமப்பா நாள் தோடம் நித்ய கன்ம
மங்கனிய சமுதலாம் பிராணு யாமம்
ஓமப்பா கருமத்தால் செய்த பாவ
முயராது பெரியோர்கள் பாதம்போற்று
நாமப்பா தருமத்தில் மனது வைத்து
நடந்துகொள்ள கன்மங்கள் நாடா தோடும்
காமப்பால் மிஞ்சாதே கன்ம மிஞ்சுங்
கன்னியரைப் பாராதே கசடு போக்கே. 201

பஞ்சலோக செந்தூரம்

போக்கவே வகையொன்று சொல்லக் கேளு
புகழ்பஞ்ச லோகமது பொடிதான் வாங்கி
சேர்க்கவே வகையொன்று கழஞ்சி யொன்று
திறமாகச் சுத்திசெய்து வொக்கக் கூட்டித்
தாக்கவே பஞ்சபா டாணம் நீருந்
தயவாக வகையொன்று கழஞ்சி யொன்று
தீர்க்கவே சுத்திசெய்து வொக்கக் கூட்டித்
தெளிந்தரைக்க நீர் சொல்வேன் தெளிந்து பாரே. 202

பாரப்பா பூநீற்றிற் சாரங் கூட்டிப்
பனியில்வைக் கச்செயநீராம் நீரை வாங்கி
நீரப்பா விட்டரைத்து பில்லை தட்டி
நிசமான குக்குடமாம் புடத்தில் வைத்து
ஆறப்பா வாறியெடு மறுபடியு மரைத்து
அப்பனே மூன்றுபுடந் திறமாய்ச் செய்து
காரப்பா கணபதிக்குப் பூசை செய்து
கட்டாகப் பரணிதனி லடைத்து வையே. 203

வைத்தபின்பு திரிகடுகு மதுர வோமம்
வாழ்கரிய சீரகமுங் கார்கோ லோடு
நெய்ததொரு வாலுழுவை காரெள்ளுங் கூட்டி
நிசமான கொடிவேலி யமுக்காரச் சேங்கொட்டை
வைத்தபின்பு வகையொன்று பலமொன் றுகும்
வளர்பறங்கிச் சக்கைச்சூரண மிதற்குச் சமனாய்
மொய்த்ததொரு கையான்சாற் றதுதா னாழி
வீறுபிர மிச்சாறு நாழி கூட்டே. 204

கூட்டியே பால்நாழி மூன்று மாகக்
கொதிக்கையிலே சூரணத்தை யதனிற் போட்டு
நாட்டியே பசுவினெய் யரைதேன் காலாய்
நலமாக விட்டுமெழு கான போது
சூட்டியே வழித்துவைப்பாய் பீங்கா னுள்ளே
சுகமான செந்தூரங் குன்றிக் கூட்டி
மாட்டியே மண்டலந்தான் கொள்ளும் போதில்
மகத்தான சூலைபதி னெட்டுந் தீரு
மாட்டியே குட்டமொடு கிரந்தி தீரு
மட்டைவண்டு பற்கடியு மகன்று போமே. 205

போமென்ற தின்னமொரு வகையைக் கேளு
புகழான முருக்கம்பூச் சாறு நாழி
யாமென்ற முருங்கைப்பூச் சாறு நாழி
யழகான செம்பரத்தம்பூச் சாறு நாழி
கோமென்ற வரசின்பூச் சாறு நாழி
கொடியதோ ரெருக்கின்பூச் சாறு நாழி
வாமென்ற மல்லிகைப்பூச் சாறு நாழி
வளர்நந்திப் பூச்சாறு வரிசை கேளே. 206

வரிசையுட னென்றுக்கி வகையைக் கேளு
மனோசிலையு மரிதாரங் கெவுரி வெள்ளை
துரிசுடனே குதிரைப்பல் கெந்தி லிங்கந்
துடியான ரசம்வீரம் பூரங் கூட்டி

பரிவான வகையொன்று பலந்தா னென்று
    பழச்சாற்றில் வைத்து எடுத்துக் கொண்டு
அரிதான பழச்சாற்று லாட்டு ஆட்டு
    அத்தனையுஞ் சாறுவற்ற வாட்டி னுக்கால். 207

ஆட்டினல் மெழுகாகு மதனை வாங்கி
    யடைதட்டிக் காயவைத்து ஓட்டில் வைத்து
மூட்டியனல் கெசபுடமாய்க் கட்டிப் போடு
    முறையான கரிசாலைச் சாற்றி லாட்டி
தாட்டிகமாய்ப் பின்பொருக்கால் புடத்தைப் போட்டுத்
    தானுறி யெடுத்தாக்கால் நீறும் பாரு
நாட்டியே பழச்சாற்று லாட்டி வில்லை.
    நலமாக வோட்டில்வைத்துப் புடத்தைப் போடே. 208

புடந்தனிலே காவிமண்போற் சிவந்து போகும்
    புனிதமாஞ் செப்பதனில் வைத்துக் கொண்டு
செடந்தனிலே வந்ததொரு சூலை யாறுங்
    கிரந்திகுட்டந் தீராத சிலந்திப் புண்க
ளிடத்தில்வரு மரையாப்பு பவித்ர மாலை
    யிடைந்துதடா பிளவையென்ற தெல்லாந் தீருங்
குடந்தனிலே வைத்த நீர் போலே வந்த
    கொடியதொரு சில்விடங்கள் குமிறிப் போமே. 209

பூவகை லேகியம்

போமென்ற வகையொன்று சொல்லக் கேளு
    புகழ்வேம்பின் பூவுடனே புங்கின் பூவு
மாமென்ற வில்வப்பூ நெல்லிப் பூவு
    மரியதோர் காரைப்பூ விலாரிப்பூவு
மோமென்ற செண்பகப்பூ சிறுநா கப்பூ
    வுத்தமனே குங்குமப்பூ கிராம்பு பத்திரி
நாமென்ற புரசம்பூ கொத்த மல்லி
    நலமான காமப்பூ கஞ்சாப் பூவே. 210

பூவான மாம்பூவு மத்தம் பூவும்
    புகழான கரிசாலைப் பூவி னோடு
காவான பொற்கையான் பூவினோடு
    கனமான பொற்கொன்றை யமுக்கிருப் பூவும்
நாவான தூதளம்பூ காட்டத் திப்பூ
    நல்லகரு வேலம்பூ ஆவா ரைப்பூ
தேவான வனச்சம்பூகோங்கின் பூவு
    திருவான நெருஞ்சிற்பூ மாதளையின் பூவே. 211

தளையான பூவெல்லாஞ் சூர ணித்து
தயங்கமிர்த சர்க்கரையுஞ் சமனுய்ச் சேர்த்து
விளையான தென்னம்பூவும் பனையின் பூவும்
விளங்கவே பூவெல்லாஞ் சமனுய்க் கொண்டு
இளையாத தேனதிலே யரைப்படி தான்சேரு
யியலான நெய்யதிலே யிரண்டு வாரு
இளையாம லடுப்பேற்றி லேகியம்போற் செய்து
ஏத்தியிறைப் பீங்கானிற் பதனம் பண்ணே. 212

பண்ணியே புன்னைக்கா யளவ தாகப்
பரிவாக விருநேரந் தின்ரு யானு
லெண்ணிலாப் பிறமேக மெலும்புருக்கி
யிருமலென்ற மேகவகைநீ ரிழிவ தெல்லாங்
கண்ணிலே காணும லோடிப் போகுங்
கனமான வுட்சுரங்கள் நாவ றட்சி
புண்ணிலே யெழுந்தகெந் தாழி யோடு
புகைச்சலொடு யிளைப்புகடுப் புளைச்சல் போமே. 213

உளைச்சல்போம் பித்தமுமே ஓடிப் போகு
முலர்ந்தவுட லுதிரமது வூறு மூறுந்
தலைச்சவிந்து தம்பனமாய்ப் பிலத்துப் போகுந்
தாதுவிருத்தி யுண்டாகும் பெரும்பா டுதீரும்
விளைச்சலென்ற குன்மமெல்லா மறுந்து போகும்
வீரியந்தான் மெத்தவாம் வாய்மை சொன்னே
மளைச்சதொரு கன்மத்தை நிவர்த்தி செய்து
அறமான தருமத்துக் காளாய்ச் சேரே. 214

சேர்ப்பதற்கு இன்னமொரு மருந்து கேளு
செங்கழுநீர்க் கிழங்குடனே கொட்டி நெய்தல்
நீர்ப்படர்ந்த வல்லிதா மரைக்கி ழங்கு
நிலப்பனையும் மூக்கருநீர் வள்ளி யாகும்
பார்ப்படர்ந்த நன்னரி முத்தக் காசு
பகர்ந்தவதி விடயமொடு கச்சோலஞ் சுக்கு
கார்ப்படர்ந்த கடலிறஞ்சி பறங்கிப் பட்டை
கருதியதோர் கூகைநீறுங் கஞ்சமோ ரிதழே. 215

ஓரிதழின் மூலமொடு வில்வ மூல
முற்றதொரு மாதளையா வாரை மூலம்
பாரிலுள்ள கருவாழைக் கிழங்கி னேடு
பகர்கருணை வெருகினேடு மலைதாங் கிமூலஞ்

சீரிதழின் கற்ருழை சங்கு மூலஞ்
சித்திரமூ லத்துடனேயதி மதுரங் கோட்டம்
வேர்சிறந்த வகையெல்லாம் பலமொன் ருக
வில்லேவில்லே யாய்நறுக்கி வெயிலில் வைத்து
நீர்சுரந்து காய்ந்தவுட னிடித்துத் தூளாய்
நெய்படிதான் கொதிக்கையிலே சூரணத்தை
சேர்ந்தே. 216

சேர்ந்தபின்பு தேனதிலே நெய்யிற் பாதி
நேராகவிட் டிறக்கிமெழு கதுபோல் வாங்கி
சாந்தமுள்ள லேகியத்தைப் பதனம் பண்ணு
சாந்தகமாம் புன்னேக்கா யளவ தாகத்
தேர்ந்தபின்பு யிருநேரம் கொள்வா யாகில்
தீராத கிராணிவகை தீருந் தீரும்
வாய்ந்தரத்த மலசலங்கள் கடுப்பு மூலம்
வயிற்றுளேச்சல்வாய்வு முதலசீ ரணங்கள்
கூர்ந்தபித்த நீர்தரிப்புப் பிரமே கங்கள்
குடிபோகும் லேகியத்தைக் கொண்ட போதே. 217

கிராணிக்குலேகியம்

கொண்டபின்பு இன்னமொரு வகையைக் கேளு
கூவிளத்தின் பிஞ்சுடனே மாதளேயின் பிஞ்சும்
விண்டதோ ரத்திப்பிஞ் சாத்திப் பிஞ்சும்
வெண்மருதப் பிஞ்சுடனே யகத்திப் பிஞ்சுங்
கண்டதோர் கடுக்காயின்பிஞ் சுடனே நல்ல
கதலிப்பிஞ் சுடன்வெண்டைப் பிஞ்சி னேடு
தண்டமிழ்சேர் புளியம்பிஞ் சுடனே நல்ல
தக்காளி வித்துடனே தகரைப் பிஞ்சே. 218

பிஞ்சான மாம்பிஞ்சுங் கோவைப் பிஞ்சும்
பெருவேம்பின் பிஞ்சுடனே முசுட்டைப் பிஞ்சும்
பஞ்சான நெல்லிப்பிஞ் சாரிச்சம் பிஞ்சும்
பகர்தா மரைப்பிஞ்சும் பனிச்சைப் பிஞ்சும்
நஞ்சான மாளேயின் பிஞ்சுங் கூட
நலமான வகைக்கொரு பலமாய் வாங்கி
துஞ்சவே யிடித்தனே மைபோ லாக்கி
சுகமான நல்லெண்ணெய் பசுவின் நெய்யே. 219

நெய்யான வகைவகைக்குப் பலமி ரண்டும்
நேரான தேனதிலே யரைப்படி யுமாகச்
செய்யவே கற்கண்டு நாலுப லமாகுஞ்
சீரகஞ்சுக் கதிமதுரம் வகைக்கொரு பலமாய்

மெய்யாகச் சூரணித்து அதனிற் சேர்த்து
விருதாகக் குழம்புபோற் பண்ணிக் கொண்டு
கையான கரண்டியிலோர் பலமாய்க் கொள்ளு
கயரோகங் கிராணியதி சாரம் போக்கே 220

போக்கென்ற போக்கெல்லா மெடுபட் டோடும்
பொல்லாத கடுப்புடனே யிரத்தம் போகுந்
தாக்கென்ற மூலமண்டி யுள்ளே வாங்குந்
தாதுவிர்த்தி யுண்டாகுந் தாகந் தீரு
மூக்கென்ற சத்திவிக்க லெங்கே போச்சு
உடல் வரட்சி கனரோக மெங்கே போச்சு
தேக்கென்ற காலசதி கையசதி யெங்கே
தேகத்தி லில்லாம லோடிப் போச்சே. 221

ஓடிவிடுஞ் சயமீளை யிருமல் காச
முற்றரத்த பித்தமொடு பிரமே கங்கள்
நாடியதோர் நீர்க்கடுப்புங் கல்ல டைப்பு
நலமாகுஞ் சதையடைப்பும் நன்றாய்த் தீருங்
கூடியதோர் பெரும்பாடு முள்ளு ருக்கி
கொண்டதோ ரெலும்புருக்கி யெரிவு காந்தல்
நீடியதோர் நெஞ்செரிவுங் கைகால் காந்தல்
நிசமாகத் தீருமடா பித்தம் போச்சே. 222

கரங்களுக்குக் கலிக்கம்

போச்சென்ற தின்னமொரு மருந்து கேளு
புங்குவிதை சங்குவிதை புடலம் வித்து
ஆச்சென்ற அத்திவித்து அகத்தி வித்து
அதிகமாம் பேய்ப்பீர்க்குஞ் சுரையின் வித்து
பூச்சென்ற தகரைவித்து கரிப்பான் வித்து
பொருந்துமா வாரைவித்து மருதம் வித்து
வாச்சென்ற சவுரிவித்து தில்லை வித்து
மகிழம்வித்து புல்லாமணக் குமுத்து மாமே. 223

முத்தான நேர்வாள மிளகுங் கூட்டி
முதலான சம்பீரச் சாற்று லரைத்து
கத்தான வாட்டினுட பித்துங் கூட்டிக்
கலந்தரைத்துக் கண்ணிலிட வெள்ளள வுதானும்
பத்தான வெற்றிலையின் சாத்திலுரைத் திட்டால்
பலசுரங்கள் பேய்ச்சுரங்கள் பயித்தியங் கண்மாலை
சுத்தான சன்னியொடு குமர கண்டன்
கருதிய வஞ்னத்தின் சுருக்கம் பாரே. 224

சுருக்காகக் கண்ணிலிட்டுக் கண்கோ பித்தாற்
சொல்லுவேன் சோறுதயிர் பிசைந்து கட்டு
தருக்காகக் கற்ருழைச் சோறுஞ் சீரகம்
தான்பிசைந்து பிழிந்துகட்டில் கண்வெப் புந்தீரு
முருக்காக வின்ன மொரு சேதி கேளு
முரையாகச் சேதியெல்லா முரைத்திட் டேனுன்
பொறுக்காத நோயுமுண்டோ வுலகத் துள்ளே
புதுமையிந்த சாத்திரத்தைப் போற்றிக் கொள்ளே. 225

குமரித்தைலம்

கொள்ளவே வகையொன்று சொல்லக் கேளு
குமரியுட சாறென்று கொடுப்பைச்சா றென்று
கள்ளமில்லாக் கரிசாலைச் சாறுப டியொன்று
காயான கீழ்காயின் நெல்லிச்சா றென்று
மெள்ளவே படியொன்று விஷ்ணு காந்தி
விளைந்த சந்திரகாந்தி ரசம்படியுமொன்று
தள்ளவே படியொன்று தாழை விழுதுச்
சார்வாக படியொன்று நீர்முள் ளிச்சாறே 226

முள்ளிரசம் படியொன்று முசுமு சுக்கை
முளையான சாறென்று பேய்ப்புடல் தானென்று
வள்ளியென்ற நீர்வள்ளிச் சாறுபடி யொன்று
வருகின்ற செம்முள்ளிச் சாறுபடி யொன்று
வுள்ளியென்ற வீருள்ளச் சாறுபடி யொன்று
ஊறுகிற வல்லாரைச் சாறுபடி யொன்று
வெள்ளரியின் சாறென்று குமிழஞ்சாறென்று
விதமான தூதளைச் சாறென்று தானே. 227

ஒன்ருன கருப்பஞ்சா றென்று வில்வத்
தூறுகின்ற சாறென்று கண்டங் கத்தரி
நன்ருன பிரமிச்சாறுபடிதா னென்று
நலமான கஞ்சாவின் சாறுபடி யொன்று
வென்ருன பழச்சாறு படிதா னென்று
வெற்றிலையின் சாறென்று புளியிலைச் சாறென்று
கன்ருன செருப்படியின் சாறுபடி யொன்று
கருவேம்பி னிலைச்சாறு படிதா னென்றே. 228

படியான பசளைரசம் படிதா னென்று
பகருகின்ற புளியாரைச் சாறுபடி யொன்று
குடியான துளசிரசம் படிதா னென்று
கூர் மிளகு தக்காளிச் சாறுபடி யொன்று

வடிவான விதையெல்லாம் வடிகொண் டொக்க
வகையான தாழிக்கு ளொன்ருய் வார்த்து
மடியாத பால்நாழி யிளநீர் நாழி
வைத்துவிட்டுக் குழம்பான வாறு கேளே. 229

வாறுகேள் நெய்யதனிற் படிதான் வாரு
வரிசையாய் தேனதிலே யபினிற் பாதி
கூறுகேள் மதுரஞ்சீ ரகம்வெட் பாலே
கோட்டமுட னேலமதி விடயஞ் சுக்கும்
வேறுவெள்ளைக் குந்திரிக்கம் மிளகு திப்பிலி
வீருன வகையொன்று பலமொன் ருகுஞ்
சூரணித்துப் பாகுதனிற் சொல்லக் கேளு
சுறுக்கான நெற்பொரியுங் கற்கண்டும் வேண்டே.
230

வேண்டியே வகையொன்று பலமொன் ருக
வெற்றியுள்ள திரிபலையும் பலமொன் ருகும்
தாண்டியே சூரணத்தை தூவிக் கிண்டி
சதிரான மெழுகதுபோல் வாங்கி வைத்து
ஊண்டியே கணபதிக்குப் பூசை செய்து
ஒருநாளைக் கிருநேர முறவாக் கொள்ள
பூண்டதொரு கயரோக மிருமல்பதி ஞறும்
போராடு மிளைப்பீளை மந்தார காசம் 231

காசமென்ற சகலகாசம் பித்த காசம்
காந்தசேற் பனகாசம் வாத காசம்
நாசமென்ற ரத்தபித்தஞ் சத்தியு ளமாந்தை
நற்குவளை விப்புருதி ரத்த காசம்
பாசமென்ற மருந்திடுநல் முதலா யுள்ள
பண்டுள்ள பீனிசமு மண்டைச் சூலை
வாசமென்ற பிறமேகங் கிரந்தி சூலை
மண்டைதறிக் கின்றபித்தந் தலைச்சுழற்றல் மயக்கம்
232

மயக்கமொடு பித்தமெல்லா மெங்கே போச்சு
வாதமொடு நீர்சிறுப்பு மாண்டு போச்சு
தியக்கமுட னத்திசுரம் வெப்பும் போச்சு
சிரசில்நின் றபித்தமெல்லாஞ் சிதறிப் போச்சு
தயக்குண்ட சரீரத்தின் வறட்சி போச்சு
சரீரமது தூலித்துத் தளும்பு மாச்சு
தயிக்கியமென் றபுத்தியெல்லாம் நற்புத் தியாச்சு
தாதுவித்தை யாமிதுவே யறிந்து கொள்ளே 233

அறிவான பெரியோர்கட் கிந்நூல் வேணு
மறிவு கெட்ட வுலுத்தர்களுக் காகா தொன்றுங்
குறியாக நினைவுவைத்துக் கன்மந் தீர்த்துக்
குவலயத்தில் மருந்துசெய்யிற் குருவவனே யாகும்
மறிவான மனத்தோர்க்கு மருந்தா காது
வஞ்சகம்பொய் யற்றோர்க்கு மருந்து வேண்டாம்
நெறியானவைத் தியன்றன் மனது நொந்தால்
நேர்ந்தநோய் தீராது நினைவில் வையே. 234

நினைவிலே வைப்பதென்ன குருவின் பாதம்
நிச்சயமாய் சிவன்பாதந் தேவி பாதம்
கனவினிலு மறவாதே யொருநா ளுந்தான்
கருமாந்த மில்லையடா நோயு மில்லை
சினமான தாகாது புத்தி சொன்னேன்
சேதி மாணுக்கனுலறிந்து கொள்வான்
மனதிலே தெளிவானல் முத்தி யுண்டாம்
வஞ்சகமொன் ருகாது வாசி பாரே 235

வாசியினல் மோட்சமது வந்து போச்சு
மருந்தினுற் றேகமது வலுத்துப் போச்சு
பூசையினுற் சிக்க துவு மற்றுப் போச்சு
புலவருக்கு மிந்தமுறை புகலப் போமோ
தேசியென்ற குளிகையினல் கெவன மாச்சு
சித்தியென்ற பெயராச்சு சிவயோ கத்தால்
தாசியென்ற பெண்மேலே மோகமானுற்
சாற்றியதோர் கற்பமெல்லாந் தவறிப் போச்சே. 236

தவறும லின்னமொரு சேதி கேளு
சாதகமா யின்னமொரு மருந்து சொல்வேன்
நவரத்தினம் வகைகழஞ்சு ரசமும் வங்கம்
நலமாக வகை க்கழஞ்சு ருக்கிச் சேர்த்து
சவையாகுங் கலுவத்திற் பொடித்துக் கொண்டு
சம்பீரச் சாற்றுலே யரைப்பாய் சாமங்
கவையாகப் பொற்றலையின் சாற்ருற் சாமங்
கட்டாக வில்லை செய்து காயக் கண்டே 237

கண்டதனைப் பொடிசெய்து எடைக்கெடையே கெந்தி
கலந்தரைத்துக் குப்பியிலே கருதி யேத்திப்
பண்டதற்குச் சீலையைந்து செய்து பின்பு
பரிவாக வாலுகையி லெரியெண் சாமம்

தொண்டுடனே யெரித்தபின்பு சலாகை யிட்டுச்
சோதித்தா லருணநிறந் தோன்றிற் றுனு
லண்டர்பிரா னறுமுகற்குங் கணப திக்கும்
அர்ச்சித்துத் தீமாற்றி யாற வையே. 238

ஆறவைத்துச் செந்தூர முடைத்துப் பார்த்து
அம்மியிலே பொடிசெய்து பரணிதனி லடைத்து
நீறவைத்த செந்தூரம் பணவெடை தான்கொள்ள
நீர்ச்சிறுப்புங் கல்லடைப்புஞ் சதைய டைப்பு
மூறவைத்த நீரிழிவுங் கிரந்தி சூலே
யுறுதியாங் குட்டமொடு வாத நீர்கள்
தேறவைத்த சரீரவலி சூடு வீக்கந்
தேனிலே கொண்டிடவே சித்தி யாமே. 239

சித்தியாந் தைலமொன்று திறமாய்ச் சொல்வேன்
சென்னையெண்ணெய் புன்னையெண்ணெய் புங்கயெண்ணெய்
முத்தியாம் வேப்பெண்ணெய் எள்ளி னெண்ணெய்
முனையான குருந்தெண்ணெய் யோரண்டத் தெண் [ணெய்
சத்தியாந் தேங்காயி னெண்ணெய் யோடு
தனிப்பசுவி னெய்யுடனே யாட்டி னெய்யும்
வெத்தியாம் பன்றினெய் மயில்நெய் யோடு
விரிவான மீனெய்யும் விரியனுட னெய்யே. 240

நெய்யான சாரையினெய் வகையொன் றுக்கு
நினைவாக வரைப்படியாய் நிசமாய்ச் சேர்த்து
கையான நாகத்தின் கண்டத் தோடு
கதித்தனல்ல முசுறுமுட்டை கம்பிளியுங் குக்கில்
மையான வரிச்சுருளு மழுங்கு மாமை
மயிலிறகுங் காக்கைகண் தேளர ணையோடு
மெய்யான முயலுடும்பு மானைக் கொம்பு
மிக்கபல்லி யாட்டின்கொம் பெருமைக் கொம்புஞ்
செய்யவுங் காண்டா மிருகக் கொம்புஞ்
செம்புலியின் தோலுடனே செந்நாய் மண்டை. 241

மண்டையென்ற மனிதர்தலை கலையின் கொம்பு
வருகுதிரைக் குளம்புடனே மந்த னத்தை
கண்டதொரு விலாங்கின் தோல்மச்சை மீன் தலையுங்
காமரூபி யின்தலையும் புரூவி னெச்ச

முண்டதொரு மிளகுசுக்கு வெள்ளுள் ளியோடு
வுறவான பருந்தின்முட் டையூர்க்குருவி முட் டை
வண்டான கழுதைமண்டை யுடும்பின் சிரசு
வலுத்துநின்ற குதிரைமண்டை வசம்புநா கண மே 242

கனமான விவையெல்லாம் வகையொன் றுக்கு
கழஞ்சாகப் பொடித்தந்த வெண்ணெயிலே போட்டு
நிணமான வெண்ணெதனைப் பத்துநாட் செலுத்தி
நிசமாக மெழுகுபதந் தனில் வடித்து
கனமான கணபதிக்கும் வயிர வர்க்குங்
கருத்துடனே பூசித்து கடத்தில் வைத்து
குணமாக வேணுமென்றாற் சரீரத் திலிட்டுக்
குடித்திடவே கரண்டி வெண்ணெய் குணத்தைக்
கேளே. 243

கேளடாகு மரகண்ட னென்றவலி யஞ்சுங்
கொடிதான பிறவீச்சு சன்னிபதின் மூன்றும்
நாளடா சென்றதொரு வாதமெண் பதுவும்
நடுநடுங்கி யோடுமடா குட்டமொடு குறைநோய்
தூளடா தூள்படுத்திப் போடுமிந்தத் தைலஞ்
சொல்லார்கள் பெரியோர்க ளுபரசத்தின் சூட்சஞ்
சூளடா மெய்க்கடுப்பு கருட்டுக் கட்டுந்
துறவான புண்புரைகள் வெட்டுக் குத்தே. 244

குத்தென்ற சுழலையொடு பெருங்கால் வீக்கம்
கூசைவலி முறிவுகைகால் குதிரைக்கால் முறிவு
மற்றதோ ரொலும்பெல்லா மூறிப் போகு
மசையாத பிடிப்புகட்டுத் தெறிக்கும் பாரு
செத்ததொரு கைகாலும் பிலமுண் டாகுஞ்
சித்திபெற்ற தைலமடா திறமாய்ச் சொன்னேன்
பத்திநின்ற பற்றெல்லாம் விட்டுப் போகும்
பத்தியமா யித்தைலம் பரிந்து கொள்ளே. 245

கொள்ளவே யின்னமொரு சேதி கேளு
கூறான வழிஞ்சில்வேர் கொன்றை வேரும்
வெள்ளெருக்கன் வேருடனே சித்திர மூலம்
வெண்புரசம் வேருடவே சிவனார் வேம்பு
மெள்ளவே காஞ்சுரைவேர் புரசம் வேரும்
வெண்ணொச்சி வேருடனே வில்வ வேருங்
கள்ளவே யகிலோடு தேவ தாரங்
கழறுகின்ற சந்தனமுங் காஞ்சுரை வேரே. 246

வேரான மருதோன்றி யிசங்கின் வேரும்
வேம்பின்வேர் சதுரக்கள் ளிவேருங் கூட
தாரான தேவதாரின்வேர் வசம்பு மாகுந்
தான்வகையாய் வெவ்வேறுய்த் தறித்து லர்த்தி
சீரான பாணேதனி லிட்டு மூடி
சேர்க்கவே குழித்தைலஞ் சிறக்க வாங்கி
பார்தனிலே வெவ்வேறே தைலம் வாங்கு
பருத்தபுங்கின் வேர்தைலமப் படியே வாங்கே. 247

வாங்கியே வகைதனக்கோ ரரைப்படியாம் வீதம்
வாகான பாண்டத்து ளொன்றுய் விட்டு
நீங்கியேகபோகாமலொரு பலங்கற் பூரம்
நிரையாகக் காச்சியே வைத்துக் கொண்டு
வோங்கியே சரீரத்தி லெல்லாம் பூசி
லுடன்வந்த வாதமெல்லா மோடிப் போகு
மேங்கியே குட்டமெல்லா மெடுபட் டோடு
மிசைகெட்ட வலியனைத்து மேங்கிப் போச்சே. 248

பேச் சென்ற தைலத்தை ரசத்திற் குத்திப்
பொங்கியதோர் சுடுசோற்றில் வைத்தா யானுல்
ஆச்சென்ற சூதமது. குளிகை யாகு
மச்சூதம் வங்கத்தி நீரை வாங்கும்
பேச்சென்ற வெள்ளியது பத்து மாற்று
பேரான சூதத்தைச் செந்தூ ரித்தால்
மூச்சென்ற வெள்ளியிலே பத்து மாற்று
மூதண்டக் குளிகையிது வாடு மாட்டே. 249

ஆட்டினுட வமுரியொன்று கோமூத்திர மொன்று
ஆனையின்ற னமுரியொன்று புரவி யொன்று
நாட்டிலுள்ள குறும்பாட்டி நீர்தா னென்று
நாரிசிறு நீரொன்று யெருமைநீ ரொன்று
தாட்டிகமாய் வகைக்கொரு படிதான் வாங்கி
தன்னுக்குள் வெடியுப்பு மிந்துப் போடு
மூட்டியே வளையலுப்புங் கறியுப் போடு
மூதண்ட வமுரியுப்பு முருவியு ப்பே. 250

உப்பென்ற வீரமொடு துரிசி பூர
முரமுடனே வகைக்குக்கால் பலமே கூட்டு
அப்பென்ற சக்திச்சார மெவாச்சா ரந்தா
னன்னமென்ற பேதியொடு வகைக்கொரு பலமா

யொப்புடனே பொடித்திட்டு வொன்றுய்க் காச்சி
யுறவான மெழுகதுபோ லுண்டை செய்து
தப்பென்ற வோட்டில்வைத் துச்சீ லைசெய்து
சார்வாக முழப்புடத்திற் சார்ந்து போடே. 251

போட்டிடவே நீறியது வெள்ளை யாகும்
புகழான வெண்கருவி லெருக்கின் பால்விட்டு
நாட்டிடவே யரைத்துவில்லை ரவிதான் கண்டால்
நலமாக முன்போலே புடைத்துப் போடு
தாட்டிகமாய் நீறும்பின் னெடுத்துக் கொண்டு
சம்பீரச் சாற்றுலே யரைப்பாய் சாமம்
கூட்டியே வில்லைசெய்து ரவியில் வைத்துக்
கூசாமல் முன்பேலே புடத்தைப் போடே. 252

புடம்போட வெளுக்கும்பூ நீறு போலே
பொல்லாத குன்மமெல்லாம் பொடியாய்ப் போகுஞ்
சடமான கற்பநோ யாறுந் தீருஞ்
சடத்துள்நின்ற வாயுவெல்லாஞ் சவ்வாய்த் தள்ளுங்
குடமான பெருவயிறுங் குட்டந் தீருங்
கொடியமகோ தரமுடனே குடல்வா தம்போ
முடனுடுஞ் சூலைநீர் பொடிப்புப் புண்க
ளுகமுடிந்து போச்சுதடா உண்மை தானே. 253

அரப்பொடிச் செந்தூரம்

உண்மையென்ற செந்தூர மொன்று கேளு
வுலோகமென்ற வரப்பொடியுந் தாம்பிரப்பொடியும்
வண்மையென்ற வுருக்குடனே வெண்கலம் பித்தளையும்
வாகான நாகமொடு திராயு மாகுந்
தண்மையென்ற வெள்ளீயங் காரீயம் வெள்ளி
தருவான தங்கமொடு ரத்தின மொன்பதும்
பெண்மையிலே வகைக்கழஞ்சு வீதம் வாங்கி
பேருகப் பொடித்துடனே சாற்றக் கேளே. 254

சாற்றவே சாமம்ரெண்டு பொற்றலையின் சாற்றுற்
சாதகமாம் சாமம்ரண் டுகைவி டாமல்
சேர்த்தரைத்து வில்லைசெய்து வுலரப் போடு
செங்கலென்ற குகையில்வைத் துசீலை செய்து
பார்த்தாலே பன்றியென்ற புடத்திற் போடு
பருவமா யாறியபின் னெடுத்துப் பாரு
நீற்றுகும் நீற்றதனை யெடுத்துச் கொண்டு
நினைவுடனே முன்போலே யரைத்துத் தீரே. 255

தீர்ந்த பின்பு பில்லைசெய்து ரவியிற் போடு
செயமாக முன்போலே புடத்தைப் போடு
ஆர்ந்தபின்பு ஆறியெடு புடந்தா னஞ்சி
லாதியென்ற பவளவண்ணமாகும் பாரு
சேர்ந்ததொரு செந்தூரஞ் செப்பில் வைத்துத்
தேவிபதம் பூசைசெய்து செப்பக் கேளு
பேர்ந்ததோ ரெந்தெந்த நோய்க்கெல் லாந்தான்
போடப்பா பணவெடைதான் புதுமைகேளே. 256

புதுமைசென்ற செந்தூரந் தேனிற் கொள்ளப்
போகுமடா குன்மமென்ற வாய்வு குட்டங்
கதுமையென்ற நெய்யிலே கொண்டா யானற்
கனதைபெற்ற வுட்சுரங்கள் காணு தோடும்
புதுமையுள்ள பச்சைவெண்ணெய் தன்னிற்கொண்டாற்
போகுமடா வுடம்பிலுள்ள வறட்சி யெல்லா
மதுமையென்ற சீரகத்தைக் கியாழஞ் செய்து
வாகாகக் கியாழத்திற் கொண்டா யானல். 257

கொண்டிடவே நெஞ்செரித்த பித்தந் தீருங்
குறுந்தொட்டி வேரதனைக் கியாழஞ் செய்து
நண்டதனிற் கொண்டிடவே வாதந் தீரும்
நல்லவிஞ்சிச் சாறதனிற் கொண்டாற் கேளு
பண்டுடைய வாதமொடு சுரமுந் தீரும்
பருத்தமுலைப் பாலதனிற் சன்னிதீரும்
பெண்டுகட்கு வெள்ளையுள்ளித் தைலந் தன்னிற்
பேணியே கொண்டிடவே யறுமூலம் போமே. 258

ஆறுன மிளகுநீர் தன்னிற் கொள்ள
வணுகாது சுரமிரும லற்றுப் போகுங்
கூறுன சுக்குகியா ழத்திற் கொள்ளக்
குணமாகுஞ் செரியாமை பொருமல் வாய்வு
நூறுன தூதுவளை கண்டங் கத்திரி
நுணுக்கமுள்ள விட்டவியல் நுகந்தாற்கேளு
பேறுன சயமிரும லிளைப்பு கக்கல்
போகாதே யோடுமடா பின்னே கேளே. 259

பின்னையென்ற வெள்ளாட்டின் பாலிற் கொள்ள
பேரான வயிற்றுளைச்சல் கடுப்புப் போகு
மன்னையென்ற பிள்ளைகட்குக் கணரோ கணத்தை
வடுத்ததோர் வியாதிக்க னுபானங் கேளு

தன்னையன்ன வல்லாரை மாதளை தூதளையுந்
தானென்ற குடிநீரிற் சாந்த மாகு
மின்னமென்ன பனைவெல்ல மதனிற் கொள்ள
இடும்பான சூலைவகை யெல்லாம் போமே. 260

போமென்ற மேகவகை நீர்த ரிப்பும்
பிரமேகந் தீருமடா சஞ்சீ விதன்னி
லாமென்ற நீரிழிவு தீரக் கேளு
மாவாரைப் பஞ்சாங்க மதனிற் கொள்ளு
நாமென்ற கால்கைக ளுளைப்புத் தீர
நல்லாவின் பால்தனிலே கொண்டால் தீருந்
தாமென்ற கிரந்திவகை தீரச் சொல்வேன்
பழிக்கரையிற் கொண்டிடவே சாந்த மாமே. 261

ஆகுமே கிரிச்சரங்கள் தீர வென்று
லாதியென்ற திரிகடுகு திரிப லாதி
வேகுமே இளவறுப்பாய்ச் சூர ணித்து
வெள்ளையுள்ளி தைலத்திற் குழைத்துட் கொள்ளப்
போகுமே பாண்டுவகை சொல்லக் கேளு
பொற்கையான் திரிகடுகு பொடித்துத் தேனி
லேகுமே கொண்டிடவே வாத பித்த
மிதமான சந்தனத்தி லிட்ட போதே. 262

இட்டபின்பு பெரும்பாடு தீரக் கேளு
இதமான சாதிக்காய் கஞ்சாசூ ரணத்திற்
பட்டதோ ரெலும்புருக்கி தீர வென்றாற்
பத்திரியு மேலமொடு வால்மிளகு கிராம்பு
சுட்டதோர் நெய்யதனிற் கொள்ளத் தீருந்
தொண்ணூற்றுன கண்ணோ ய்க்கு
வட்டமுலைப் பாலதனிற் கொள்ளு கொள்ளு
வண்டுகடி யானதற்கு வகையைக் கேளு
தொட்டதொரு சிவன்வேம்பின் பொடியிற்கொள்ளச்
சுடுகரப்ப னுக்கருஞ்சீ ரகச்சூ ரணமே. 263

சூரணமாஞ் சுரந்தனுக்கு அனுபா னங்கேள்
சுக்குடனே பற்படகந் தூதளைபேய்ப் புடலுங்
காரணமாங் கண்டங்கத் திரிதோடை நிலவேம்புங்
கனத்தமுத்தக் காசுடனே கியாழத்திற் கொள்ள
வாரணமாஞ் சுரங்களறு பத்து நாலு
மளவற்ற கபமிரும லகலும் பாரு
மாரணமாங் கால்பிடிப்பு கைபிடிப் புக்கு
வளமான காட்டுவகை மருந்து கேளே. 264

மருந்தென்ன வமுக்கருவுஞ் சீனப் பாவும்
வாகான சித்திரமூ லத்தின் வேருந்
திருந்துசீ ரகமுஞ்சூ ரணித்துத் தேனிற்
றின்றிடவே கட்டெல்லாந் தெரிந்து போகு
மருந்தவே குட்டமொடு குறைநோ யுக்கு
மரிதான சேங்கொட்டை தைலத் திற்கொள்
இருந்ததோர் பீநிசமு மண்டைச் சூலைக்
கெண்ணெயிலே குழைத்துநீ விழுங்கு வாயே. 265

விழுங்கவே யானந்த வாய்வுக் குத்தான்
மேலான வெள்ளையுள்ளி யரைத்து ருட்டி
விழுங்கவே கடுப்புக்கு மாதளங்காய் வித்து
மிகவரைத்து விழுங்கிடப்போ மதிசா ரந்தான்
ஒழுங்கான சுக்குடனே நெல்லி முள்ளி
யோமமுடன் சீரகத்தி லுரைத்துக் கொள்ளு
மழுங்கவே நோய்களெல்லா மகன்று போகு
மாதிரத்தின் நவலோகத் ததீதங் காணே. 266

கட்டினங்களுக்குப்பால்மெழுகு

காணவே சேதியொன்று சொல்லக் கேளு
கழுதைப்பால் யெருமைப்பால் பசுவின் பாலுந்
தோணவே செம்மறிப்பால் வெள்ளாட் டின்பால்
சுத்தமுலைப் பாலுடனே பன்றிப் பாலும்
பேணவே நாய்ப்பாலுங் குதிரைப் பாலும்
பேரான வத்திப்பா லரசின் பாலும்
பூணவே யாலின்பா லத்திப் பாலும்
புகழான வெருக்கின்பால் புங்கின் பாலே. 267

பாலான கள்ளிப்பால் ஆதளை யின்பால்
பருத்ததோர் தில்லைப்பால்மாம்பா லோடு
நாலான நத்தையின் சிப்பிப் பாலும்
நண்டின்பால் பிராயின்பால் சதுக்ரகள்ளி
கோலான குண்டலிப்பா லிறுவெல் லாந்தான்
கொண்டுவந்து வகைக்குழக்காய்க் குறுகக் காய்ச்சில்
சாலவே மெழுகாகு மதனை வாங்கிச்
சார்வான குகையாகச் செய்து கொள்ளே. 268

குகைக்குள்ளே வைத்துருக்கு நாகங் கட்டுங்
கூருன காரீயங் குமுறிக் கட்டும்
பகைத்ததோர் வெள்ளீய நீரை வாங்கும்
பரிவான பாடாண முருகி யாடுஞ்

செகத்திலே ரசமப்பா சீருமற் கட்டுஞ்
சிவமான சாதிலிங்கஞ் சிவந்து நீறும்
மகத்தான வுப்பதுதான் மணிபோ லாடு
மஞ்ச ளென்ற கெவுரியது மலைபோ லாமே. 269

மலையான வரிதாரம் வங்க மாகு
மகத்தான தாம்பிரத்தி னூறல் போகு
முலையான விரும்பதுதா னுருகி யாடு
முலகத்தி லிந்தவகை யுண்டோ வில்லை
சிலையான குகையதனை மண்குகையில் வைத்துச்
சிறப்பான வெண்காரங் கீழ்மே லிட்டு
புலையாமல் மேல்முடிச் சீலை செய்து
புகழ்ந்துருக்கச் சரக்கெல்லா மணியாய் நிற்கும். 270

நிற்கின்ற வகைவகை யாம் பாடா ணத்தில்
நேராகக்குணங்கண்டு வுலோகத் தூட்டி
சிற்கின்ற தங்கமிட்டுச் சூத மிட்டு
செந்தூர மாக்கியே வேதை பாரு
வொக்குமே பத்தரையுந் தப்பா தப்பா
வுண்மையாய்ச் சொல்லிவிட்டே னுலகத்
பக்குவமே யானுகச் செய்ய லாகும் [தோர்க்குப்
பாவிகளுக் கொருநாளும் பலியா தென்னே. 271

என்னசெந் தூரத்தி னங்கள் கண்டு
எடுத்தெடுத்த நோய்களெல்லாந் தீருஞ் சொன்
சொன்னமாஞ் செந்தூரங் கொண்டா யானுல் [னேன்
சுறுக்காகுங் காயசித்தி நரைதிரையும் போகு
மன்னவர்போ லிக்குருவுன் சவுக்கார மெய்து
மகத்தான பூநீறு இதற்கு யீடோ
கன்னமென்ற கன்னக்கோல் வாதத் துக்குக்
கறைக்கண்டர் தனையிதனுற் கட்டிக் கொள்ளே.
272

கட்டியதோர் துருசுதனை நீற்றக் கேளு
கற்சுண்ண மதனில்வைத் தமுரிவிட்டு நீற்று
பட்டிடவே கற்சுண்ண முறைக்கு நாழி
பத்துமுறை நீற்றியதைப் பருவஞ் செய்து
முத்தியதோர் நாகத்திற் பாடா ணமிட்டு
முறையாக வறுத்ததனை வெளுக்க நீற்று
தொற்றியதோர் வெண்கருவால் மேற்கவசஞ் செய்து
செயமான வுவர்மண்ணைக் கீழ்மேல் வையே 273

வைத்ததன்மே லண்டநீர் கிண்ட விட்டு
வாகான வோடுமே லோடு மூடி
கைத்ததன்மேற சிலைசெய்து புடங்கோ ழியாக்கிக்
கலந்துதீ யாறியபின் னெடுத்துப் பாரு
மொய்த்ததொரு பூப்போலே வெளுத்து நீறு
முனையான நீறுதனைப் பதனம் பண்ணு
தைத்ததொரு செந்தூரந் ஞுதலஞ் செய்து
தடையறவே கழஞ்சிகுரு தாக்கிக் கொண்டே.274

கொண்டதொரு செந்தூரங் கொண்டோர் மெத்த
கொடுமைசெய்யும் நோய்களுக்குக் கூற்ற னாகும்
விண்டதே பூநீறு யில்லா விட்டால்
விதமான துரிசிநீறு வேணும் வேணும்
கண்டருட நீறதனிற் சூதங் கட்டுங்
காசினியிற் சூதமது கவன மாகும்
தண்டான சூதமது செந்தூ ரந்தா
னலமான வேதையுள்ள கற்ப மாமே. 275

கற்பமென்ன பற்பமென்று சொன்ன யானல்
காசினியிற் கடைநெட்ட கழுதை சென்மம்
சொற்பமென்று யோகத்தை விட்டா யானல்
கணங்களென்ற சென்மமவன் மனித னல்ல
நிற்பமென்று மனமுறைந்து யோகம் பார்த்து
நினைவாலே சாத்திரத்தைக் கண்டு தேறி
விற்பனமாங் கற்பமுண்டு தீட்சை பெற்று
மேதினியி லிருப்பவரோ சித்த ராமே. 276

சித்தென்ன யோகமென்ன வென்ற யானற்
செடத்தோடே கயிலாயந் தெரிசனமா மப்பா
செத்ததனற் பலனென்று மில்லை யப்பா
செடமல்லோ சிவமாச்சு கயிலா யமாச்சு
சுத்தென்ன கன்மமென்ன ஞானம் வந்தால்
காசினியிற் கோபமல்லோ கன்ம மாச்சு
வித்தென்ன கெர்வமது கோப மாச்சு
மெய்யான மோட்சமது தண்மை யாமே. 277

தண்மையல்லோ ஞானத்துக் காதா ரமாச்சு
சாந்தமல்லோ யோகத்தின் சார்வு மாச்சு
உண்மையெல்லாம் ஞானத்துக் கொடுக்க மாச்சு
வுரப்பான சடலமல்லோ மகத்தாம் வீரம்

வண்மையல்லோ ஞானமென்ற தான மப்பா
மகத்தான பெரியோரைப் பழிப்பார் மாந்த
ரண்மையல்லோ பூரணமாய் நின்ற மார்க்க
மாதிமுதற் கற்பமடா வறிந்து கொள்ளே. 278

அறிந்துகொள்ளச் சேதியொன்று சொல்லக் கேளு
அரிதார மைங்கழஞ்சு வெள்ளை யஞ்சு
செறிந்தாகு சாதிலிங்க முக்க ழஞ்சு
திறமான கெவுரியது யிருக ழஞ்சு
பிறிந்தமனே சிலைகழஞ்சு கெந்தி யொன்று
பேரான துரிசுதுத்தங் கழஞ்சு கூட்டி
முறிந்தகருஞ் சீரகமுங் கழஞ்சு நாலு
முழுவெள்ளைக் குந்திரிகங் கழஞ்சி யொன்றே. 279

ஒன்றான மிளகுடனே கடுகவ் வீத
முறைப்பான காரீயங் கழஞ்சி ரண்டு
பன்றான சூதமது கழஞ்சி ரண்டு
பரிவாக வுருக்கியதிற் சேர்த்துக் கொண்டு
நன்றான மருந்தெல்லாஞ் சுத்தி செய்து
நலமான குழிக்கல்லி லொன்றாய் விட்டு
கன்றாம விதையரைக்கச் சாறு கேளு
கரிசாலை மேனியொடு பருத்திச் சாறே. 280

சாறுவிட்டு முச்சாறு மூன்று சாமந்
தனிலரைத்து யேழுபில்லை தட்டிக் கொண்டு
வீறுடைய வெயிலில்வைத் துக்காய்ந் தபின்பு
வெந்தணலில் வில்லைவிட்டுப் புகையைக் காட்டு
ஆறுபொழு தும்புகைத்து நீரில் மூழ்கு
அதன்பிறகு வோருண்டை புகைத்துத் தீரு
கூறுடனே மூன்றுநாள் நீரின் மூழ்கக்
குவலயத்தில் சூலையொடு குட்டந் தீரும். 281

தீருமே கிரந்தியொடு கரப்பன் கட்குஞ்
செயலிங்கச் சூலையோடு யோனிச் சூலை
சாருகின்ற புண்புரைக ளெல்லாந் தீருந்
தனமாகு மோர்பாலுந் தயிரு மாகுங்
காருமே பத்தியந்தா னேழு நாளும்
கட்டாது வாய்தனிலே கண்டு பாரு
ஊரிலே யிருக்கின்ற புகையே செய்தா
லுறவான வாய்தனில்வெந் தழுகும் பாரே. 282

அழுகாம லொற்றடமொன் றுறைப்பேன் கேளு
ஆட்டினுட புழுக்கையொன்று கோழிமலமொன்று
ஒழுகாம லோந்தியொன்று பல்லி யொன்று
வுற்றுக்கே ளரணை யொன்று
நழுவாமல் முசிறினுட முட்டை யொன்று
நண்டொன்று தவளையொன்று நாஞ்சி யொன்று
வழுகாத வசம்பொன்று வுள்ளி யொன்று
வாழ்கடுகு சீரகமு மூல மாமே. 283

மூலமென்ற சித்திரமூ லத்தி னேடு
முளகுசுக்கு மபினியொடு காயந் தான்றி
வால்மிளகு சன்னிநா யகமுங் கூட
வகைகழஞ்சு வீதமடா வைத்துக் கொண்டு
யேலவே கட்டிதனில் வேப்பெண்ணெய்யோடு
இயல்பான நல்லெண்ணெய் ஆமணக்கி னெண்
சாலவே தேங்காயெண்ணெய்யாக நாலுந் [ணெய்
தான்வகைக்குச் சட்டியினிற் காற்படியாய்வாரே.

வார்த்துடனே மருந்தையெல்லாங் கிழியாக் கட்டி
வைத்தந்த யெண்ணெயிலே கொதிக்கும் போது
ஏர்த்தந்த யெண்ணெயிலே பச்சை நாற்ற
மெடுத்ததென்று கண்டவுடன் கிழியை வாங்கி
பார்த்தந்தச் சரீரத்தி லுச்சி தொட்டு
பதைப்புகள்தோ றுங்கிழியைப் பதித்தா யானல்
காத்ததோர் சன்னிவகை காணு தோடும்
கால்முடக்கு வாதமெல்லாங் கடலிற் புக்குஞ்
சீற்றமுள்ள வலிகளைந்துஞ் சிதறிப் போகுந்
திறவாத வாய்திறந் தியக்க மாமே. 285

தியங்காமல் மூலத்திற் சேதி கேளு
சிவமான கடுக்காய்தா னூறு வாங்கி
மயங்காமல் வெள்ளாட்டின் நீரில் இட்டு
மயமாக வலித்ததனை வாங்கிக் கொண்டு
சாதகமாய் மெழுகானல் விதையைத் தள்ளு
முயங்காமற் சிவதையதிற் பலந்தா னென்று
முதுமையுள்ள நன்னரிக் கிழங்கொன் ருமே. 286

கிழங்கானவெண் தோன்றிக்கி ழங்க தொன்று
கிருபையுள்ள சாரணையின் கிழங்க தொன்று
வழங்குகின்ற பாலதனிற் சுத்தி செய்து
வாகாக வுலர்த்தியே யிடித்துத் தூளாய்க்

கனங்கமற வடிகொண்டு வெள்ளாட் டின்பால்
காய்ந்தாண்டு படிதனிலே சூரணத்தைப் பாய்ச்சு
இளம்பதமாய்ப் பாகுசெய் தொரு பலஞ் சர்க்கரையை
இயல்பாகத் தூற்றியே கிண்டு கிண்டே. 287

கிண்டியே வெள்ளாட்டி னெய்படி தான்வாரு
கிருபையுள்ள தேனதிலே கால்படிதான்வாரு
சுண்டியே மெழுகதுபோற் பதமாம் பாரு
சுறுக்காகப் பீங்கானிற் பதனம் பண்ணு
மண்டியுள் மூலம்புற மூலத் தோடு
மாறுவகை மூலமெல்லா யகல வென்றால்
கொண்டுவிடு கழஞ்சிரண்டு நாளொன் றுக்குக்
கூசாமலிரு நேரந் தின்றி டாயே. 288

தின்றிடவே யறுமூல கருமந் தீருந்
திறமான மூலசல மிரத்தந் தீருங்
கன்றிடவே மூலத்திற் றினவு புண்கள்
கனமான வாய்விரைச்சல் கழிச்ச லோடு
கொண்டிடவே தீராத கிராணி மூலங்
கூழ்ப்புச்சப் புறத்தில்நின் றமுளைமூ லந்தான்
வின்றிடவே கிராணியென்ற தெல்லாந் தீரும்
விம்மிநின்று மலங்கறுக்கும் விரணம் போமே. 289

விரணமாங் கடுப்போடு காந்தல் தீரும்
வேணுமென்ற கிராணியெல்லாம் விடுபட்டோடுந்
தருணமாந் தாதுபிலந் தானுண் டாகுந்
தருவான கந்தாதி லேகி யந்தான்
மரணமது வில்லாத கற்பம் போலே
மண்டலந்தான் கொண்டிடவே நோய்கள்வாரா
சரணமென்ற பேதியுள்ள வனுபா னங்கள்
தானறிந்து கொள்வதற்குச் சத்திய மெண்ணே.290

சத்தியமே வேணுமடா மனித னுனல்
சண்டாளஞ் செய்யாதே தவறு காது
நித்தியகன் மந்தப்பா தேநேமம் மறவாதே
நிட்டையொடு சமாதிவிட்டு நிலைபே ராதே
பத்தியனுட் டானத்தில் பங்க மில்லாதே
பதற்றமின்றிச் செய்நாளும் பூசைமறவாதே
கத்தியதோர் தர்க்கமிட்டுத் தள்ளி டாதே
கன்மியென்றே நடவாதே கதிவேண்டுங் காலே.291

காலென்ற விடகலையிற் கருத்தை வைத்துக்
கழியும்நா லங்குலத்தா லதனைக் கட்டிப்
பாலென்ற சந்திரனும் பாலை யுண்டு
பசியாமற் சமாதியிலே பரிந்து நில்லு
தோலென்ற சேடமதுதான் கல்லுகல்லு
சுகாதீதச் சித்தனென்ற சொல்லு மாச்சு
நூலொன்றுந் தப்பாமல் வழங்கிப் போச்சு
நுணுக்கமுள்ள கருக்களெல்லாந் துலக்க மாச்சே. 292

ஆச்சென்ற சித்தியெல்லாந் தீட்சை யாலே
அதிகமுள்ள கருவெல்லாம் வூனத் தாலே
போச்சிந்தச் சென்மமிது கற்பத் தாலே
பொருந்தவே யாமுரைத்த பத்தி யாலே
காச்சந்தப் பிராணயா மக்கரு வினலே
கனதைபெற்ற மேருவென்ற பூசை யாலே
நீச்சென்ற சமுத்திரத்தை நீந்தியேறி
நிலைத்ததப்பா சிவக்கியான நிலைமை தானே. 293

தானென்ற நாடிநிலை யறிய வேணுஞ்
சடத்திலுள்ள நோய்க்குணங்க ளறிய வேணும்
வானென்ற மருந்தினங்க ளறிய வேணும்
மருந்திடனுட் பமதறிந்து வைக்க வேணும்
நானென்ற வாங்கார நிவர்த்தி வேணும்
நலமாக வடுகனுட பூசை வேணும்
கோனென்ற குருவினுட பாதம் போற்றி
குணமாக நடந்தவனே குருபுத்திரனுமே. 294

புத்திரனே யின்னமொரு நெய்தான் கேளு
பூலாத்தி வேருடனே பூங்கதலிப் பிஞ்சு
மத்தியின் பிஞ்சுடனே முத்தக் காசு
மகத்தியிலை வெண்காயச் சாறு நெல்லி
சத்திச்சா ரணைவேருந் தூதுளையின் வேருந்
தருவான மலைதாங்கி தக்கா ளிவில்வஞ்
சித்தியுள்ள வல்லாரை கரிசாலை யோடு
சிறுநெருஞ்சில் பெருநெஞ்சில் சிறுபுள் ளடியே. 295

அடியான செருப்படையுஞ் சிறு கீரைதானும்
ஆம்பலொடு குளிர்கொட்டி நெய்தற் கிழங்குஞ்
செடியான கண்டங்கத் தரியி னேடு
சிறுமுருங்கை நறுந்துளசி செந்நா யுருவி

கடிதான மூக்குரண்டி செங் கழுநீர்க் கிழங்குங்
கருதுநில வேம்புசிறு காஞ்சுரையின் பிஞ்சும்
படியான குறுந்தொட்டி ஆடா தோடை
பருத்தியின் பிஞ்சுடனே நெய்தற் பூவே. 296

பூவான பொடுதலையும் பிரமி தானும்
புகழும்நறு நிண்டியோ ரிதழின் மூலங்
காவான செந்தொட்டி கன்னிசிறு பீளை
கனத்தாலின் விழுதுடனே கஞ்சா கொன்றை
நாவான முது வன்னி பசளைகுழி மிட்டான்
நலத்தவம்மான் பச்சரிசி விஷ்ணு மூலி
தேவான கரந்தையொடு பழம்பா சியுடனே
சிவந்திருந்த விலந்தையதின் தம்பல முமன்றே. 297

பலமான மூலிகைதான் வகையென் றுக்குப்
பலமொன்றோர் பலத்துக்கோபடிநீர் விட்டு
சலமான வெட்டொன்றாய் வற்றக் காய்ச்சி
சலத்துக்கு நாலிலொன்று நறுநெய் சேர்த்து
குணமான வதிமதுரங் கோட்ட மேலங்
குரோசானி குந்திரிக்கம் நறுக்கு மூலம்
பிலமான திரிகடுகு திரிப லாதி
பேரான வதிவிடயஞ் சரக்குவ கையாறே. 298

ஆறான வாமதலைக் கொம்புருத் திராட்ச
மதிமால் கெருடபச்சைசவ்வாதி ரதவேதி
கூறான மருந்துவகை கால்பலமாய் வாங்கி
குமுறவரை வெள்ளாட்டின் பாலை விட்டு
சேறாகக் கலக்கியதைப்பாகு செய்து
திரிநாளில் மெழுகுபதஞ் சேர வாங்கி
வாறான கணபதிக்குப் பூசித் தேதான்
மைந்தருக்கு காசெடைதான் வரிசை கேளே. 299

வரிசையாய்ச் சொல்லுகிறேன் கணங்க ளேது
மாந்தமொடு சுழிதுரப்பு வலிக ளேது
பரிசமாம் பறங்கியொடு கரப்ப னேது
பட்சியொடு பறவையுட தோட மேது
தெரிசனமாங் கண்களிலே வருவதேது
தீர்க்குமடா சிறுவருக்கு தேவாமிர் தமாகுங்
கரிசனமா யிந்நூலிற் கன்ம தன்மங்
கட்டானமருந்துவகைக் கணக்கு முற்றே. 300

முற்றும்